

அமரர் இரத்தினதீப

# திருமதி. ராஜேஸ்வரி நந்தகுமார்

அவர்களின் ஞாபகார்த்த வெளியீட்டு மலர்

# இந்துக்களின் கிரியைகளுக்கான வழிக்காட்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# இந்துக்களின் கிரியைகளுக்கான வழிக்காட்டல்

யாழ் - வடமராட்சி வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும்
கண்டியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் *இரத்தினதீப*

## திருமதி. ராஜேஸ்வரி நந்தகுமார்

(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த
ஞாபகார்த்த வெளியீட்டு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர் இரத்தினதீப

# திருமதி. ராஜேஸ்வரி நந்தகுமார்

அன்னை மடியில்

25

09

1946



இறைவன் அடியில்

14

05

2023

## திதி வெண்பா

ஆண்டு சோபகிருது அணிதிகழ் சித்திரை திங்கள்
சனி வாரம் அபரபக்ச நவமியில் அமிர்த யோக
அதிகாலை வேலையில் - நீண்டபுகழ்
ராஜேஸ்வரி ஏமமுற வெம் பிறவி நீக்கி
விண்ணுலகமடைந்தார்.

## திதி

சித்திரை மாதத்தில் பௌர்ணமிக்குப்பின் வரும்
அபரபக்ச (தேய்பிறை) நவமி அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சமர்ப்பணம்

ஆண்டவன் பாதங்களே சரணம் என்று
எங்களை விட்டுப் பிரிந்து சென்ற
எங்கள் இதய தெய்வமே!
- உங்கள் உறவு - அந்த அன்புள்ளம் -
இப்பிறப்பில் நாம் செய்த பாக்கியமே! -
எப்பிறப்பிலும் மனதில் அழியாத சொத்து
- உங்கள் பிரிவு -
வார்த்தைகளால் வடிக்க முடியாத சோகம்
சொல்லி அழுதாலும் தீராத தாகம்
- எங்கள் நிறைவு -
எங்கள் நெஞ்சங்கள் இருக்கும் வரை
உங்கள் நினைவுகள் உதிராது இருக்கும்.
புனிதமாம் இந் 'நினைவு மலரை'
உங்கள் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்து
- விழிகளில் நீர் ஏந்தி -
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனிடம் இறைஞ்சி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



**பாசமிகு அப்போசலர் (கணவர்), மகன்மார்கள், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும்
உற்றார் உறவினர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

இலங்கைத் திரு நாட்டின் புகழ் பூத்த பூமியான வந்தோரை வாழ வைக்கும் வடமராட்சிப் பகுதியில் நீர் வளமும் நில வளமும் மிக்க பருத்தித்துறை நகரில் கல்வியும் - புகழும், தமிழும் - சைவமும் தழைத்தோங்கிய வியாபாரி மூலை என்ற சிறிய கிராமத்திலே பிரபல்ய வர்த்தகர் செகநாதபிள்ளை இரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி 1946ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25ம் திகதி ராஜேஸ்வரி அவர்கள் பிறந்தார். இவர் மூத்த இரு சகோதரிகளான சரஸ்வதி, ராஜலட்சுமி ஆகியோருடனும் சகோதரனான உலகநாதபிள்ளை அன்பாக, பண்பாக சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார்.

இவர் தன் ஆரம்பக் கல்வியை மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்பித்து மேற் கல்வியை வட இந்து மகளிர் கல்லூரியில் பயின்றார். சிறு வயதிலே கல்வியில் சிறந்து விளங்கிய இவர் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பினை பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பீடத்தின் தமிழ்த்துறையில் சிறப்புப் பட்டமாக பெற்றுக் கொண்டார்.

1970ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ம் திகதி மூதூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் பணியை ஆரம்பித்தார். அங்கு இயல்பான தன் திறமையாலும் தைரியத்தாலும் முதன் முதலாக பல மாணவர்களை திறம்பட படிப்பித்து பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற வைத்து சாதனை செய்தார். ''செய்யும் தொழிலே தெய்வம்'' - என்பதற்கிணங்க சைவ சமய சாஸ்திரங்களிலும் ஆன்மீகத்திலும் பற்றுள்ள இவர் தன் ஆசிரியர் பணியை எவ்வித குறையுமின்றி செய்து வந்தார்.

இவ் வேளையில் 1976ம் அண்டு செப்டெம்பர் மாதம் 10ம் திகதி அவரது திருமண நன் நாளாக அமைந்தது. வியாபாரி மூலையில் புகழ் பூத்த குடும்பமாகிய முதலியார் இ.க. வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதிகளின் இரட்டை புதல்வர்களில் ஒருவரான, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற விரிவுரையாளர் வை. நந்தகுமார் அவர்களை மணம் முடித்து இல்லற வாழ்வை இனிதே நடாத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளம் கொழிக்கும் கண்டி மா நகரில் முறுத்தலாவ அல் அஷார் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் பணியை மீண்டும் தொடர்ந்த இவர் அப்பாடசாலையிலும் முதன் முதாலக பல மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு தகுதி அடையச் செய்தார். அன்பாலும் பண்பாலும் சீரான கல்வியைச் சிறப்பாக போதிப்பதில் அவருக்கு நிகர் அவரே. கண்டி உயர்தர மகளிர் பாடசாலையில் தனது சேவையை மேலும் சிறப்பாக செய்தது மட்டுமன்றி பல மாணவிகளை O/L, A/L பரீட்சையில் திறமைச் சித்திகள் அடைய வைத்தார். அது மட்டுமன்றி பாடசாலை மட்டம். தேசிய மட்டம் என பல தமிழ்த் தின போட்டிகளில் பங்கேற்க வைத்து பரிசில்கள் பலவற்றையும் பெற வைத்தார்.

1981ம் ஆண்டில் விரிவுரையாளர் பணியுடன் உயர் கல்வியின் நிமிர்த்தம் யப்பான் புலமைப் பரிசில் பெற்ற அவரது கணவர் யப்பானுக்கு சென்றமையால் அவருடன் துணையாக இவரும் 1982ம் ஆண்டு தமது இரு புதல்வர்களான தனஞ்ஜெயன் மற்றும் சஞ்ஜீவன் ஆகியோருடன் யப்பானுக்குச் சென்றார். அங்கு தன் பிள்ளைகளின் ஆரம்பக் கல்வியைச் ஆரம்பித்து தமிழ் மொழியையும் தமிழ் கலாசாரத்தையும் யப்பான் வாழ் மக்களுக்கும் ஊட்டினார் என்ற பெருமையை சேர்த்துக் கொண்டார்.

தாய் மண்ணில் கொண்ட பாசத்தால் 1984 இல் இலங்கை திரும்பிய இவர் யாழ் பருத்தித்துறை மெதடிஸ் உயர்தர பெண்கள் பாடசாலையில் ஆசிரியராக கடமை ஏற்றுக் கொண்டார். பின்னர் அதிபர் சேவை பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று அதே பாடசாலையில் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். யாழ் மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையின் புலம் பெயர் பழைய மாணவிகள் பலர் இன்றும் அவர் மேல் வைத்துள்ள மதிப்பும் மரியாதையும் விலைமதிக்க முடியாதவை.

அதிபர் சேவையை செவ்வனே செய்த அவர் மீண்டும் கணவரின் விருப்பத்திற்கமையவும் யுத்த சூழல் காரணமாகவும் கண்டி மா நகருக்கு கால் பதித்து க/ கலைமகள் மகா வித்தியாலயத்தில் அதிபராக பதவி ஏற்றுக் கொண்டார். அத்துடன் கல்வி மீது கொண்ட அன்பினாலும் ஆசையினாலும் Post Graduate Diploma in Education பாட நெறியை பயின்றது மட்டுமல்லாது திறமைச் சித்தியடைந்தாரென்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. அதைத் தொடர்ந்து கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பதவி ஏற்றுக் கொண்டார். O/L தரம் வரை உள்ள அப்பாடசாலையில் புதிதாக உயர் தரப் பிரிவொன்றை (A/L) ஆரம்பித்து அம்மாணவர்களை திறமையாகச் சித்தியடைய வைத்த சேவைக்கு ஈடு இணையில்லை. மேலும் ஊரார் பிள்ளைகளை தன் பிள்ளைகள் போல் கல்வியிலும் வேறு துறைகளிலும் முன்னேற்றமடைய வைத்தவர் என்று பயன் அடைந்தோர் கூறும் போது எங்களுக்கு மிகவும் பெருமையாகவும் சந்தோசமாகவும் உள்ளது.

2017ம் ஆண்டு அதிபர் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அவர் இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) விரிவுரையாளராக கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார். கடைசி வரை கல்விக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்த அன்னையாக தன் நான்கு பிள்ளைகளையும் வெவ்வேறு துறைகளில் மிளிர வைத்தார்.

மூத்தமகன் தனஞ்ஜெயன் ரசியாவில் Computer Engineering பட்டப் படிப்பை முடித்துக் கொண்டார். பின்னர் அவருக்கு பிரபாலினியுடன் திருமணம் நடந்தேறியது.

இரண்டாவது மகன் சஞ்ஜீவனை ரசியாவில் மருத்துவத் துறையில் படிக்க வைத்து வைத்தியராக்கி மகிழ்ந்து வைத்தியர் சுஜிதா அவர்களை திருமணம் செய்து வைத்து பெருமிதம் அடைந்தார்.

கடைசிப் புதல்வன் ஜெயதர்சனை இந்தியாவில் Engineering in Bio Technology (B-Tech) உம் பேராதனை பல்கலைக்கழகத்தில் Msc B-Tech மேல் பட்டப் படிப்பையும் மேற்கொள்ள வைத்ததுடன் அஜந்தாவை திருமணம் செய்து வைத்தார்.

ஏக புதல்வியும் கடைசிச் செல்லப் பிள்ளையுமான ஜனனி அவர்களை இந்தியாவில் பல் மருத்துவ பட்டப் படிப்பை படிக்க வைத்து அரச மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் திறமைமிக்க பல் மருத்துவராகச் செயற்பட வைத்ததுடன் அதே துறையில் கடமையாற்றும் Dr. சஞ்சீவனுக்கு திருமணம் செய்து வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் நால்வரினதும் திருமண வாழ்க்கையின் பயனாக பேரப் பிள்ளைகள் பல கண்டு மன மகிழ்ந்தது மட்டுமல்லாது தன் மகளின் பேரப் பிள்ளைகளுடன் வாழ்ந்து அவர்களை அரவணைப்புடன் வளர்த்தும் வந்தார். கடைசிப் பேரப்பிள்ளைக்கு பெயர் சூட்டு விழா நடாத்தியதுடன் அவரை தன் கைப்பட வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் வாழ்ந்து வந்த இவர் எல்லாம் சிறப்பாக நடைபெறுவதை கண்டு களித்து மகிழ்வுடன் இருந்தார்.

அன்னார் 76வது வயதில் சுகவீனமுற்று சில மாதங்களின் பின்னர் 14.05.2023 அன்று தமது கடமைகளை முடித்து விட்ட மன நிறைவோடு இறைவன் திருப்பாதங்களை இறுகப்பற்றி எமது ஹிந்தகல இல்லத்திலிருந்து எம்மை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தி இறைவனடி எய்தினார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்தித்துக்-கொண்டு எல்லோர் மனமும் அமைதி பெறுவோமாக. - பகவான் ஸ்ரீ கிருஷ்ணனின் கீதாசார நினைவுகளுடன்,

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் பூர் புவஹ ஸ்வஹ
ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நஹ பரசோதயாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பஞ்சபுராணம் | 01 - 05 |
| 02. | சுப கிரியைகள் பற்றிய விபரங்களும் விளக்கங்களும் | 06 - 30 |
| | (i) வீட்டுக் கிரியைகள் | 10 - 13 |
| | (ii) திருமணக்கிரியைகள் | 14 - 25 |
| | (iii) ஏனைய கிரியைகள் | 26 - 30 |
| 03. | அபரக் கிரியைகள் பற்றிய விபரங்களும் விளக்கங்களும் | 31 - 38 |
| 04. | சிராத்தக் கிரியைகள் | 39 - 47 |
| 05. | இந்துக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிறப்பு, மரண ஆசௌச காலங்கள் | 48 - 64 |
| 06. | பஞ்சாங்கம் | 65 - 70 |
| 07. | எண்கணித ஜோதிடம் | 71 - 76 |
| 08. | வாஸ்து சாஸ்த்திரம் | 77 - 86 |
| 09. | வாழ்க்கை நெறியை கற்று தரும் திருமந்திரம்... திருமூலர் | 87 - 91 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.

# பஞ்சபுராணம்

## *விநாயகர் துதி*

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா

## *தேவாரம்*

மந்திரமாவதும் நீறு வானவர் மேலதும் நீறு
சுந்தரமாவதும் நீறு துதிக்கப்படுவதும் நீறு
தந்திரமாவதும் நீறு சமயத்தில் உள்ளதும் நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

## *திருவாசகம்*

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருகிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குத்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
ஏங்கெழுந் தருளுவ தினியே

## *திருவிசைப்பா*

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூள் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண் மணிக்குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே

## கந்தபுராணம் / வைரவர் வாழ்த்து

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவி சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுது மென் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட முடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அறங்கயிற்றாற் கட்டி
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயில் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ராமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுக்கும் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் மொளியானே
நீரா யுரக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பரக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகிஅ யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொழியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொழியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெள்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனேம் மையா அரனேயோ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானை சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. சுப கிரியைகள் பற்றிய விபரங்களும் விளக்கங்களும்

## கிரியைகளின் பங்கு

### விநாயக குரு வழிபாடு

உலகங்கள் யாவற்றிற்கும் முதற் காரணமாகிய பொருள் பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்கும் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர். (வி = இல்லாத நாயகர் = தலைவர், அதாவது தமக்கு மேல் ஒரு தலைவரில்லாதவர், மேலான தலைவர் எனப் பொருள்படும்.) எனவே முதற் செய்யப்படும் கிரியை விநாயகர் வணக்கம். இது கிரியை இனிது நடந்து முடிவுற முதல்வனை வணங்குதல் ஆகும். குரு, சமயக் கிரியைகளுக்கெல்லாம் தலைவராதலாலும் அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவையும் வழிபடுவர். (கு = மலம், ரு = நீக்குபவர்) சந்தனம், மஞ்சள் அல்லது கோமயம் (பசுச்சாணம்) இவற்றில் ஒன்றில் பிள்ளையாரை உருவாக்கி அறுகம்புல்லை அவருக்கு வைத்து வணங்குவது வழக்கம்.

### *பவித்திரமணிதல்*

பவித்திரமாவது மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு மோதிர அணி விரலில் அணியப்படுவது இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றுங் காத்தல்.
(பவித்திரம் - பதனாத் த்ராயதே பாவத்திலே விழுதலினின்றும் காப்பது - காமிகாமம்)

### *சங்கற்பம்*

சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது இன்ன காலத்திலே, இன்ன இடத்திலே, இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழும் படைப்புத் தொடக்கத்திலிருந்து அன்று வரையும் உள்ள காலம் இதில் குறிக்கப்படுவதால் காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கற்பம் முறை*

வலது கையில் தருப்பை, பூ, மஞ்சள் அரிசி (அட்சதை) முதலியவற்றை வைத்துக் கொண்டு வலது கையை மேலாகவும், இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி வலது முழந்தாளில் வைக்க வேண்டும்.

*சங்கற்ப வாக்கியத்தின் கருத்து*

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரம்மாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராக கற்பத்தில் வைவஸ்வதமந்வன் தரத்தில் இருபத்தெட்டவாது சதுர்யுகத்திற் கலியுகத்தின் முற்பகுதியில் சம்பூத்துவீபத்தில் பாரத வருஷத்தில் பரத கண்டத்தில் மேருவுக்குத் தெற்கே (இடத்தின் பெயர்) பிரபல முதலான அறுபது வருஷங்களுக்குள் (இன்ன) வருடத்தில் (இன்ன) சமயத்தில் - (இன்ன) பருவத்தில் - (இன்ன) மாதத்தில் - (இன்ன) பட்சத்தில் - (இன்ன) திதியில் வாரத்தில் நட்சத்திரத்தில் - (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான கரணமுள்ளதாய் விசேட குணத்தோடு சேர்ந்த இந்த புண்ணிய தினத்தில் மம (என்னுடைய) - (இன்ன) நோக்கமாக (இன்ன) கிரியை செய்யப் போகிறேன்.

*கும்பம் வைத்தல்*

கடவுளைக் கும்பத்தில் வழிபடும் போது, கும்பம் உடம்பின் பாவனையாகக் கருதப்படுகின்றது. வாழையிலையை அதன் தலைப் பகுதியை வடக்கு அல்லது கிழக்குப் பக்கமாக வைத்து அதில் நெய் அல்லது பச்சை அரிசி இட்டு, தண்ணீர் நிறைந்த குடம் வைத்து ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மாவிலைகளுக்கு மேல் தேங்காயைக் குடத்தின் மேல் வைத்து கும்பம் வைக்கலாம். கும்பத்திற்கு நூல் சுற்றி ஒரு பட்டுப் போர்த்தல் வேண்டும். தேங்காய் தலையாகவும், மாவிலைகள் தலை முடியாகவும், குடம் தசையாகவும், நூல் நாடிகளாகவும், பட்டு தோலாகவும், தண்ணீர் இரத்தமாகவும் கருதப்படுகின்றது. கும்பத்திற்குள் இரத்தினம் போடப்பட்டால் அது எலும்பாகப் பாவனை செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றாடக் கிரியைகளில் சில நடைமுறைகள்

*மாவிலை*

இது முக்கியமாக மங்களப் பொருளாகவும், தோரணமாகவும் கட்டப்படுகிறது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள் இல்லங்கள் திருமண வைபவங்களிலும் இம்மங்களப் பொருள் பயன்படுத்தப்படும். சகல வைபவங்களுக்கும் கும்பம் வைக்கும் பொழுது மாவிலை சடையாகப் பாவிக்கப்படுகின்றது. மாவிலை தோரணம் அமைக்கும் போது மூன்று முறையாகப் பயன்படுத்தப்படும்.

1. ***நற்காரியங்கள் :***



ஆலயங்களில் நடைபெறும் உற்சவம் விழாக்களிலும் திருமண மண்டபங்களிலும் வீடுகளில் சுப காரியங்கள் நடைபெறும் போதும் மாவிலைத் தோரணம் இலையின் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்தித் தொங்கவிடுதல் வேண்டும். இது மாவிலை தலை குனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும். (5, 7 அல்லது 9 இலைகளைக் குத்தலாம்) இது சுப காரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும் தகமையாகும்.

2. ***கும்பம் வைக்கும் போது :***



தேங்காயின் கீழ் மாவிலையை அமைத்தல் வேண்டும். இதில் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.

3. ***அபரக்கிரியைகளின் போது :***



இது வீட்டில் மரணச் சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறையாகும். மாவிலையின் காம்பு நுனியை பின் பக்கமாக மடித்துக் குத்தி தொங்கவிடல் முறையாகும். இது அபரக்கிரியை முறைக்கு மட்டும் உரியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைமரம்

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல் வேண்டும். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத் தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு, காய், பழம், பூ, கனி என்பவை உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் எப்படியோ அதேபோல் எல்லோரிடமும் இப்படியான பயனைப் பெறக்கூடிய நிலை வரவேண்டும். இதனை அழிக்கமுடியாது. இத வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழை மரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும்.

மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக்காட்டாக அமைகிறது. வாழைமரம் இலையில் பயன்படுத்தும் முறை : கும்பம் வைக்கும் போது தலை நுனிப் பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இதுமட்டுமல்ல சாப்பிடும் போது தலை நுனி, இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும். எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழை இலையின் தலைநுனி தெற்குப் பக்கமாகப் போடுதல் வேண்டும்.

## தென்னந் தோரணம்

தென்னங் குருத்து தோரணத்தின் நுனி கீழ்ப்பாகமாக இருக்கும் படியாக சுபகாரியங்களுக்கு அமைய வேண்டும்.



அபரக் கிரியைகளுக்கு மேற்பக்கமாக அமைய வேண்டும். தோரணத்தை வெட்டும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (i) வீட்டுக் கிரியைகள்

இந்து மதத்தவர்கள் கிரியை வழிபாடுகளிலும், சாஸ்த்திர சம்பிரதாயங்களிலும் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். அவை எமது ஆன்மாவையும், உடலையும் புனிதப்படுத்துகின்றன. உணவுகளை சுத்தப்படுத்தி நாம் உண்ணுவது போல எமது ஆன்மாவையும், உடலையும் பரிசுத்தப்படுத்தி இறைவனிடம் சேர்க்க, கிரியைகளும் சம்பிரதாயங்களும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்துமத வாழ்வில் செய்யப்படும் கிரியைகள் பூர்வம், அபரம் என இரு பகுதிகளாக நோக்கலாம். பூர்வக் கிரியையாவது ஒரு உயிர் கர்ப்பமாவது முதல் இறக்கும் வரை செய்யப்படும் கிரியைகளாகும். இவை நாற்பது ''ஸம்ஸ்காரங்கள்'' என்று கூறப்படும். ''ஸம்ஸ்'' என்பது நன்றாக என்றும், ''காரம்'' என்பது செய்யப்படுவது என்றும் பொருள்படும். அதாவது ஜீவாத்மாவை, பரமாத்மாவுடன் சேர்ப்பதற்காக நன்றாகச் செய்யப்படும் கிரியை எனப்படுகிறது.

அவற்றுள் கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், ஜாதகர்மம், நாம கரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், பிராஜாபத்தியம் முதலிய வேத விரதங்கள், சமாவர்த்தனம், விவாகம் பஞ்சமகாயக்ஞங்கள் என்பன சில முக்கிய ஸமஸ்காரங்களாகும். இவை யாவும், (அவற்றுள் சில பிராமணர்களுக்கு உரியது) பூர்வக்கிரியைகளில் அடங்கும்.

முதலில் செய்யப்படும் சமஸ்காரமான கர்ப்பதானம் என்பது (கர்ப்பம் - கரு, ஆதானம் உண்டாக்குதல்) ஒரு ஜீவனை (உயிரை) உண்டு பண்ணுதல் எனப்பொருள்படும்.



கர்ப்பம் உண்டானதில் இருந்து மூன்றாம் மாதம் அந்த ஜீவனின் நன்மை கருதி பும்சவனம் செய்யப்படும் என்பது பொது விதியாகும். இது ஆண் குழந்தை பெற வேண்டும் என்பதற்காக நடைபெறும். இதில் ஆலங்கொழுந்தை அரைத்துப் புது வெள்ளாடையில் வைத்து கட்டை விரலால் மனைவியின் வலது மூக்கில் விட வேண்டும் என்பது பும்சவன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியதியாகும். வலது பக்கம் ஆண் வலிமை அதிகம் இருப்பதால் இதன் முக்கியம் பெறுகிறது. தொடர்ந்து 6ம் மாதம் அல்லது 8ம் மாதம் நடைபெறும் சமஸ்காரம் சீமந்தம் எனப்படும். குற்றங்களைப் போக்க பன்றி முள்ளால் மனைவியின் வகிடு கீறுதல் சீமந்தம் ஆகும். வயிற்றில் உள்ள கர்ப்பம் (ஜீவன்) முழுமையான அங்கங்களுடன் நிறைவான உடல்பெற்று இருக்கும் பருவமாக ஆறாம் மாதம் கருதப்படுகிறது. ஆதலால் குழந்தையின் எந்த அங்கங்களும் குறைவுபடாமல் இருக்கவும். தாய் சுகப்பிரசவமாக நல்லறிவுக் குழந்தையை பெற்றெடுக்கவும் சீமந்தம் செய்யப்படுகிறது. இதில் கீதங்கள் பாடுதல், வளைகாப்பிடுதல் என்பன நடைபெறும்.

நற்குழந்தை பிறந்தவுடன் ஜாதகர்மம் செய்யப்படும். ஜாத - என்றால் பிறந்தவுடன் என்றும் கர்மம் - என்றால் செய்யப்படுவது என்றும் பொருள்படும். ஒரு குழந்தை பிறந்ததும் துஷ்ட தேவதைகளின் பாதிப்பு வரலாம் ஆதலால் அத்துஷ்ட தேவதைகளின் பாதிப்பு இல்லாமல் செய்வதற்காக தேவர்களின் ஆசி வேண்டி அக்னி வழிபாட்டோடு செய்யப்படும் கிரியையே ஜாதகர்மா எனப்படும்.

குழந்தை பிறந்து 10ம், 12ம் நாட்களில் பெயர் வைக்க வேண்டும் என மனுஸ் மிருதி சொல்கிறது. சிலர் 31ம் நாளிலும் பெயரிடுகின்றனர். ஜாத என்னும் கிரியை நாமகரணத்தோடு இக்காலத்தில் செய்வதும் உண்டு. பிறந்த நட்சத்திரத்தின்படியும், தெய்வாம்சம் பொருந்திய பெயராகவும், சந்ததிவழித் தோன்றல் பெயராகவும் அமைப்பது சிறப்பைத்தரும். குழந்தையின் பெயரை குழந்தையின் வலது காதிலே மூன்று முறை கூறி கற்கண்டு தண்ணீர் பருக்குவது முறை. சுற்றியுள்ளோருக்கும் இனிப்பு முதலிய உணவுகளை கொடுத்து மகிழ்வர். இந்நாளில் குழந்தைக்கு அரைஞாண் கட்டுதல், பஞ்சாயுத சங்கிலி, பஞ்சலோகத்திலான காப்பு, காற்சங்கிலி போன்றவை அணியலாம். அந் நகைகளை தகப்பன் அல்லது தாய்மாமன் மூலம் அணிவிக்கலாம்.



பிறந்த குழந்தைக்கு 11ம், 16ம், 21ம், 31ம் நாட்களில் ஆசௌசம் கழிக்க வேண்டும். தமிழில் துடக்குக் கழித்தல் என்பார்கள்.

துடக்கு கழிக்கும் போது வேதியரை அழைத்து பிள்ளையார் பூசை, புண்ணியாவாசனம் முதலியன செய்து பஞ்சகவ்யம் பருகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசௌசங்களை நீக்க வேண்டும். சுத்தப்படுத்திய வீட்டிலும் அவை தெளித்து தெய்வீகப்படுத்துவது வழமையாகும்.

இவ்வாறு தோஷம் நீக்கிக் குழந்தையை வெளியில் கொண்டுவருதல் ''உபநிஷ்க்ரமணம்'' எனப்படும். இது அநேகமாக 41ம் நாள் கோயிலுக்கு சென்று வழிபாடு செய்வதையே குறிக்கின்றது.



குழந்தை பிறந்து 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களில் காது குத்துதல் இன்று ஒரு சடங்காக நடைபெறுகின்றது. தமிழர் பண்பாட்டில் கடுக்கன் முக்கியமானதாக இருப்பதாலும், குழந்தைகட்கு அழகு சேர்க்கும் வகையில் இருப்பதாலும், இது செய்யப்படுகிறது. இதை கர்ணவேதனம், கர்ணபூஷணம் என்றும் அழைப்பர். தங்கத்தின் வழியாக பாயும் நீர் உடம்பு ஆரோக்கியத்திற்கு நல்லது. நல்ல நீர் உடம்பு ஆரோக்கியத்திற்கு நல்லது. நல்ல விஷயங்களை செவியின் உள்ளே செலுத்த வேண்டும். தீய விஷயங்களை உள்ளே செலுத்தாது துளை வழியாக வெளியே விடக்காது குத்தல் வேண்டும் என்பதை இத்துளை குறிக்கின்றது. இது குழந்தையின் துடக்குக் கழிவன்றும் செய்வதுண்டு.



குழந்தை பிறந்து ஆறாம் மாதம் முதல் 8, 10, 12 முதலான இரட்டை மாதங்களில் ஒன்றில் ஆண் குழூந்தைக்கும் ஐந்தாம் மாதம் முதல் 7, 9, 11ம் மாதங்களான ஒற்றை மாதத்தில் பெண் குழந்தைகட்கும் அன்னப் பிராசனம் செய்ய வேண்டும். இதை பால் பருக்கல், சோறு தீற்றுதல் எனத் தமிழில் அழைப்பர். இதில் உப்பு நீக்கிய சர்க்கரை அமுது அல்லது கற்கண்டு அமுது பொங்கி வழிபாடு செய்து சுபமுகூர்த்தத்தில் தங்க மோதிரத்தால் அவ்வமுதைத் தொட்டு தந்தை மூன்று முறை ஊட்டியும் மற்றோரும் ஊட்டி ஆசிர்வதித்தும் வாழ்த்துவார்கள்.

குழந்தைக்குப் பல் முளைக்க ஆரம்பிக்கும் போது பல்லுக் கொழுக்கட்டை அவிப்பதும் இன்று ஓர் சடங்காகிவிட்டது. இதைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மாமன், மாமி குழந்தையின் தலைமீது வெள்ளைத்துணிப் போட்டு ஒன்பது கொழுக்கட்டைகளைக் கொட்டி குழந்தைக்கு ஊட்டி மகிழ்தல் ஆகும்.



குழந்தை பிறந்து மூன்று அல்லது ஐந்து வயதில் வித்தியாரம்பம் அல்லது ஏடு தொடங்குதல் நடைபெறும். நவராத்திரி விழா முடிவான விஜயதசமியிலோ வேறு நல்ல நாளிலோ முதன் முதலாக கல்வி பயிற்றுவித்தலை இது குறிக்கும்.

சௌளகர்மா எனப்படும் கிரியையும் முக்கிய நிகழ்வாகும். முடி இறக்குதல் என்ற பெயரில் இது தமிழில் வழங்கப்படும். கோயில்களுக்குச் சென்று முடி இறக்குதலை இன்றும் காணலாம். உதாரணமாக திருப்பதி போன்ற இந்தியத் திருத்தலங்களும், முன்னேஸ்வரம், கதிர்காமம் போன்ற ஈழத்துத் திருத்தலங்களையும் குறிப்பிடலாம்.

குழந்தை பிறந்து ஏழுவயதில் (சூத்திரர் அல்லாத வர்க்கத்தினர்) உபநயனம் எனும் கிரியை செய்யப்படும். சிலர் 9, 11, 13 எனும் வயிலும் இதைச் செய்வதுண்டு.

உபநயனம் என்பது ஆன்மீக அறிவிற்கு மாணவனை குரு அழைத்து செல்லுதல் என்று பொருள்படும். உலகியல் பிறப்பு, ஆன்மீகப் பிறப்பு எனும் இரண்டைக் கொண்டதால் உபநயனம் செய்தவர்கள் இரு பிறப்பாளர் என்று சிறப்பிக்கப்படுகின்றனர்.

பெண் குழந்தை பிறந்து வளர்ந்து பருவமடைந்து தாய்மைக்குத் தகுதி உடையவளாக மாறும் நாள் பூப்படைதல் என்று கூறப்படும். இது 9 வயது முதல் 12 வயது வரையுள்ள காலப்பகுதியில் இடம்பெறும். இதுவே இன்று சாமர்த்தியச் சடங்கு என்ற பெயரில் நடைபெறுகின்றது.

பெண் பூப்படைந்து ஆசௌசம் கழியும் நாளில் சுத்தி புண்ணியாகம் செய்து, கும்பஜலத்தால் ''ஸ்நானம்'' செய்வித்து, கண்ணூறு கழியும் பொருட்டு, நிறைகுடம், நிறைநாழி, புட்டுக்கூம்பு, திருஷ்டி உருண்டை, குத்து விளக்கு போன்றவற்றால் ஆரத்தி எடுத்து திருஷ்டி கழிப்பது மரபு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ii) திருமணக் கிரியையகள்

மானிடப் பிறப்பு எடுத்ததிற்கு அர்த்த புஷ்டியாய், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நற்பயன்களை அடைவதற்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்வது ''திருமணம்'' என்ற இருமனம் இணையும் இனிய நாளாகும். விவாகம் எனும் கிரியை இந்து மதத்தில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

*"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய*
*மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை"*

எனும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க வாழ்வதற்கு விவாகம் என்பது முக்கிய பங்கு வகிக்கின்றது. விவாகம் என்பதற்கு சிறப்பாகச் சுமப்பது என்று பொருள் உண்டு. ''வஹ்'' எனும் வினையடி சுமத்தல் என்ற கருத்தைத் தருகிறது. ஆதலால் தர்ம காரியங்களைச் சுமந்து செய்ய வேண்டிய பொறுப்பு இந்த விவாகத்தில் நிச்சயிக்கப்படுகிறது. இத்தர்ம நியதியைக் கொண்டே இல்வாழ்க்கை இல்லறம் என்று போற்றப்படுகிறது. இது மங்கலத்தை தருவதால் கல்யாணம் என்றும், தெய்வத் தன்மை பொருந்திய மணமாதலால் தமிழில் திருமணம் என்றும் வழங்குவர். விவாகத்தில் ஐந்து அம்சங்கள் மிக முக்கியமானதாகும். அவை - வாக்தானம், கன்னிகா தானம், வரப்ரேஷணம், பாணிக்கிரகணம், சப்தபதி என்பவையாகும்.

மணப் பெண்ணைப் பார்த்து தர்மத்தை செய்வதற்காக உன்னை ஏற்கிறேன் என்று கூறுவது வாக்தானமாகும். (தர்ம பிரஜார்த்தம் த்வாம் விருனீமஹே) பெண்ணைத் தருவதாக வாக்குக் கொடுத்தல் பெரியோர்கள் முன்னிலையில் இடம்பெறும். இது நிச்சியதார்த்தம் என்பதைக் குறிக்கும். பருவம் அடைந்த ஆண், பெண் ஆகிய இருவரின் ஜாதகப்படி விவாகப் பொருத்தம் உரிய ஜோதிடர் மூலம் முறைப்படி பார்த்து பொருத்தம் நிச்சயம் பண்ணிய பிற்பாடு பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கு நன்னாளில் சென்று தாம்பூலம் பரிமாற்றம் செய்தல், அதாவது மங்களப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழவகைகள், இனிப்புப் பலகாரத்துடன் சென்று திருமணத்தை நிச்சயித்தல். அதன் பின் திருமண நாளை நிச்சயித்து விட்டு பின் பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று மேற்கூறியபடி தாம்பூலம் மாற்றுவர். இதுவே நிச்சயதார்த்தம் எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னுருக்கல்

மாங்கலியம் (தாலி) செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில், அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் செய்தல் வேண்டும். இதில் மணப்பெண் தவிர ஏனைய உறவினர்கள், நண்பர்கள் கலந்துகொள்வர். பெண் வீட்டார் இனிப்பு பலகாரம் கொண்டு வருவது சம்பிரதாயமாகும்.

மணமகன் வீட்டுவாசலில் முறைப்படி நிறைகுடம், குத்துவிளக்கு, பன்னீர் தட்டு, குங்குமம், சந்தனம் வைத்து வரவேற்க வேண்டும். அதே நாள் அல்லது வரவேற்க வேண்டும். அதே நாள் அல்லது பின்பு பெண்ணுக்குரிய கூறைப்புடைவை போன்றவற்றையும் கடையில் நல்ல நாளாகப் பார்த்து வாங்க வேண்டும்.

இதே நாள் பெண்வீட்டிலும், மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்களின் வளவில் ஈசான (வடகிழக்கு) மூலையில் முகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். இதற்கு இப்போது முள்முருங்கை மரத்தில் இருந்து ஒரு தடியை வெட்டி அதன் மேல் நுனியில் ஐந்து மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிற்றால் கட்டி சுமங்கிலிப் பெண்களால் நவதானியம் இட்டு ஊன்றப்படும். முகூர்த்தக்கால் ஊன்றிய பின் இரு வீட்டாரும் திருமணச் சடங்குகள் முற்றாக முடிவடையும் வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்குக் கொள்ளக்கூடாது என்பர்.

## மாப்பிள்ளை அழைப்பு

திருமண நாளன்று சுப நேரத்தில் தோழனுடன் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று, மாப்பிள்ளையை மனப்பந்தலுக்கு அழைத்து வருவர். மாப்பிள்ளை வீட்டில் பால் அறுகு வைத்து மாப்பிள்ளைக்கு புனிதநீராட்டுதல், தலைப்பாகை வைத்தல் போன்ற நிகழ்வுகளும், அதே போல பெண்ணுக்கும் புனித நீராட்டுதலும் நடைபெறும்.

மணப்பந்தலின் முன்றலில் நிறைகுடம் வைத்து மங்கள விளக்கேற்றி வைக்க வேண்டும். எல்லாக் காரியங்களுக்கும் முதலில் நாங்கள் வணங்கும் விநாயகரை (பசுவின் சாணத்தில் அல்லது மஞ்சள் மாவில் பிள்ளையார் பிடித்து) எழுந்தருளச் செய்து மலர் சூட்டி மங்களப் பொருட்களையும் வரவேற்புக்கு சந்தனம், குங்குமம், பன்னீர் முதலியவற்றையும் வைத்தல் வேண்டும். மாப்பிள்ளை தோழனுடன் வந்து சேர்ந்ததும், தோழன் மணமகனின் காலைக் கழுவுவார். தோழனுக்கு அன்பளிப்பாக மாப்பிள்ளை மோதிரம் போடுவது வழக்கம். இரு மங்கல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர் (சுமங்கிலிகள்) ஆரத்தி எடுத்து திலகம் வைத்தும் மாமனார் மாப்பிள்ளைக்கு மலர் மாலை போட்டும் வரவேற்பது வழமை. (பிராமணக் கல்யாண வீடுகளில் காசி யாத்திரை, சமாவர்த்தனம் எனும் கிரியைகள் நடைபெறுவதும், ஊஞ்சல் ஆடுதலும் முக்கிய நிகழ்வாகும். இது வானத்திற்கும் பூமிக்கும் உள்ள தொடர்பு காட்டப்படும். இதில் மணமகள் இடது பக்கம் இருக்க வேண்டும்.) அதன் பின் மாப்பிள்ளையைத் தோழன் நிறை குடத்துக்கு வலமாக அழைத்து வந்து மணவறையில் அமர வைப்பர். மாப்பிள்ளையை வலது பக்கமாக அழைத்து வரவேண்டும். (அதாவது சிவாச்சாரியார் இருக்கும் பக்கமாக) முதலில் சங்கற்பம், பிள்ளையார் பூஜை, ஆசமனம், புண்ணியாகம், பஞ்ச கவ்வியசுத்தி போன்ற கிரியைகள் நடைபெறும்.

### பவித்திரம் அணிதல்

திருமணக் கிரியைகளைச் செய்யவிருக்கும் சிவாச்சாரியார், தான் செய்யப்போகும் கருமத்திற்கு இறைவனிடத்தும் பெரியோரிடத்தும் அனுமதி வேண்டுதலைத் (அனுக்ஞை) தொடர்ந்து சங்கற்பம் (அதாவது செய்யப்போகும் கிரியைகளுக்காக உள்ளத்தை உறுதி செய்து கொண்டு பவித்திரம் அணிதல்) இடம்பெறும். எந்தக் கிரியையும் இனிது முடிப்பதற்கு மேலான தலைவரான விநாயகப் பெருமானின் திருவளை வேண்டி விநாயகர் பூசை முடிவில் மூவகை தத்துவங்களையும் நினைத்து நீரை உட்கொள்ளல் ஆசமனம் எனப்படும். உள்ளம் தூய்மையாகி ஆன்மா அருள்வழி நிற்க இக்கிரியை இடம்பெறும். இடத்தையும், பொருளையும் சுத்தி செய்வது புண்ணியாகம் செய்யப்படும் இக் கிரியையில் பஞ்ச கவ்விய பூசையும் இடம்பெறும்.

### அங்குரார்ப்பணம்

அங்குரார்ப்பணம் எனப்படுவது முளைப் பாலிகை (நவதானிய முளை) இடுதல். (அங்குரம் முளை, அங்குரார்ப்பணம் முளையிடுதல்) அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிடல் என்பதாகும். அனைத்திலும் இந்தக்கிரியை உண்டு. திருமணத்தில் இதைச் செய்வதன் பொருள் நவதானியம் செழித்து வளர்வது போல இத் தம்பதிகளின் வாழ்வும் செழிப்புடையதாக அமைய வேண்டும் என்பதற்காகவும், நவதானியம் எனப்படும் முளைய பாலிகைகள் மனிதனால் விதைக்கப்பட்டு மனித தேவைக்காக பயன்படுத்துவது போல இல்வாழ்க்கையில் கணவன், மனைவி மற்றோருக்கும் தம்மால் இயன்ற உதவிபுரிந்து அறத்தோடும் என்றும் பாலிகை இடும் சுமங்கிலிகள் போல மங்களமாய் வாழ வேண்டும் என்பதற்காகவும் இது நடைபெறும். மணமகன், மணகள் என இருவருக்கும் தனித்தனியாக அங்குரார்ப்பணக் கிரியை செய்வது மரபு. (மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்தில் இருப்பாள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த கருமம் இடையூறின்றி இனிது நிறைவேறவும், வேறு செயல் சிந்தனை இன்றிக் குறித்த கரும சிந்தனையில் மூழ்கி இருக்கவும், எல்லாப் பாவங்களையும் நீக்கிப் புனித மயமாக்க இந்த ரட்சா பந்தனம் செய்யப்படுகிறது. தமிழில் காப்புக் கட்டுதல் என்று கூறுவர். மணமகன், மணமகள் இருவருக்கும் தனித் தனியாக இந்தக் காப்புக் கட்டப்படும்.

மணமகனுக்கு ரட்சாபந்தனம் (காப்புக்கட்டி) முடித்து, பிறிதொரு இடத்தில் இருத்திப் பெண்ணை அழைத்து வருவார்கள். சில இடங்களில் மணமகன் அப்படியே இருக்கப் பெண்ணை அழைத்து வருவதும் உண்டு. இதற்கு காரணம் பெண்ணுக்கு காப்புக் கட்டாமல் மணமகனைப் பார்க்கக் கூடாது என்கின்ற ஒரு நியதியால் மணமகனைப் பிறிதொரு இடத்தில் அமரச் செய்கின்றனர். ஆனால் பெண் அழைத்து வரப்படும் போது முகத்திரை போட்டே அழைத்து வருவதால் மணமகன், மணவறையில் இருக்கவே பெண்ணையும் வைத்துக் காப்புக் கட்டலாம் என்கின்ற மரபிலும் இரு விதமாய் இக்கிரியை செய்வதுண்டு.

மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் வரை லட்சுமி நாராயணராக மணமகனையும் பெண்ணையும் பாவனை செய்து தாலி கட்டியபின் சிவசக்தி ரூபமாக அமர்த்திக் கிரியை நிகழ்த்துவர். அதற்காகவே முதலில் பெண் வலது பக்கமும் ஆண் இடது பக்கமும் தாலி கட்டிய பின் ஆண் வலமாகவும் பெண் இடமாகவும் மாற்றி இருத்துவார்கள். விஷ்ணு தனது வலது மார்பிலேயே லட்சுமியைக் கொண்டுள்ளார். சிவன் தனது உடம்பின் இடது பாகத்தைச் சக்திக்கே கொடுத்துள்ளார்.

இரட்சாபந்தனமான பின்பு ஆசாரியர் முறைப்படி சிவனதும், சக்தியினதும் அருளைப் பெறுவதற்காக சிவ கும்பத்திற்கும், சக்தி கும்பத்திற்கும் பூசை செய்து வழிபாடு நடத்துவர். வாழ்க்கைக்கும் நவக்கிரகங்களுக்கும் தொடர்புண்டு. எனவே அவர்பால் வரும் குற்றங்களைப் போக்கியருளும்படி நவக்கிரகங்களுக்கு பூசை செய்யப்படும்.

கும்பத்திலே பூசித்த யாகே வர யாகே வரி (சிவசக்தி) யின் அருளை நிலைபெறச் செய்வதற்கு ஓம குண்டத்தில் அக்கினி காரியம் செய்யப்படும். இங்கு வளர்க்கும் அக்கினி சிவாக்கினி எனப்படும். சிவாக்கினி பாவங்களை எரித்து வாழ்க்கைக்கு வேண்டிய தூய அருளை வழங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிதுரர் ஆசீர்வாதம்

குடும்ப வாழ்வைத் தொடங்கும் போது அது தவறின்றி நடப்பதற்கு அக் குடும்பத்து முன்னோரது ஆசீர்வாதம் வேண்டும். அதற்காக முன்னோர்களாகிய பிதுரர்களை திருமணத்திற்கு அழைத்து அவர்களது ஆசியைப் பெறும் வகையில் செய்யப்படுவது நாந்தி சிரார்த்தமாகும். இது மணமகன் மணமகள் ஆகியோரின் தந்தையர்களால் செய்யப்படும்.

## கன்னிகாதானம்

பெண்ணை முறையாகப் பெற்றோர்களால் ''தாரதத்தம்'' செய்வார்கள். ஒரு பொருளை இறுதியாகக் கொடுப்பதற்குத் தண்ணீர் விடுதல் முன்னாள் மரபு. இதற்குரிய கிரியையானது மணமகன், மணமகள் இருபகுதிப் பெற்றோரையும் அழைத்துச் சங்கல்பம் செய்து சம்பந்திகள் ஒருவருக்கொருவர் உபசாரம் செய்வது. (இது கிரியை முறையில் சொல்லப்படவில்லை சபை சிறப்பிற்காகச் செய்யப்படும் ஒரு சிறப்பாகும்.)

அதன் பின் கிழக்கு முகமாய் (மணவறையிலிருந்து சபையோரைப் பார்க்கும் வண்ணம்) மணமகளின் தந்தை அமர்ந்து, ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தேங்காய், மஞ்சள் துண்டு, சில்லறைக் காசு, பொன், மலர் போன்ற பொருட்கள் தட்டில் வைத்து பெண்ணின் கையைத் தட்டிலே வைத்து, தந்தை தட்டையும் மகளையும் சேர்த்துப் பிடிக்க, சிவாச்சாரியார் மணமக்களின் வம்சாவழியை (மணமகளினதும், மணமகனினதும் தந்தை, தந்தையின் பேரன் அவரின் தந்தை (பாட்டன்) ஆகியோரின் பெயர்களைக் குறித்து சிவாச்சாரியாரிடம் திருமணக் கிரியைகள் தொடங்கமுன் கொடுத்து வைப்பது உசிதம்) சபையோர் அறிய எடுத்துக் கூறி, மணமகளின் தகப்பனார் மணமகளுக்குத் தன்மகளைக் கொடுக்கும் போது பின்வரும் மந்திரப் பொருளைக் காணலாம்.

''அழகும், அறிவும், ஆரோக்கியமும் அமைந்த நன்கு அலங்கரிக்கப்பட்ட இந்தப் பெண்ணை நான் உனக்கு அளிக்கிறேன். அவள் தர்மம், செல்வம், அன்பு, அனைத்தையும் காப்பவளாக இருப்பாள்'' என்ற கருத்துப்பட அம்மந்திரம் அமைந்திருக்கிறது.

இம் மந்திரத்தைக் கூறி தாயார் மூன்றுமுறை தண்ணீர் விட மங்கள வாத்தியங்கள் முழங்க கன்னிகையைத் தானமாக மணமகன் கையில் கொடுப்பர். தண்ணீர் தாரையோடு கொடுத்தலால் இதற்கு தாராதத்தம் என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தத்தம் - கொடுத்தல்) மணமகன் அவளைப் பெற்று
"இல்வாழ் வான்" என்பான் இயல்புடைய மூவருக்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்பதற்கிணங்க வாழத் தயாராகிறான். இக்கன்னியாதானத்தைச் செய்ய தாய் தந்தையர் இல்லாதோர் அவர்களுடைய அண்ணன், அக்கா தம்பதிகள், சித்தப்பா தம்பதியர் அல்லது நெருங்கிய உறவுத் தம்பதிகளை நியமிக்கலாம்.

கன்னிகாதானம் அக்கினி, விநாயகர், சிவன் பார்வதி முப்பத்து முக்கோடி தேவர்கள், வேதப்பிராமணர்கள், உற்றார், உறவினர்கள், சபையோர்கள் சாட்சியாக நிகழ்த்தப்படுவது.

*தாலிகட்டல்*



தாலியிலே சிவலிங்கம் விநாயகர் அல்லது லட்சுமியினுடைய திருவுருவம் அமைத்தல் சிறந்தது. அதன் பின் ஒரு தட்டிலே மாங்கல்யம், கூறை, மாலை, கால் மிஞ்சி மற்றும் மங்கலப் பொருட்கள் வைத்து மணமகனின் தந்தை, தாய், சபையோரிடம் ஆசி பெறுதல். பின் மணமகன் தனது கையால் மணமகளிடம் கொடுத்து கூறை மாற்றி வரச்செய்தல் இடம்பெறும். கூறை மாற்றி வந்ததும், மணப்பெண் மணமகனுக்கு வலப்பக்கம் வந்து அமர மாங்கல்ய பூசை செய்து மணமகன் எழுந்து வலது பக்கத்திற்கு வந்து சிவாச்சாரியாரியார்கள், அவையோர்கள் ஆசீர்வதிக்க கெட்டிமேளம் முழங்க, கழுத்தில் தாலி கட்டுதல் நடைபெறும். தமிழில் மங்கல நாண் பூட்டல் என்று சொல்லப்படும்.

தாலி - என்ற சமஸ்கிருதச் சொல் பனை மரத்தைக் குறிக்கிறது. தால விருட்சம் என்றால் பனைமரம், தால என்பது பனை ஓலையையும் குறிக்கும். பழைய காலத்தில் தங்கத்திற்கு பதிலாக பனை ஓலையை பயன்படுத்தினர் என சிலகுறிப்புகள் உள்ளன.

ஆதி காலத்தில் மஞ்சள் கயிற்றினாலே தான் தாலி கட்டப்பட்டு வந்தது. தற்போது தங்கத்திலே கட்டுகின்றனர். இருப்பினும் சில குடும்பத்தினர் இன்னும் மஞ்சள் கயிறு மாங்கல்யத்திற்கு பாவிப்பது குறிப்பிடத்தக்கது. தாலி கட்டும் போது பின்வரும் மந்திரம் சொல்லப்படும்.

*"மாங்கல்யம் தந்து நானேத*
*மமஜீவன ஹேதுநா*
*கண்டேபத்நாமி ஸுபகே*
*துவம்ஜீவ சரதச்சதம்"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொருள் :–*

''இது மங்கள சூத்திரம் நான் வாழ்வதற்கு ஏதுவானது. இதை உன் கழுத்தில் கட்டுகிறேன். சௌபாக்கயிவதியே நீ நூறு வருடங்கள் சுகமாக வாழ்ந்திருப்பாயாக'' என்ற கருத்து காணப்படுகிறது.

தாலி கட்டும் போது அமங்கல வார்த்தைகள், தும்மல் போன்ற துர்சகுன ஒலிகள் கேட்கக்கூடாது என்பதற்காக கெட்டி மௌளம் கொட்டப்படும் மாங்கல்யம் ஒன்பது இழைகளை உடையது.

01. வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொள்ளுதல்
02. மேன்மை
03. ஆற்றல்
04. தூய்மை
05. தெய்வீக நோக்கம்
06. உத்தமகுணங்கள்
07. விவேகம்
08. தன்னடக்கம்
09. தொண்டு



இவற்றை ஒரு பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் அமைக்கப்பட்டுள்ளது.

சுபமுகூர்த்தத்தில் மணமகன் மணமகளின் வலப்புறம் சென்று வடக்கு நோக்கி நின்று, மாங்கல்யத்தை இரு கரங்களாலும் பெற்று ஒரு சுமங்கிலி திருவிளக்கு ஏந்தி நிற்க கட்டுவது வழமை. தாலியில் மூன்று முடிச்சு இடம்பெறுதல்.

மணமகன் முதல் முடிச்சு போடுகிறான். இது கணவனுக்கு கட்டுப்பட்டவள் என்பதையும் இரண்டாம் மூன்றாம் முடிச்சு மணமகளின் சகோதரி போடுகிறாள். இது கணவனின் தாய் தந்தையர்க்கு கட்டுப்பட்டவள் என்பதையும் தெய்வத்திற்கு கட்டுப்பட்டவள் என்பதையும் குறிக்கும்.

*மாலை மாற்றுதல்*

தாலிகட்டி முடிந்தபின் மாலை மாற்றுதல் வாழ்க்கையில் உடலாலும், உள்ளத்தாலும் நாம் இருவரும் ஒருவரே என்ற தத்துவத்திற்கு ஏற்ப பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலையை பெண்ணிற்குமாக மூன்று முறை கழற்றி மாற்றுவார்கள். பொதுவாக ஒருவர் கழுத்தில் போட்ட மாலையை இன்னொருவர் போடக்கூடாது என்பது சாத்திர விதி. ஆனால் ஈருடல் ஓர் உயிர் போல கலந்து விட்டதனால் அன்பின் நிமித்தம் மாலையை மாற்றுகின்றார்கள். தொடர்ந்தும் மங்கலப் பொருட்களாகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள், குங்குமம், பூ, வாசனைப் பொருட்கள், சீப்பு, கண்ணாடி முதலியவற்றை மணமகன் மணமகளிடம் கொடுப்பார். கணவன் மனைவியாக ஆனபின் தம் மங்கலக் கோலத்தை இருவரும் கண்ணாடியில் பார்த்து மகிழ்வர்.

### *பால் பழம் பருகுதல்*

வாழ்க்கைத் துணை ஒருவருக்கொருவர் அமைந்த வேளை வாழ்க்கை என்றும் இனிப்பாக அமைய முதல் பானமாய் பாலும், பழமும் பருகுதல் வேண்டும். அத்துடன் கோ எனப்படும் பசு தரிசனமும் இடம்பெறும். (அல்லது திருவிளக்கு தரிசனம் செய்யலாம்.)

### *பாணிக்கிரகணம் (கைப்பிடித்தல்)*

பாணிக்கிரகணம் என்றால் மணமகளின் கையை மணமகன் பிடிப்பது என்று பொருள் இதைத் தமிழில் ''கைப்பிடித்தல்'' என்பார்கள். (பாணி - கையை, கிரகணம் - பிடிப்பது) இதன் போது ''நீயும் நானும் முதுமையடைந்துவிட்டாலும் கூட ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருப்போம் என்று என் கையைப் பிடிக்கிறேன்'' எனும் மந்திரம் சொல்லப்படும். ஆணின் வலக்கை பெண்ணின் வலக்கையைப் பிடிக்க வேண்டும்.

### *ஏழடி நடத்தல் (ஸப்தபதி)*

பெண்ணின் வலது கையைப் பற்றிக் கொண்டு வலது கால் பெருவிரலைப் பிடித்துக் கொண்டு மணமகன் புனிதமான ஏழடி வைத்தல் ஸப்தபதியாகும். (சப்த - ஏழு, பதி - அடி) அக்கினி எரியும் ஹோம குண்டத்தில் இருந்து அம்மிவரை ஏழு இடங்களில் நெல் போட்டு அந்த இடங்களில் மணமகன் தன் கையால் பெண்ணின் வலக்காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல், ஞானிகளால் வகுக்கப்பட்ட ஏழுக்குரியவை பல ஸப்த சாகரம், ஸப்த லோகங்கள், ஸப்த நாடிகள், ஸப்த கன்னிகைகள், ஸப்த வாரங்கள் போன்றவையைக் குறிப்பிடலாம். இவை வாழ்க்கையின் நடைமுறைக்கு முன்னுதாரணமாகவும், செயற்படவும், கேட்கவும், இரசிக்கவும் உதவுவன. கணவனானவன் தனது இஷ்டங்களுக்குப் பிரியமானவளாய்த் தன்னை சார்ந்த வகையில் இந்த ஏழடி மூலம் தன்னோடு சேர்த்துக் கொள்வதே இதன் பொருளாகும்.

இவ்வாழ்வில் பெறவேண்டிய ஏழு பொருள்களை இது குறிக்கும். அவற்றைப் பெறுவதற்கு இருவரும் ஒத்து முயற்சி செய்ய வேண்டும். ஏழு பொருள்களுமாவன உணவுப்பொருள், உடற்பலம், கடவுள் வழிப்பாட்டுடன் நல்வினை, மனச்சாந்தி, நல்லறிவு, சகல போகங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கு காலம் வரும் பொருள்களும் அவற்றால் வரும் சுகங்களும் யாகத்திற்கு நல்ல துணையாக இருப்பதுமான பொருளைத் தரும்.
இதை வேறுவிதமாகவும் சொல்வர் அதாவது,

| | | |
|---|---|---|
| ஓரடி | - | கடவுளுக்காக |
| இரண்டாவது அடி | - | கணவனுக்காக |
| மூன்றாவது அடி | - | சேர்ந்தோர் குலத்தைக் காக்க |
| நான்காவது அடி | - | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் பெண்களின் குணநலங்களைப் பேண |
| ஐந்தாவது அடி | - | இருவரதும் அறிவு நல்வழியாக அமைய |
| ஆறாவது அடி | - | கலைகள் ஆறும் அன்புக் கணவனுக்குப் பொருந்தும் வரை ஊட்டப்பட உரியன |
| ஏழாவது அடி | - | ஏழேழு பிறப்பும் கணவருடன் இன்புற்று வாழ வேண்டும் என்பதற்காக |

என இப்பாடல் பொருள்விளக்கம் தருகிறது.

*அம்மி மிதித்தல்*

நான்கு மூலைகள் கொண்ட ஒரு கல்லை (அம்மி) வைத்து அதன் மேல் பெண்ணின் காலைத் தூக்கி வைத்து தனது கையால் கணவன் மிஞ்சியைப் பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில் அணிவிப்பது முறை. கல்லிலே உள்ள நான்கு விட்டங்களும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குண இயல்பைக் குறிக்கும். அதன் நடுப் பகுதியில் கணவன் பெண்ணின் காலைத் தூக்கி வைக்கும் போது இந்தக் கல்லைப் போல் உறுதியாய் தனது நிலையில் நின்று பிரியாது இளகாது தனது கணவன் மேல் உள்ள பற்றும் நீங்காது கற்பு நெறியில் நின்று விலகாது தன்னை உறுதியாய் நிலைப்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். பெண்ணின் வலது காலை (எட்டாவது அடி) மணமகன் கையால் தூக்கி அம்மியில் வைத்து பெரு விரலுக்கு அடுத்த விரலில் மெட்டி அணிவிப்பர். இந்தக் கல்லைப் போல் நிலையாக நின்று உன் எதிரிகளைச் சகித்துக்கொள். இது பெண்ணுக்குத் கற்பையும் ஒழுக்கத்தையும் தாங்கி வாழ்க்கையில் இன்ப துன்பங்களைக் கண்டு கலங்காமல் உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

அம்மி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு பெண்ணிற்கும் இன்றியமையாதது. அக்காலத்தில் மணப்பெண்ணைத் தீய ஆவிகள் அணுகா வண்ணம் காக்க இரும்பு வளையம் அணிவிக்கப்பட்டது. இக்காலத்தில் வெள்ளியால் செய்த மிஞ்சி அணிவிக்கப்படுகின்றது. வெள்ளி உலோகத்திற்கும் தீய ஆவிகள் விரட்டும் தன்மை உண்டு என்பதால் மெட்டி அணிதல் முக்கியமாகக் கருதப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கினியை வலம் வரும்போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் மோதிரத்தை இருவரும் தேடி எடுக்க வேண்டும். இது மூன்று முறை நடைபெறும். விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

*பிராயசித்தம்*

குற்றங்குறைகள் தீர்ப்பதற்காகப் பிராயச்சித்த ஓமமும் கிரியைகளின் நிறைவில் தோழன் நெற்பொரியைப்பெற்று மணமகனின் கையில் கொடுக்க மணமகன் தான் பெற்ற பொரியை மணமகளின் கையில் கொடுத்து (மணமகள் அதனை இரண்டு கைகளாலும் ஏற்றுக்கொள்ள) மணமகன் மணமகளின் கைகளை தன் இரு கைகளாலும் தாங்கி குருக்கள் அக்கினியில் சிருக்ஸ்ருவம் (யாக குண்டத்தில் நெய் சொரிவதற்காக மரத்தால் செய்யப்பட்ட யாளி போன்ற முன்பகுதியை உடையது) மூலம் நெய்சொரியும் போது அக்கினியில் இடுவர். ''அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்.'' என வேண்டுதல் செய்து (ஒரு நூலாசிரியர் சிறப்பாக நெென் மலர் என்று வர்ணிக்கின்ற) நெற்பொரியைச் சொரிய வேண்டும்.

*அருந்ததி பார்த்தல்*

கற்பு நெறியில் மிகச் சிறந்தவளாய் விளங்கியவள் அருந்ததி எனும் மங்கை அவளின் சிறப்பினால் வானிலே நட்சத்திரமாக இன்றும் ஜொலித்துக் கொண்டிருக்கின்றாள். பெண்ணின் கற்பு நெறி பெருமையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசைப் பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சில இடங்களில் அருந்ததிக்கென கும்பம் வைத்து கும்பத்திலே பூ போட்டு வணங்குவதும் உண்டு.

''அண்டல மீதுலவும் அருந்ததி என்னும் அருந்திநற் கற்பினாள் உன்னைக் கண்டதால் ஊறு படவொணாதென்னக் கருதி நீ கங்குலிற் கவிகை கொண்டது முறைதான்'' எனன்று புகழேந்திப் புலவர் பாடியது இத்தொடர்பில் ஒரு நூலாசிரியர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அருந்ததி வசிட்டரின் மனைவி. சிறந்த பதிவிரதை வானத்தில் துருவ மண்டலத்திற்கு அருகில் ஏழு நட்சத்திரங்களுக்கு இடையில் வசிட்ட நட்சத்திரமும் அதன் அருகில் அருந்ததியும் இருப்பதாக புராணங்கள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *மோதிரம் போட்டு எடுத்தல்*

இது கிரியையிலே கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளியவும்,சபை சிறப்புக்காகவும் மோதிரத்தை மஞ்சள் கலந்த நீரில் போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கைவிட்டு எடுக்க வேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தையும் இது குறிக்கும்.

### *அரசாணி*

இது பத்ததியிற் கூறப்படவில்லை. இது தேசவழக்கம் போலும். அரசிலே சிவபிரானையும் வேம்பிலே உமாதேவியாரையும் வழிபடும் வழக்கம் இன்றும் உண்டு. ஒரே இடத்தில் அரசும் வேம்பும் நட்டுப் பூசிப்பதுமுண்டு. ஆதலால் அரசு சிவனைக் குறித்தல் பெறப்படும். ஆல் விஷ்ணுவைக் குறிப்தென்பர். அரசும் ஆலம் சிவனையும் சக்தியாகிய விஷ்ணுவையும் பூசிப்பதற்காக நடப்பட்டு அரசால் என்ற பேருண்டாகி அரசாணி என்று மாறியிருக்கலாம். இப்போது இவைகளுக்குப் பதிலாக முள்முருக்கு நடப்படுகிறது. கற்புநெறி தவறாது வாழவேண்டும் என்பதற்காக தரிசிக்கப்படுகின்றது. (இந்திரன் சபத்துக்குள்ளாகியதை முள்முருக்கு குறிக்கின்றது.) முருக்கு அரசு போலவே சிவ வழிப்பாட்டுக்குரிய மரபென்பர். அரசு, ஆல், முருக்கு ஆகிய மூன்றும் பிரமா, விஷ்ணு, ருத்திரனாகிய மும்மூர்த்திகளையும் பூசிப்பதற்குரிய மரங்கள் என்றும், இவை மூன்றையும் நடும் வழக்கமும் உள்ளதென்றும் கூறுவர்.

### *வாழ்த்துதல்*

இந்த நிகழ்வு மணமக்கள் பல்லாண்டு காலம் நீடுழி வாழ வேண்டும் எனப் பெரியோர்கள் மனமுவந்து ஆசீர்வதிப்பதாகும். அறுகானது நன்றாகப் பரவும் தன்மையும், இலகுவில் அழியாத தன்மையும் உடையதால், மணமக்கள் இருவரும் அதே தன்மையோடு சிறப்புற்று வாழவேண்டும் என்ற நோக்கில் அறுகைச் சேர்த்து மஞ்சள் கலந்த அரிசி போடுதல் அறுகரிசியாக வாழ்த்துவது மரபாகும். இவ்வறுகு அரிசி போடுவதில் மாறுபட்ட தன்மையைக் காண முடியும். சிலர் கீழ் இருந்து மேல் நோக்கியும், சிலர் மேல் இருந்து கீழ் நோக்கியும் ஆசீர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை உச்சியில் (சிரசில்) மூன்று முறை இடுதலே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நிறைவு - மகிழ்வு - வெற்றி குறித்துப் பண்டைய நாளில் அறுகெடுத்து வாழ்த்தும் வழக்கம் இருந்து வந்தது. (சேக்கிழார் பெரியபுராணம் பாடி முடித்து யானை மீதமர்ந்து வீதியுலா வரும் போது ஆரணங்கள் விரித்தோதி மாமறையோர் எதிர்கொண்டு, அறுகெடுப்ப வாழ்த்தெடுத்தார். அரம் பயர்களெல்லாம் என்பது திருத் தொண்டர் புராண வரலாறு - 88) அறுகிட்கு வணங்குதல் என்ற மரபு காலப்போக்கில் அறுகொடு நெல்லும் மலரும் கலந்து இடுதல் என்று மாறிற்று. நெல் அரிசியாகி அட்சதை இடுதல் என்றும் ஆயிற்று. அறுகும் அட்சதையும் மலரும் கலந்து இட்டு வாழ்த்துதல் அட்சதையிடுதல் என்று உலக வழக்கில் வழங்கக் காண்கிறோம்.)

## *ஆராத்தி எடுத்தல்*

திருமண நிகழ்வின் நிறைவாக மணமக்களின் கைகளில் கட்டிய காப்புக்களை அவிழ்த்து, பவித்திரங்களை கழற்றி வெற்றிலையில் வைத்துக் குருக்களுக்கு தட்சணையும் சேர்த்து வைத்துக் கொடுத்து மணமக்கள் ஆசிர்வாதம் பெறுவர். இதில் மணமக்கள் ஆசீர்வாதம் பெறுவர். இதில் மணமக்கள் தங்கள் காப்புக்களைக் கழற்றுதல் வேண்டும். திருமணங் சடங்கின் முடிவில் ஆராத்தி எடுத்தல் இடம்பெறும். மணமக்களுக்கு ''கண்ணூறு'' (கண் திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன்மேல் மூன்று வாழைப் பழத்துண்டுகளில் நெய்தீபம் ஏற்றி இரு சுமங்கிலிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்றுமுறை சுற்றித்தீபத்தை அணைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு விடுதல் நிகழும்.

ஆராத்தி எடுத்தபின் தோழன், மணமகன், மணமகள், தோழி என்ற வரிசையில் மங்கள மேளம் முழங்க எல்லோரும் வாழ்த்த வீட்டினுள்ளே வலது காலை எடுத்து வைத்து மணமக்கள் செல்வார்கள். அவர்களுக்கு முன்னே பூரண கும்பம், மங்கள தீபம் என்பவற்றை சுமங்கிலிகள் கொண்டு செல்வர். வழிபாட்டறையில் அவற்றை வைத்து மணமக்கள் பெற்றோரின் ஆசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (iii) ஏனைய கிரியைகள்

## 1. *புதுமனை புகுதல்*



நாம் வீடுகட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்திற்குள் முதன் முதலில் செய்யும் பூஜையானது அத்திவாரமிடல். அதற்கு நாம் முறையாக சிவாச்சாரியாரை அணுகி அவருடைய அறிவுரை ஆசியுடன் புண்ணிய இடங்களாய் விளங்கும் ஆலயங்களின் வீதிமண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், ஆனைக் கொம்பினால் எடுத்த மண் (ஆனை தந்தத்தால் எடுத்த மண்), எருதுக் கோட்டு மண் (எருது பாதம் பட்ட மண்), குளத்து மண் போன்றவற்றை ஒரே அளவில் எடுத்துக் குழைத்து பெட்டி செய்து, அடிப்பேழையில் பள்ளம் செய்து அவற்றில் நவரத்தினக்கற்களைப் போட்டுத் தங்கத் தகட்டில் ''வாஸ்து யந்திரம்'' போட்டு ஈசான மூலையில் (வடகிழக்கு மூலையில்) வைத்துப் பூஜை செய்ய வேண்டும். வீட்டின் பெரியார் கையால் அதைக் குழியில் இட்டு அத்திவாரமிடல் வேண்டும்.

இதற்குரிய விளக்கம் யாதெனில் காலங்காலமாக எம் சந்ததியினரை வாழ வைக்கும் ''கிரக லக்குமி'' எனப்படும் வீட்டையும் எம்மையும் தாங்கி நிற்கும் பூமாதேவியே எம்மால் இயன்ற நவரத்தின, பொன், பொருள், தானங்கள் உமக்கு அர்ப்பணிக்கிறோம். அதைக் காலைவேளயில் சூரியபகவான் சாட்சியோடு மக்களுக்காகவே தம்மை அர்ப்பணித்து அவர்களுக்காகவே என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும் சிவாசாரியார்களின் துணையோடு முறையாக உமக்கு அர்ப்பணிக்கிறோம். எமது வீட்டு நிலத்தில், நீர்வளம், நிலவளம், பயிர்வளம் நிறைந்து நிற்க அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கும் பூஜையாகும்.

அதே போன்று வீட்டு வேலைகள் நடைபெறும் காலம் வீட்டிற்கு முதல்நிலை, வளை என்பன சுப முகூர்த்தங்களில் வைக்கும் போது அதற்குரியவர்கட்கு தச்சுவேலையாளிக்கு உடை, தட்சணை, தாம்பூலம் கொடுத்து உபசரித்து, அவர் மனம் மகிழ எமை வாழ்த்திட வழிசெய்யும் உபசாரமாக இது அமையும்.

வீட்டிலே வழிபாட்டறை அமைக்கும் போது கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக அமைப்பது உத்தமமாகும். பொதுவாகவே வழிபாட்டறை தனிமையானதாகவும், பரிசுத்த இடமானதாகவும் அமைவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்குச் செல்வ போகங்களைக் கொடுக்கும். தீட்டுகள் (ஆசௌசம்) வரும் காலங்களில் வழிபாட்டறையை யாரும் அணுகாது மூடிவிடுதல் உத்தமம்.

## *வீடுகட்டும் போது வரும் விடயங்களைக் கவனிக்க வேண்டும்*

01. வாசல்கால் நிலை வைக்காமலும், தரை பூசாமலும், சுவரில் சுண்ணாம்பு அடிக்காமலும், மனைவி கர்ப்பமாக இருக்கும் காலத்திலும், இயற்கை உத்பாதம் நடக்கையிலும், வேதம் சொல்லாமலும், திருமுறை ஓதாமலும், வாஸ்து ஹோமம் செய்யாமலும் புதிய வீட்டில் கிரஹப் பிரவேசம் செய்யக்கூடாது. கிருகாரம்ப காலத்தில் இராசவாசல் மண் அல்லது புண்ணியக்ஷேத்திர மண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், நண்டுப் புற்றுமண், ஆனைக்கோட்டு மண், எருது கோட்டுமண், குளமண், கொழுமண் இவைகளைச் சமமாகக் கூட்டி பெட்டி செய்து, அடிப்பேழையில் பள்ளமாக்கி அதில் மாணிக்கம், வைடூர்யம், வைரம், நீலம், முத்து, புஷ்பராகம், மரகதம், கோமேதகம், பளிங்கு ஆகிய இரத்தினங்களை வைத்து மூடி தங்கத் தட்டில் வாஸ்து யந்திரம் போட்டு வாஸ்து பூஜையும், நவக்கிரக பூஜையும் செய்து யந்திரத்தைப் பழம்பாசியினாற் சுற்றி நிருதி அல்லது ஈசானத்தில் வைத்து அந்த இடத்தில் ஒரு மண்டல பூஜை செய்யவும்.

02. இயற்கை உத்பாதம் என்பது இடியுடன் கூடிய மழை காலம் மற்றும் புயல்காற்று, நிலநடுக்கம் உண்டாகும் காலம் வானத்தில் வால்நட்சத்திரம் தோன்றும் காலம் போன்றவை. இவை விலக்க வேண்டும்.

03. கிழமைகளில் செவ்வாய், சனி, விலக்கத்தக்கவை. கிரஹப் பிரவேசம் செய்யும் வீட்டுத் தலைவனின் ராசிக்கு எட்டில் சந்திரன் இருக்கும் காலமும் விலக்கத்தக்கவை. மேலும் நல்ல நாளும் கோளும் அறியாமல் பிரவேசிக்கக் கூடாது.

04. முதலில் பசு செல்வதால் லட்சுமி தேவி சந்தோஷம் அடைகிறாள்.

05. அடுத்து தம்பதிகள் குல தெய்வ, இஷ்ட தெய்வப் படங்களுடன் பிரவேசிப்பதால் முன்னோர்களும் கிரக தேவதைகளும் பிரியமடைகின்றனர்.

06. சுமங்கிலிப் பெண் இல்லத்தில் உள்ளே செல்வதால் மஹாலஷ்மி வாசம் உண்டாகிறது. (ஸவஸ்தி வசனம் வேத கோஷம்) இவை இரண்டாலும் அபசகுனங்கள் விலகுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. நண்பர்கள் அன்று விருந்து உண்பதால் அக்னி அருளும், வாஸ்து தோஷமும் நீங்குகிறது.

08. கூடுமானவரை பூஜை அறையும், கழிவறையும் பக்கத்தில் இல்லாமலும், சமயலறை கடந்து கழிவறை அடையாமலும் வாசலுக்கு நேர் கிணறு வைக்காமலும் முதலில் கட்டிய பிரதான வாயிலை மூடாமல் இருப்பதும் நல்லது.

09. *வாயிற் பொருத்தம்*

இடபம், மிதுனம், கர்க்கடகம் ராசியில் பிறந்தவர்களுக்கு கிழக்கு, வடக்கு வாயில் வீடும், சிங்கம், கன்னி, துலாம் ராசியில் பிறந்தவர்களுக்கு கிழக்கு, தெற்கு வாயில் வீடும், விருச்சிகம், தனுசு, மகரம் ராசியில் பிறந்தவர்களுக்கு மேற்கு, வடக்கு வாயில் வீடும் உத்தமம். ஒன்று பொருந்தில் மத்திமம், இரண்டும் பொருந்தாவிடில் அதமம்.

10. *வீட்டின் நிலப்பிரமாணம்*

வீடு கட்டும் நிலம் ஆகக் குறைந்தது 80 முழ நீளமும் 78 முழ அகலமும் கொண்டதாக இருத்தல் வேண்டும். இப்பிரமாணத்துக்கு குறைந்தளவுள்ள நிலத்தில் வீடு கட்ட வேண்டி நேரிடின் நிலத்தின் அகலத்துக்குத்தக்க நீளத்தை அளந்து அவ்வளவு நிலத்தையும் புறம்பான காணியாக எல்லையிட்டு, அக்காணிக்குள் வீட்டு நிலம் வகுத்தல் நலம்.

11. *வீட்டுக்கு வாயில் வகுத்தல்*

மனையின் நீளத்தை பாகமாகப் பகுத்து வலப்பாலில் 5 பாகமும், இடப்பாலில் 3 பாகமும் கழித்து மற்றொரு பாகமாக வாயில் வகுக்க வேண்டும்.

12. *வீட்டுக்குத் தோஷமுள்ளவை*

புதிதாகக் கட்டும் மனைக்கு கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு இத்திக்குகளிலே சமீபமாக வேறு வீடுகளிப்பது தோஷம். இடையில் வழி இருப்பின் அதிக தோஷமல்ல. தன் வீட்டுக்குக் கிழக்கே இருக்கும் வீடு 87 முழத்திற்கும், தென்கிழக்கே, தெற்கே இருக்கும் வீடுகள் 73 முழத்திற்கும் தென்மேற்கே இருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு 83 முழத்திற்கும் அப்பாலிருந்தால் தோஷமல்ல. வீட்டினுள் எதிருக்கெதிராய் ஒன்றையொன்று பார்க்கும்படி இரட்டைக் கூடங்கள் அமைக்கலாகாது. வீட்டிக் பார்வையில தூலங்களின் குத்தாயினும் மூலைக்குத்தாயினும் காணப்படுவது தோஷம்.

## 13. *வீடு கட்டும் மாதங்கள்*

சித்திரையில் வடக்கு வாயில் வீடும், வைகாசியில் வடக்குத் தெற்கு வாயில் வீடுகளும், ஆடியில் கிழக்கு வாயில் வீடும், ஆவணியில் கிழக்கு வாயில் வீடுகளும், ஐப்பசியில் தெற்கு வாயில் வீடும், கார்த்திகையில் தெற்கு வடக்கு வாயில் வீடுகளும், தையில் மேற்கு வாயில் வீடும், மாசியில் மேற்கு கிழக்கு வாயில் வீடுகளும், எழுந்திருப்பு முகூர்த்தத்தில் எல்லா வீடுகளும் கட்டத்தகும். ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி மாதங்களில் வீடு கட்டலாகாது.

## 14. *கிரகப்பிரவேசத்துக்கு வேண்டியவை*

தீபம், விநாயகர், இலட்சுமி, சரஸ்வதி, படங்கள், பூரண கும்பம், புஷ்பமாலை, மஞ்சள், தாம்பூலம், பால், பழம், நைவேத்தியங்கள் உப்பு, நெல் முதலிய தானியங்கள், சுவர்ணம், வெள்ளி, நவரத்தினம், நவவஸ்திரம், ஆபரணம் இவைகளை மங்கல வாத்திய கோஷத்தோடு சுமங்கிலிகள் கொண்டுவர வீட்டினுள் பிரவேசிக்கவும்.

## 15. *வீடு கட்டுவதற்கு ஆகாத இடங்கள்*

தெற்கு, மேற்குத் தாழ்ந்த பூமி, முக்கோண வடிவான பூமி, சந்நியாசிகள், பேய் பிடித்தவர்கள், பேய் வித்தைக்காரர்கள், சண்டாளர் வசித்த இடங்கள், கோயிலிருந்த இடங்கள், மயானம், யுத்தஞ் செய்த இடம் முதலியன வீடு கட்டுவதற்கு ஆகாதவை. துலா, கோபுரம், அரசு, வன்னி, வில்வம் இவைகளின் நிழல் வீட்டிற்படலாகாது.

நன்றி : திருக்கணித பஞ்சாங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கிழக்குத் திசை, வடகிழக்குப் பகுதி*

கிணறு, பூஜை அறை, வரவேற்பு அறை, தண்ணீர்த் தொட்டி

*கிழக்குத் திசை, தென்கிழக்குப் பகுதி*

உணவருந்தும் அறை, சமயலறை, குளியலறை, கழிவறை

*தெற்குத் திசை, தென்கிழக்குப் பகுதி*

வரவேற்பு அறை, படுக்கை அறை, மாடிப்படிகள்

*தெற்குத் திசை, தென்மேற்குப் பகுதி*

படுக்கை அறை, அலுவலகம்

*மேற்குத் திசை, தென்மேற்குப் பகுதி*

தண்ணீர்த் தொட்டி, பொருட்கள் வைக்கும் அறை, குளியலறை

*மேற்குத் திசை, வடமேற்குப் பகுதி*

படுக்கை அறை, மாட்டுத்தொழுவம், தண்ணீர்த்தொட்டி

*வடக்குத் திசை, வடமேற்குப் பகுதி*

வரவேற்பறை, படிக்கும் அறை, குளியலறை

*டக்குத் திசை, வடகிழக்குப் பகுதி*

பூஜை அறை, கிணறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. அபரக் கிரியைகள் பற்றிய விபரங்களும் விளக்கங்களும்

***அபரக்கிரியையின் சொல் விளக்கம்***

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். கிரியை என்பது நன்றாகச் செய்யப்படுவது எனப் பொருள்படும். அதாவது ஒருவர் இறந்த பின்பு ஆத்மா இறைவனடி சேர வேண்டி அவரது புத்திரர் முதலியோரால் நன்றாகச் செய்யப்படுவதே அபரக் கிரியை இதுவே உத்திரகிரியை, சிராத்தக் கிரியை, மரணக் கிரியை என அழைக்கப்படும்.

ஒருவர் இறந்தபின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் மற்றும் உறவினரால் செய்யப்படும் கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை. தாய்தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும் போதும், இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக்கிரியைகளின் பலனை சிவாகமங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன்தராது என்பது கௌசிகர் வரலாறு மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாம்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்க் கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் பிதிர்களைத் 'தென்புலத்தார்' எனக் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும்பேறுகளும், சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரந் தவறியவராவர். பிதிரர் வருந்தின் பெருந் தீமைகள் நேரும்.

***அபரக்கிரியைகளின் வகை :***

இவை தகனக்கிரியை, அத்திசஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் எனப் பல பகுதிகளை உடையன. இவைகள் சிராத்தக் கிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோர்க்கு மாத்திரம் சைவக் கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடியார்கள் சிவனேயானவர். அவர்களுக்குரிய உத்தர கிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிராத்தம் குருபூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கு பூதவுடலில் தீட்சை வைத்த பிறகு கிரியைகள் செய்யலாம். வாழ்நாள் முழுவதும் அசைவ உணவுகளை உண்ணாத சுத்த சைவர்களுக்குப் பூதவுடலிலேயே அந்தியேட்டியும் செய்யலாம். அவர்களுக்கு 16ம் நாள் கல் வைத்து பூசை செய்யலாம்.

### *அபரக்கிரியைகளின் பாகங்கள்*

அபரக் கிரியைகளை மூன்று பாகங்களாக வகுப்பர்

| | | |
|---|---|---|
| பூர்வாங்கம் | - | தகனம் முதல் ஏகோதிட்டம் வரையுள்ள கிரியைகள் |
| மத்தியாங்கம் | - | மாசியம் முதல் சபிண்டீகரணம் வரையுள்ள கிரியைகள் |
| உத்தராங்கம் | - | ஆப்திக சிராத்தம், சிராத்த வகைகள், புரட்டாதி மாத அபர பட்சத் திதிகளில் செய்யப்படும் மஹாளய சிராத்தம் முதலியன. |

### *அபரக்கிரியைகளின் விபரங்கள்*

- உக்கிராந்திக் கிரியை
- தேகாந்த சூர்ணோற்சவம்
- அத்தி சஞ்சயனம்
- நக்னப் பிரச்சாதனம் அந்தியேட்டி
- பாஷாணத்தாபனம்
- ஏகோத்திரவிருத்தி
- பிண்டதானம்
- நவசிராத்தம்
- பாஷாண உத்தாபனம்
- சம்கிதா சிராத்தம்
- இடபதர்சனம்
- ஏகோதிட்டம்
- மாசியம்
- சோத கும்ப சிராத்தம்
- சபிண்டீகரணம்
- ஆப்திகம்
- மஹாளயம்
- இவைகள் உத்திரகிரியை என அழைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *உக்கிராந்திக் கிரியை*

உக்கிராந்திக் கிரியை என்பது ஒருவருடைய உயிர் உடலை விட்டு நீங்கும் நிலையில் செய்யப்படும் தசதானக் கிரியை (பத்து வகையான பொருட்களை தானம் கொடுக்கும் வழக்கம்) உக்கிராந்திக்கிரியை எனப்படும்.

### *உக்கிராந்திக் கிரியை செய்யும் முறை :*

ஒருவருக்கு மரணம் அண்மித்ததை அறிந்து தம் குருவை வரவழைத்து, ''பாபநீக்கத்தின் பொருட்டு'' குல ஆசார அனுஷ்டான முறைக்கமைய

01. கன்றோடு கூடிய பசுமாடு
02. நெல் விளையக் கூடிய அளவு விளைவு நிலம்
03. எள்ளு
04. பொன்
05. நெய்
06. உணவுத் தானியங்கள்
07. வெள்ளி
08. உப்பு
09. வெல்லம்
10. ஆடைகள்

ஆகியவற்றை புத்திரர்கள் அவர் பெயரால் அந்தணருக்கு வழங்கலாம்.

### *உயிர் உடலை விட்டு நீங்கிய பின்பு நடாத்தப்படுகின்ற கிரியைகள்*

விநாயக வழிபாடு
பஞ்ச கௌவ்ய பூஜை
புண்ணியாக வாசனம்
மண்டப சுத்தி (கிரியை செய்யும் இடத்தினை நெற்பொரி, சந்தனம், வெண்கடுகு, விபூதி, புஷ்பம், அட்சதை எனும் பொருட்களைக் கொண்டு தூய்மைப்படுத்தல்.

### *உத்திரகும்ப பூஜை*

பூதவுடலை குளிப்பாட்டல் (எண்ணெய், பஞ்சகவ்யம், இளநீர், மஞ்சள் நீர், சிவகும்ப நீர் ஆகியவைகளால் உடலைச் சுத்தி செய்து புத்தாடை உடுத்தி திருநீறுபூசுதல்.)

பேரிதாடனம்
சூர்ணோற்சவம்
சுண்ணமிடித்தல் என்பன செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேரிதாடனம் கிரியை விளக்கம் :

பேரி என்பது மேளம், தாடனம் என்பது அடித்தல் எனப்படும். குருவானவர் மந்திரரூபமாக பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், சப்த மாதர்கள், அஷ்டமஹா நாகங்கள், சூரியர், சந்திரர் ஆகியோர்களை மேளத்தில் பூஜித்து ஆவாஹித்து இறந்தவருடைய ஆன்மா ஈடேற்றம் அடைய வேண்டும் எனும் சிவலோகப் பிராப்திக்காக மூன்று முறை மேளமடித்தலைக் குறிக்கும் கிரியையாகும்.

### சூர்ணோற்சவமும், சுண்ணமிடித்தலும் :

ஆன்மா தூல தேகம் நீங்கிய பின்பு சூக்கும தேகத்துடன் சஞ்சரிக்கின்ற நிலையைக் குறிப்பதே சூர்ணேற்சவமாகும். இறந்தவரது ஆன்மா சிவகதி அடைய ஏற்படும் தடைகளை நீங்கச் செய்வதற்கும் உடலைப் புனிதப்படுத்தவும், மங்களம் வேண்டியும் இக்கிரியை செய்யப்படுகின்றது.

மஞ்சள் பொடி, அறுகு, நல்லெண்ணெய் எனும் பொருட்களை பூமி தேவியாக பூஜிக்கப்பட்ட உலக்கையினால் 81 பதமந்திரங்களைச் சொல்லியும் இறுதியில் திருப்பொற் சுண்ணம் எனும் திருவாசகம் பாடியும் இடிக்கப்படும் கிரியைகளே சூர்ணேற்சவமும், சுண்ணமிடித்தலுமாகும். பாவங்கள் அகன்ற பின்பு திருவருள் உண்டாவதற்காக தீப்பந்தம் ஏற்றப்படும். தொடர்ந்து திருமுறைகள் ஓதப்பெறும்.

உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்லும் போது அட்டதிக்கு தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக சைவாசாரமுள்ள ஒருவரினால் வழியிலே நெற்பொரி தூவப்படும்.

ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாஹித்த சிவாக்கினியும், கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடுகாட்டிலே, நாலு முழ நீளமும், இரண்டு முழ அகலமும் உள்ள பொருத்தமான இடத்தில் மஞ்சள், குங்குமம் இட்டு விறகு அடுக்கப்படும். அதன் மீது உடலை வைத்து தற்புருஷ மந்திரத்தினால் நீரையும், அரிசியையும் இறந்தவர் வாயில் இட்டு கும்பநீரை உடலுக்கு தெளித்து, சிவாக்கினியை விறகின் கண் இட்டு எரியச் செய்வர்.

தகனம் செய்த பின்பு நீர்க்கரையில் கொள்ளி வைத்தவர் நீராடி வீடு செல்வர். தீயிலே உடலை அக்கினி பகவானுக்கு ஆகதியாகக் கொடுக்கும் நிகழ்வாகவே தகனம் அமைகின்றது. நீராடிய பின்பு இறந்த முன்னோர்கள் ஆகிய பிதிர்களின் திருப்தியின் பொருட்டு மூன்று முறை இருகைகளிலும் நீர் எடுத்து தர்ப்பணம் செய்வதோடு தகன சம்ஸ்காரங்கள் முடிவடைகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அஸ்தி சஞ்சயனம்

அஸ்தி சஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலில் இருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்து புண்ணிய நீரில் சேர்ப்பதாகும். அஸ்தி - எலும்பு, சஞ்சயனம் கரைத்தல். இடது கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளைச் சாம்பலுடன் எடுத்துப் பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்தலாகும். அஸ்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாகும்.

### நக்ன தானம்

ஒரு நீர்க் கரையை அடைந்து, ஒரு குடத்தில் அரிசியை நிரப்பி அக்குடத்தினை சுற்றி வஸ்திரம் காட்டி வெண்கலப்பாத்திரத்தில் நெய் ஊற்றி பரமசிவனை நினைத்தவாறு இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டு அந்தணருக்கு தானமாக கொடுக்கப்படுவதை நக்ன தானம் எனச் சொல்லப்படுகின்றது.

### அந்தியேட்டி

அந்திய என்பது இறுதியாகும் இஷ்டி என்பது யாகம் எனப்படும். சமயாச் சாரங்களில் உண்டான குறை குற்றங்கள் நீங்கும் பொருட்டு உடலை விட்டு நீங்கிய உயிர், சபிண்டீகரணத்தின் பின்பு மோட்சப் பிராப்தி அடைய வேண்டும் என்று இறுதியாக செய்யப்படும் யாகம் அந்தியேட்டி எனப்படும்.

### அந்தியேட்டியின் வகைகள்

அந்தியேட்டி மூன்று வகைப்படும்

1. தீட்சை பெறாத சிவனடியார்களுக்கும், சமய தீட்சை பெற்றவர்களுக்குமான சமய அந்தியேட்டி ஓர்வகையாகும்.
2. சமய தீட்சையுடன் விசேட அந்தியேட்டி பெற்றவர்களுக்கான விசேட அந்தியேட்டியாகும்.
3. சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை முதலிய தீட்சைகள் பெற்றவர்களுக்கான அந்தியேட்டியாகும்.

### அந்தியேட்டிக்குரிய கிரியைகள்

- விக்னேஸ்வர பூஜை
- பஞ்சகவ்விய பூஜை
- சிவகும்ப பூஜை
- வர்த்தனி கும்ப பூஜை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாஸ்தானத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் எனும் பஞ்ச பூத தத்துவங்களுக்கான பூஜை, திரிசூலம் முதலான தசாயுதங்களின் பூஜை, அக்கினி வழிபாடு எனப் பல கிரியைகள் நடைபெறும்.

### *பாஷாண ஸ்தாபனம் (பாடாண பூஜை)*

ஒரு கல்லை வைத்து இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூஜை. இதனால் பிரிந்த ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாகும்.

### *ஏகோத்திர விருத்தி*

ஏகோத்திர விருத்தி என்பது ஒவ்வொன்றாக அதிகரிப்பது எனப் பொருள்படும். அதாவது வீட்டில் ஆசாரமாக விதிப்படி கல்லை நாட்டி பூசிப்பதாயின் முதல் நாளில் மூன்று தர்ப்பணமும், இரண்டாம் நாள் முதல் தர்ப்பணத்தின் எண்ணிக் கையை ஒவ்வொன்றாகக் கூட்டியும் தர்ப்பணம் செய்தலே ஏகோத்திர விருத்தி எனப்படும்.

### *திலோதகம், வாசோதகம் என்பதன் விளக்கம்*

எள்ளுடன் நீரினால் செய்யப்படும் தர்ப்பணம் திலோதகம் என்றும் சீலையை நீரில் நனைத்து பிழிந்து செய்யப்படும் தர்ப்பணம் வாசோதகம் என்றும் சொல்லப்படும்.

### *பாஷாணமாகிய கல்லு சேர்க்கப்படும் இடம்*

ஆன்மாவைப் பூஜித்த கல்லையும் அதற்குப் படைத்த பலிப் பொருட்களையும் நீர் நிலைகளில் சிறப்பாக புனித புண்ணிய தீர்த்தமான சமுத்திரத்தில் சேர்க்கப்படுகின்றது. குறிப்பாக கீரிமலை, வில்லூன்றி, முகத்துவாரம் போன்ற தூய்மையான கடற் பகுதிகளில் விடப்படுகின்றது.

### *உருத்தி பலி*

இறந்தவருடைய ஆன்மா உருத்திர பதவி அடைய வேண்டும் என்பதற்காக சிவனை வேண்டி நடாத்தப்படுகின்ற பூஜை, பலியிடல் என்பன உருத்திர பலி எனப்படும்.

### *பிரபூத பலி*

உடல் அக்கினியால் தகிக்கப்பட்டதால் சூக்கும தேகமாகிய பிரேதம் அதன் வெப்பத்தினை தாங்க முடியாது வருந்துகின்றது. அதனால் அதற்கு அதிகமான பசி, தாகம் எடுக்கின்றது. அவற்றை நிவர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவும் சந்தோஷப்படுத்தவும் செய்யப்படும் நிகழ்வு பிரபூதபலி எனப்படும். இதுவே எட்டுப்பூசை எனச் சொல்லப்படுகின்றது.

### *ஏகோதிட்டம்*

ஏக என்றால் ஒன்று, திட்டம் நினைத்தல் என்பதாகும். இறந்தவருடைய ஆன்மாவின் பிரேதத்துவ நிலை நீங்கி நினைத்து ஒரு அந்தணரை வரவழைத்து வழங்கப்படுகின்ற தான நிகழ்வு ஏகோதிட்டமாகும். இது மகா ஏகோதிட்டம் எனவும் சிறப்பிக்கப்படுகின்றது. சிறப்புடன் செய்யப்பட வேண்டிய ஏகோதிட்டத்திற்கு 24 வகைத் தானங்கள் அவரவர் சக்திக்கேற்ப அந்தணருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமான அளவு பொருட்களை தானமாகக் கொடுத்து, ஒரு வருடம் முடியும் வரை அவரை எதிர்க்கொள்ளாமல் இருக்கச் செய்தல் வேண்டும்.

### *தானமாகக் கொடுக்கப்படுகின்ற பொருட்கள்*

பவித்திரம், பூணூல், கமண்டலம் (செம்பு) உருத்திராக்கம் மிதியடி (பாதுகை), தண்டம், விபூதிப்பை, தொப்பி, குடை, சால்வை, ஆடை, பொன், மோதிரம், இரத்தினம், நெய், நல்லெண்ணெய், பசு, பூமி, உணவுப்பொருட்கள் அலங்காரப் பொருட்கள் என்பன.

### *சபீண்டீகரணம்*

இறந்தவரை பிதிர் தேவர்களோடு சேர்ப்பதற்காக பிண்டமிட்டுச் செய்யப்படும் கிரியை சபிண்டீகரணம் எனப்படும். சபிண்டீகரணத்தால் ஆன்மா சுத்தி பெற்றுச் சிவலோகம் சேரும். பிண்டத்திற்குரிய பொருட்கள் அரிசி, எள்ளு, உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை என்பவையாகும்.

பிதிர்களுக்குச் செய்யும் இக்கிரியையைப் பிதிர் தேவர்கள் பெற்று இறந்தவர்க்கும் அவரது தலைமுறை முன்னோர்க்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிரர்களைப் படைத்துள்ளார்.

### *மாசிகங்கள்*

மாசிகங்கள் நான்கு வகைப்படும்.

1. *ஊனமாசிகம்* — இறந்த நாள் முதல் இருப்பதேழாம் நாளின் மேல் மூன்று நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

2. *திரைபட்சமாசிகம்* — நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்து நாட்களுள் செய்யப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஊனஷாண் மாசிகம் — நூற்றெழுபது நாளின் மேல் பத்து நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

4. ஊனாப்திக மாசிகம் — முந்நூற்று நாற்பத்தைந்தாம் நாளின் மேல் பதினைந்து நாட்களுக்குள் (ஆப்திகத்திற்கு முன்) செய்யப்பட வேண்டும்.

இந்த நான்கு மாசிகங்களும் இரண்டாம் மாதம் முதல் பன்னிரெண்டாம் மாதம் வரை இறந்த திதிகளின் செய்யப்படும் பதினொரு மாசிகங்களுமாக பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டும்.

குறிப்பு :

கிழக்கு மாகாணத்தில், முக்கியமாக கிராமங்களில் வாழ்கின்ற இந்து மக்கள் இறந்த உடலைத் தகனம் செய்யாது அடக்கஞ் செய்கின்றனர் என்பது எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். பொருளாதாரக் குறை, மனித வலுவின்மை, தலைமுறை தலைமுறையாக அடக்கமே பின்பற்றப்பட்டமை போன்ற காரணங்களினாலும் இம்முறை பின்பற்றப்படுகின்றது.

இவ்வாறு பிரேத அடக்கம் நடைபெறும் சமயங்களில் அவற்றிற்கும் சில கிரியை முறைகள் பின்பற்றப்படுகின்றன. அக்கிரியைகளும் கிராமத்திற்குக் கிராமம் மாற்றங்களுடையதாகவும் காணப்படுகின்றன.

இச்சந்தர்ப்பங்களில் ஊர்பிரமுகர் அல்லது குடும்பப் பிரமுகர் ஒருவர் தலைமை தாங்கி சகல கருமங்களையும் சரியாக நடத்தி முடிப்பார். பிரேதம் கிடங்கில் வைக்கப்பட்டதும் முதலில் மண்போடுதல் இறந்தவரின் வாரிசாக இருப்பார். கொள்ளிக் குடம் உடைத்தல் தந்தைக்கெனில் மூத்த மகன், தாய்க்கெனில் இளையமகன் என்றெல்லாம் வழமையாக இருக்கின்றன.

பிரேத அடக்கத்தின் பின் தகனக்கிரியைகளை அடுத்து நடைபெறும். வீட்டுக்கிரியைகளைப் போன்று மாசிய சிராத்தம், ஆட்டைத்திவசம், வருடச்சிராத்தம் என்பனவும் அவரவர் தகுதிக்கு ஏற்ப இடம்பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. சிராத்தக் கிரியைகள்

*சிராத்தம்*

சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம் எனப்படும். சிரத்தையாவது பற்று, அன்பு என்பதாகும். இறந்தவர்களில் அன்பும் பற்றும் உடையவர்களினாலே தான் இக்கிரியை செய்யப்பட வேண்டும். இக்கிரியையின் உயர்நிலை அன்பு ஆகும். சிராத்தம், பிதிர், கருமம் எனும் பொருள் உடையதாய் எல்லாப் பிதிர் கருமங்களையும் குறிப்பதாகும். ஆயினும் இது நம்நாட்டில் ஆட்டைத்திவசம், திவசம் என்பவற்றையே குறித்து வழங்குகின்றது.

*சிராத்தக் கிரியைகளின் ஒழுங்கு முறைகள்*

01. சங்கற்பம்
02. விநாயக பூஜை
03. வருண கும்ப பூஜை
04. பஞ்ச கவ்ய பூஜை
05. புண்ணியாக வாசனம்
06. அனுக்ஞை
07. உபவீத தாரணம்
08. சூரிய பூஜை
09. மாசிகம் : மாதம் தோறும் மாசிகம் செய்யப்படாவிட்டால் பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டும். ஆப்திக சிராத்தத்திற்கு மட்டும் உரியது. (இவ் விடத்தில் பதினைந்து பிண்டங்கள் போடப்பட வேண்டும்.)
10. அந்தணருக்கு உணவிற்குரிய பொருட்களை வழங்கல்
11. பிண்டப் பிரதானம் (பிண்டம் போடுதல் நான்கு பிண்டங்கள் போடப்பட வேண்டும்.)
12. பிண்ட ஆராதனையும் பிண்ட அலங்களும்
13. எள்ளும் தண்ணீரும் இறைத்தல் - தர்ப்பணம்
14. ஆராதனை
15. சூரிய வழிபாடு
16. அந்தணர் வழிபாடு
17. ஆசீர்வாதம்

*நவ சிராத்தம்*

நவம் என்பது புதிது ஆகும். முதலில் செய்யப்படும் சிராத்தம் நவசிராத்தம் எனப்படும். இந்நிகழ்வின் போது இறந்தவருடைய ஆன்மா பிரேதத் தன்மையில் இருந்து நீங்கப் பிராத்திக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *ஸம்கிதா சிராத்தம்*

நேத்திர மந்திரம் தவிர்ந்த ஏனைய பஞ்சப் பிரம்ம ஷடங்க மந்திரங்களைக் கூறி (ஈசான, தற்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோஜாத, ஹ்ருதய, சிரஸ், சிகா, கவச, அஸ்திர மந்திரங்கள்) பத்து அந்தணர்களுக்கு தானம் கொடுத்தல் ஸம்கிதா சிராத்தம் எனப்படும்.

இச்சிராத்தத்தினால் ஆசாரக் குறைபாட்டினால் ஏற்பட்ட குற்றம் குறைகள் நீங்கி மந்திரசுக்தி உண்டாகி சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

### *சோதகும்ப சிராத்தம்*

சோத என்பது சுத்த ஜலமாகும். இறந்த ஆன்மாவின் பசி, தாகம் என்பன நீங்குவதற்காக சுத்த ஜலம் நிறைந்த கும்பத்தினை அந்தணருக்கு தானமாக கொடுத்தல் ஆகும். ஆன்மாவிற்கு சுகவிருத்தி ஏற்படுத்த நடாத்தப்படுகின்ற கிரியா நிகழ்வே இச் சிராத்தமாகும்.

### *கயா சிராத்தம்*

கயா காசியில் உள்ள தீர்த்தம். இதில் பிதிர்களை எண்ணிச் சிராத்தம் செய்யின் வேறு சிராத்தம் வேண்டியதில்லை. இச்சிராத்தம் பிதிர்களுக்கு திருப்தியைக் கொடுப்பதுடன் போக மோட்சங்களையும் கொடுக்கக்கூடியது. கயா சிராத்தத்தினால் ஏழு கோத்திரத்திலுள்ள நூற்றொரு குலமும் விருத்தியாகும். இப்படியான வேறு பல புண்ணிய தீர்த்தங்கள் சிராத்தம் செய்வதற்கு உண்டு. அயோத்தி, மதுரை, இராமேஸ்வரம், மாயை, காஞ்சி, அவந்தி துவாரகை, திருக்கேதீஸ்வரம், திருகோணமலை, கன்னியா நீரூற்றுகள், கீரிமலை, முன்னேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் போன்ற புண்ணியத் திருத்தலங்களாகும்.

### *ஆட்டைத்திவசம் – ஆப்திகம்*

ஆட்டைத் திவசம் என்பது (ஆப்திகம்) ஒருவர் இறந்த ஒரு ஆண்டின் பின்பு இறந்த மாதத் திதியில் செய்யப்படும் சிராத்தமாகும்.

### *சிராத்தம் – திவசம்*

ஒவ்வொரு வருடமும் ஒருவர் இறந்த மாதப் பட்சத்திதியில் செய்யப்படுவது சிராத்தமாகும்.

### *அமாவாசைத் தர்ப்பணம்*

மாதம் தோறும் வரும் அமாவாசையில் செய்யப்படும் தர்ப்பணமாகும். இது தீர்த்த சிராத்தம் எனவும் அமாவாசைச் சிராத்தம் எனவும் சொல்லப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *சிரார்த்தத்திற்கு கர்த்தாவாக இருப்பதற்கு அதிகாரம் உடையவர்கள்*

புத்திரன், மனைவி, மகள், தமையன், இளைய சகோதரன், சகோதர புதல்வன், தந்தை, தாய், மருமகள், சகோதரி புதல்வன், பிதிர்வழிச் சபிண்டர், சமானோதகன், தாய் வழிச்சபிண்டன், தாயின் சகோதரன், சீடன், குரு, மகளின் கணவன், தோழன், அரசன் ஆகியோரில் முதலில் புதல்வனே இறந்தவரது கடமைகளை செய்வதற்கு அருகதையுடையவனாவான்.

### *பிண்டம் என்பதன் விளக்கம்*

பிண்டம் என்பது தேகம் என்பதாகும். அதாவது இறந்தவரது ஆன்ம ஈடேற்ற பரிபூரண சித்தியின் பொருட்டு அரிசி, உழுந்து, எள்ளு, தயிர், பால், தேன், வாழைப்பழம், நெய் எனும் பொருட்களால் உருண்டையாக உருட்டி பிண்டமிடல் ஆகும்.

பிண்டத்திற்குரிய பொருட்கள் : அரிசி, கறுத்த எள்ளு, உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை ஆகியனவாம். பிதிர்களுக்கு செய்யும் இக்கிரியையை, பிதிர்தேவர்கள் பெற்று இறந்தவர்க்கும் அவரது தலைமுறை முன்னோர்க்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிர்களைப் படைத்துள்ளார்.

### *பிண்டமிடும் சந்தர்ப்பங்கள்*

ஏகோதிட்டத்தின் போது ஒரு பிண்டம் இடப்படும். மாசி கத்தின் போது பதினைந்து பிண்டங்கள் இடப்படும். சபிண்டீகரணத்தின் போது ஏழு பிண்டங்கள் இடப்படும். ஆப்திக வருட சிராத்தத்தின் போது நான்கு பிண்டங்கள் இடப்படும். மாசிகம் செய்யாது விட்டு, ஆப்திக சிரார்தத்தத்தில் மாசிகமும் சேர்த்துச் செய்தால் மொத்தம் பத்தொன்பது பிண்டங்கள் இடப்பட வேண்டும். (சாதாரண திவசத்தில் நான்கு பிண்டங்கள் இடப்படும்.)

### *சிராத்த காரியத்தின் சில பொது விஷயங்கள்*

ஒருவர் இறந்த திதியைக் கொண்டே சிராத்தம் நிச்சயிக்கபடுகிறது. ஒரு மாதத்தில் இரு தடவைகள் சிராத்தத் திதி வந்தால் பின்னைய திதியினைக் கைக்கொள்ள வேண்டும். சிராத்தம் செய்யும் தினத்தில் ஆசௌசம் இருக்குமாயின் குறிப்பிட்ட அந்த ஆசௌசம் கழிந்த தினத்தில் தான் சிராத்தம் செய்ய வேண்டும். ஆசௌசம் கழிந்த தினத்தில் சிராத்தம் செய்ய முடியாவிட்டால் அம்மாத அமாவாசையில்அல்லது ஆடி அமாவாசையில் (தந்தைக்கு) தாய்க்காயின் சித்திரா பூரணையில் அச் சிராத்தம் செய்யப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரார்தத்தில் பெண்ணின் நிலைப்பாடு

◈ சிராத்தம் செய்யும் கர்த்தாவின் மனைவி வீட்டு விலக்காக இருந்தால் அன்று சிராத்தம் செய்யாது மனைவிக்கு வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாள் செய்தல் வேண்டும்.

◈ விதவைப் பெண் வீட்டுக்கு விலக்காயிருக்கும் போது தன் கணவனின் சிராத்தம் வந்தால் வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாளே சிராத்தம் செய்யப்பட வேண்டும்.

◈ சிராத்தத்திற்காகச் சமையல் ஆரம்பமாகி பின்பு ஆசௌசம் வந்தால் அச்சிராத்தம் முடியும் வரை ஆசௌசம் அவரைப் பற்றாது.

## ஒருவருடைய இறந்த மாதம் திதி, பட்சம் தெரியாது விட்டால் சிராத்தம் செய்யும் முறை

◈ ஒருவருடைய இறந்த மாதம் தெரியாது திதி மாத்திரம் தெரிந்தால் அவருக்கு ஆடி, பூரட்டாதி, மார்கழி, மாசி ஆகிய மாதங்களில் ஒன்றில் அவர் இறந்த திதியில் சிராத்தம் செய்ய வேண்டும்.

◈ ஒருவருடைய இறந்த மாதம் தெரிந்து திதி தெரியாது விட்டால் அவர் இறந்த மாதத்தில் அட்டமி, அல்லது ஏகாதசி ஆகிய திதியில் சிராத்தம் செய்யப்பட வேண்டும்.

◈ தாய் தந்தை இருவரது சிராத்தமும் ஒரே நாளில் வந்தால் ஒன்றாக சமையல் செய்து இரு சிராத்தமாக செய்யப்பட வேண்டும்.

◈ ஒருவர் மறதியினால் சிராத்தம் செய்யாது விட்டால் அவர் அந்த மாதத்து தேய்பிறை அட்டமி ஏகாதசி, அமாவாசை ஆகிய ஏதாவதொரு நாளில் தவற விடப்பட்ட சிராத்தத்தினைச் செய்ய வேண்டும்.

◈ ஒருவருடைய தாய் இறந்த ஒருவருட காலத்துக்குள் தந்தை இறந்துவிட்டால் தந்தையின் சிராத்தத்துடன் தாயின் சிராத்தத்தினை செய்து கொள்ள வேண்டும். அதே போன்று தந்தை இறந்த ஒரு வருட காலத்துள் தாய் இறந்து போனால் தாயின் சிராத்தத்துடன் தந்தையின் சிராத்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *மஹாளய சிராத்தம்*

மஹாளயம் என்பது மகான்களாகிய பிதிர்கள் பூவுலகில் தங்கும் காலமே மஹாளயம் என அழைக்கப்படும். புரட்டாசி மாத அபரபட்சமே (தேய்பிறைகாலம்) மஹாளயபட்சத் தினமாகும். இக்காலத்தில் இறந்த பிதிர்களைக் குறித்துத் தர்ப்பணமும் மஹாளய சிராத்தமும் செய்யப்பட வேண்டும். பிதிர் லோகம் நீங்கிய பிதிர்களைப் பெற்றோர்களும் அவர்களது பெற்றோர்களும் தமது பாவ வினைகளை எண்ணியவாறு பசியினாலும், தாகத்தினாலும் தமது பிள்ளைகள் முதலியோரின் இல்லம் நாடி பூவுலகில் தமக்கு நெய், தேன், பாயாசம், எள்ளுடன் நீர் என்பன கிடைக்கமாட்டாதா என ஏங்குகிறார்கள். எனவே தான் இக்ககாலத்தில் மஹாளய காலத்தில் செய்யும் தர்ப்பணமும் மஹாளய சிராத்தமும் சிறப்பானதாகும்.

### *சிராத்தம் செய்யும் இடம்*

இறந்தவர் வீடு, திருநந்தவனம், மலை, திருக்கோயில், புண்ணிய தீர்த்தக்கரை, குருவின் மனை போன்ற கோமயத்தினால் சுத்தி செய்யப்பட்ட இடங்கள் சிறப்பானவை.

### *சிராத்தத்துக்கு உரிய பொருட்கள்*

எள், நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுநெய், பசும்பால், பசுந்தயிர், எண்ணெய், சிகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், தேங்காய், இளநீர், புடோலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, சுக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

### *சிராத்தத்திற்கு ஆகாத பொருட்கள்*

கடலை, பீர்க்கங்காய், பூசனிக்காய், முருங்கைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர் முதலியன.

### *பொருள் இல்லாதவர் சிராத்தம்*

சிராத்தத்திற்குப் பொருள் இல்லாதவர் காய், கனி, கிழங்கு, எள்ளு இவைகளையேனும் சற்பாத்திரப் பிராமணருக்குக் கொடுத்துப் பிரதட்சண நமஸ்காரஞ் செய்து திலதருப்பணம் பண்ணித் தான் திருப்த்தியாக உணவு செய்தல் வேண்டும். தருப்பணஞ் செய்வதற்கும் வல்லமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதிருப்பின் பசுக் கூட்டங்களுக்குப் புல்லைக் கொடுத்தல் மேலாம் - இதற்கு விதி.

'இடி கொண்மாவினாற் பிண்டமேயாயினு மிடுக
இல்லையென்றிடிலெள்ளுடன் புனல்கையாலிறைக்க
வல்லவம் பெறாதாயினுமாவின் மருந்தப்
புல்லதாயினும் போடுக...."

-திருச்செந்தூர் புராணம்

### *சிராத்தத்துக்கு உபயோகமாகும் பத்திரம் – மலர்*

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தை, எருக்கப்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

### *சிராத்தத்துக்கு ஆகாதவை*

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியன.

### *சிராத்த தினத்திலே செய்யத் தகாதன*

தயிர்கடைதல், நெற்குத்துதல், நெய்முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதல் - கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல்.

### *சிராத்தம் கொடுக்க தக்க பாத்திரர்*

பிதிர்தேவர் பொருட்டு இறந்தவர் பெற்ற தீட்சையேனும், அதனின் மேலான தீட்சையேனும் பெற்ற சற்பாத்திரர்களுக்குச் சிராத்தங் கொடுக்கலாம்.

வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து பாவங்களை விலக்கித் தருமங்களைக் கைக்கொண்டு கடவுளை மெய்யன்போடு வழிபடுபவரும், தம்மைப் போலவே பிறரும் நன்நெறியிலே நின்று உய்ய வேண்டு-மென்றெண்ணி அவர்களுக்கு அந்நெறியை உபதேசிப்பவருமானோர் சற்பாத்திரராவர். அசற்பாத்திரார்க்குச் சிராத்தங் கொடுத்தலாகாது. வோதசிவாகமங்களைக் கற்று அதன்வழி நில்லாதோரும், பிறர்க்கு அந்நெறியைக் கூறி வழிப்படுத்தாதோரும் சிராத்தத்திலே அன்புடன் கொடுத்தவைகளைத் திருத்தியுடன் ஏற்றுக்கொள்ளாதவருமானோர் அசற்பாத்திரராவர். இவர்களுக்குச் சிராத்தங் கொடுத்தலாற் பலன் உண்டாவதில்லை.

### *சிராத்தம் நடைபெறும்போது செய்யத்தக்கன*

வேத பாராயணஞ் செய்தல், தமிழ்வேதங்களையும் புராணங்களை-யும் ஓதுதல். இவை பிதிர்களுக்கு மிகத் திருப்தியானவையாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உபசாரம்

சிராத்த முடிவில் ஆசாரியருக்கு உபசாரஞ் செய்து அவரை உபசரித்து வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரஞ் செய்யும் போது அஃது ஆசாரியருக்கென்று எண்ணிக் கொடுத்தலாகாது. பிதிர்தேவர்களுக்கென்றே எண்ணிக் கொடுத்தல் வேண்டும்.

### சிராத்த காலம்

இராக்காலத்திலும், சூரியோதயம் முதல் ஆறு நாளிகை வரையுமுள்ள காலைப்பொழுதிலும், இராக்காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு நாளிகையும் பகற்காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு சத்தியாகாலமும் தவிர்ந்த ஏனைய நேரங்கள் பிதிர்சிராத்தித்திற்கு உரியனவாம்.

### உணவு

சிராத்த காலங்களிலே அதிதிகளுக்கு அன்னங் கொடுத்தல் பெரும் புண்ணியமாகும். பரமசிவனும், பார்வதி அம்மையும், முருகக் கடவுளும், திருமாலும், பிரமாவும், தருமதேவதையுமாகிய சகலருங்கூடி அதிதி வடிவமாய் வருவரென்று மெய்நூல்கள் கூறுகின்றன.

### தனிஷ்டா பஞ்சமி தோஷம்

தனிஷ்டா பஞ்சமி தோஷம் என்பது அவிட்டம், சதயம் பூரட்டாதி, உத்தி ரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஒன்றில் ஒருவர் மரணமடைந்தால் தனிஷ்டா பஞ்சமிதோஷமாகும்.

அவிட்டம், சதயம் ஆகிய நட்சத்திரங்களுக்கு ஆறுமாதங்கள் தோஷமாகும். பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களுக்கு மூன்று மாதங்கள் தோஷமாகும். ரேவதி நட்சத்திரத்திற்கு ஒன்றரை மாதங்கள் தோஷமாகும்.

### தனிஷ்டா, பஞ்சம தோஷம் நீங்க செய்யப்பட வேண்டிய காரியங்கள்

ஆசௌசம் நீங்கும் வரை தீபம், பசு, நீர், பூரண கும்பம் என்பனவற்றை ஒவ்வொருநாளும் இல்லத்தில் வைத்தல். நவதானியம், எள்ளு, நெற்பொரி என்பனவற்றை இல்லத்து வளவெங்கும் தூவுதல் வேண்டும். நீற்றுப்பூசணிக் காயை வாயிலில் கட்டல் வேண்டும். பய நிவர்த்தி நூல் என்பன கட்டுதல் தர்ப்பையினை ஆள் உருவம் செய்து தகனம் முதலியவ்றை குருமூலமாக பஞ்சமித் தோஷ நிவர்த்தி சாந்தி செய்தல், யமனை, எருமை வாகனத்தில் செப்புத்தகட்டில் கீறி பூஜித்து தானமாக கொடுத்தல் நவக்கிரகம், மஹாலட்சுமி, பார்வதி, பரமேஸ்வரன் முதலிய தெங்கங்களை பூஜித்தல். ஹோமம் செய்தல், தசதானங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குதல் என்பன செய்து தனிஷ்டா பஞ்சமித் தோஷ நிவர்த்தி செய்து கொள்ளப்பட வேண்டும்.

### *அபரக் கிரியைகளில் கவனிக்க வேண்டியவை*

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே சங்கற்பித்துக் கிரியைகளைச் செய்தல் வேண்டும். தந்தைக்கு மூத்த புதல்வனும், தாய்க்கு இளைய புதல்வனும் கிரியை செய்யும் வழக்கமும் உள்ளது. புத்திரன் அல்லாத வேறு உறவினர் ஒருவர் கிரியை செய்வதாயின், அவர் பெற்றோரில் ஒருவருக்காவது முன்னர் கிரியை செய்திருக்க வேண்டும்.

### *பிரேதத்தை குளிப்பாட்டுதல்*

அபிடேகம் செய்தல் வீட்டின் தெற்குப் புறத்தில் நடாத்தப்படும். தெற்கே தலைவைத்துக் கிடத்துதல், கர்த்தாவும் ஆசௌசகாரரும் அரப்பு, எண்ணை வைத்தல், அரிசிமா, மஞ்சள் மா, அபிடேகக்கூடு, பால், தயிர், இளநீர், பின்னர் கும்பநீர் அபிடேகம் செய்தல். உடலின் கால் பகுதியில் தொடங்கி தலை வரை அபிடேகம் செய்தல். இவற்றைக் கர்த்தா செய்வார். பன்னீர் முதலிய வாசனைப் பொருள்களைச் சாத்துதல். ஆடை, அணிவித்து அலங்காரம் செய்து, மலர்மாலை வைத்து, பிரேதத்தை மண்டபத்திற்கு கொண்டு வந்து தெற்கு வடக்காகத் தலையை வைத்தல்.

### *மண்டபத்தில்*

சைவக்குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். திருநீறு வைத்தல், சந்தனம், குங்குமம் இடுதல், சுண்ணமிடித்தல், திருபொற்சுண்ணம் பாடுதல், அறுகு, மஞ்சள் பொடி என்பவற்றை உரலில் இட்டு, கர்த்தா உலக்கை பிடித்து இடித்தல், சுண்ணப்பொடி கண்களில் வைத்தல், உடலில் தெளித்தல். (பிரேத அபிஷேகம் செய்யும் போது சுண்ணப்பொடியையும் சேர்த்துக் கொள்ளுதல் விதிமுறையாகும்.) கற்பூரம் கொளுத்துதல், பேரப்பிள்ளைகள் தீப்பந்தம் பிடித்தல், திருமுறை ஓதல், பெண்கள் வாய்க்கரிசி போடுதல் இறுதி வணக்கம், மரியாதை செய்தல், உரிய முறையில் மயானத்திற்கு எடுத்துச் செல்லல். வீட்டிலிருந்து பூதவுடலின் கால்கள் முன்பக்கமாக இருக்கும் வகையில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

### *பிரேத ஊர்வலத்தில்*

கர்த்தா மட்குடக் கும்பம் தோளில் வைத்துக்கொண்டு, தீச்சட்டியுடன் பூதவுடலுக்கு முன்செல்ல வேண்டும். ஆசௌச உரிமையாளர்கள் பின்செல்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மயானத்தில்*

விறகுகள் தெற்கு, வடக்காக அடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதன் மேல் தலை தெற்குப் பக்கமாக அமையும்படி பூதவுடலை வைக்க வேண்டும். சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல், கார்த்தா வாய்க்கரிசி போடுதல், கும்பத்துடன் சுற்றி வந்து தலைப் பக்கமாக கொள்ளி வைத்தல். திரும்பி நின்று பின்புறமாக கொள்ளி வைத்தல். இடப்புறமாகவே சுற்றிவர வேண்டும். இறுதியில் கால்மாட்டில் சென்று பூணூல், பவித்திரம் என்பவற்றைச் சிதையில் போட்டு விட்டு, விழுந்து வணங்கி திரும்பிப் பார்க்காமல் செல்லல் வேண்டும். மரணித்தவரும், கார்தாவும் வாழ்நாள் பூராகவும் மச்சமாமிசம் உண்ணாதவராய் விளங்கினும் விசேட தீட்சை பெற்றவர்களாக இருப்பினும் அந்தியேட்டி செய்து தகனம் செய்யப்படும்.

இதற்கிடையில் வீட்டிலுள்ளோர் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்வர். அணிந்திருந்த ஆடைகளை தோய்த்து உலர்த்துவர். அனைவரும் நீராடித் தூய்மையாய் இருப்பர்.

மயானத்திலிருந்த திரும்பியவர்கள் நீராடித் தம்மைச் சுத்தம் செய்ய வேண்டும். கர்த்தா வீடு வந்ததும் வேப்பிலை உண்டு, பசுவைத் தரிசித்து, ஆரத்தி எடுத்து உட்செல்ல விடுவர். வீட்டில் விளக்கேற்றி அன்னம், இளநீர் படைத்து இறந்தவர்க்கு நிவேதனம் செய்வர். இந்நடைமுறை அடுத்து வரும் நாட்களிலும் இடம் பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. இந்துக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிறப்பு, மரண ஆசௌச காலங்கள்

***ஆசௌசம் என்பது***

பிறப்பு, மரணம், ருதுவாதல் ஆகிய காலங்களில் தீட்டுக் கவனிக்கப்படுகிறது.

இதில் சூதகம் எனப்படும் ருதுவாதலே மிக அதிகமான தீட்டு என சாஸ்திரங்கள் கூறியிருப்பினும் அந்தத் தீட்டு குடும்பத்தவர்களையோ உறவினர்களையோ பாதிப்பதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாத விலக்காகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவருடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்கு தீட்டு இல்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று தொடர்புபடுவதாலும் துடக்கு ஏனையோருக்கும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

பிறப்பு, இறப்பு சம்பந்தப்பட்ட துடக்குகள் கடல் கடந்து வாழ்ந்தாலும் இரத்த உரித்தாளர்களால் காக்கப்பட வேண்டும். உறவு என்பதும், உரிமை என்பதும் உடல் சம்பந்தப்பட்டவை அன்று உளம் சம்பந்தப்பட்டவை அதனால் இடைவெளி இதனால் பாதிக்காது.

மஹோற்சவம் முதலிய ஆலய பெருவிழாக்களின் போது இல்லங்களில் திருமணம் முதலிய எவ்வித விசேட கிரியைகளையும் செய்யாமல் தவிர்த்துக் கொள்வது எம்மை முழுமையாக ஆலய விழாக்களில் இணைத்துக் கொள்வதற்காகவே. இதே போல இல்லத்தில் நமது உறவுகளின் மிக முக்கியமான சில இன்ப துன்ப நிகழ்வுகளின் போது நாம் ஆலயத்திற்கும் போகாமல் அச்செயற்பாடுகளில் எம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்பது ஆசௌசம் காத்தலில் உள்ள ஒரு சிறப்பான அம்சம் இன்னும் பல நுணுக்கமான காரணங்கள் இருக்கின்றன.

தர்ம சாஸ்திரங்கள் வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படையிலேயே ஆசார ஒழுக்கங்களை வகுத்துக் கூறுகின்றன. அதனால் அந்தணர்களுக்கும் அந்தணரல்லாதோர்க்கும் ஆசௌச தினங்கள் வேறுபடுகின்றன. அதனைக் காத்தல் பிதிர்க்கடன் முதலிய அபரக்கிரியைகளைச் செய்தல் முதலியவற்றிலும் சில வேறுபாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. எனினும் அந்தணர்க்கும், ஏனேயோருக்குரிய ஆசாலம் பற்றிய கோட்பாடுகளில் நிறைய ஒற்றுமைகள் உண்டு.

காமிகாமத்தில்,

விப்ரே சுத்திர் தசாஹஸ்யாத்
'த்ரியே த்வாதசாஹ் நிகாத்
தச பஞ்சாஹ்நிகாத் சுத்தி
வைஸ்யே, சூத்ரே ச மாசிகாத்

என ஆசௌச நியமம் கூறுகின்றது.

அந்தணர்களுக்குப் பத்து நாட்களிலும், ஷத்திரியர்களுக்கு 12 நாட்களிலும், வைஸ்யர்களுக்கு 15 நாட்களிலும், ஏனையோருக்கு 31ம் நாளிலும் துடக்கு நீங்குகிறது என்பது பொருள். இதே கருத்தை சுவாயம்புவ ஆகமமும் கூறுகிறது.

இந்நாளில் ஷத்திரியர், வைசியர் என்ற வகுப்பினர் உரிய முறைப்படி காண்டலரிது. மாமிச போசனம் நீங்கிச் சமய, விசேட தீட்சைகளைப் பெற்று நித்திய சிவபூசை வழிபாட்டுடன் இருக்கும் சைவக் குருமாரும். வேறுசிலரும் வைசிய வகுப்பார்போல் நோக்கப்படலாம். ஏனையோர் யாவரும் அந்தணர், அந்தணர் அல்லாதோர் என இரு வகுப்பில் அடங்குவர்.

***ஆசௌசம் எத்தனை நாட்கள்***

பூரண ஆசௌசம் என்பது அந்தணர்களுக்குப் பத்து நாள், மச்ச மாமிச போசனமின்றி சைவசமய ஆசாரப்படி ஒழுகும் நற்சூத்திரருக்கு 15 நாளும் ஏனையோருக்கு 30 நாளும் ஆசௌசம் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளும் நியதிகள்.

ஆலயங்களில் தொண்டு புரியும் சிவகன்மருக்கு 20 நாளும் திராவிட கானம் பாடவல்லாருக்கு 15 நாளும் ஆசௌசம் காக்கப்பட வேண்டும் என்ற ஒரு குறிப்பும் உண்டு. இது அவர்கள் சுத்த சைவர்களாக ஒழுகுவதால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பாரதத்தின் சில பிரதேசங்களில் 21ம் நாள் துடக்குக் கழிக்கும் வழக்கம் மரபு வழி நிலவுகிறது. யாழ்ப்பாணத்தில் சிலர் 16ம் நாள் துடக்குக் கழிக்கின்றனர். மேலே குறிப்பிட்ட விதிவிலக்கைத் தமக்கு சாதகமாக இவர்கள் எடுத்துக் கொள்கின்றனரேயன்றி இதற்குச் சாஸ்திரப்பிரமாணம் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரம அடிப்படையில் ஆசௌசம்

வருணாசிரம அடிப்படை என முன்னர் குறிப்பிட்டவாறு வருணம் பற்றிய விளக்கத்தை மேலே கண்டோம். ஆச்சிரமம் என்பது பிரமசரியம் (மாணவப் பருவம்) கிருஹஸ்தம் (இல்லற நிலை) வானப்பிரஸ்தம் (துறவுக்கு ஆயத்த நிலை) சந்நியாசம் (துறவு) என்ற நான்கு வாழ்க்கைப் படிநிலைகளைக் குறிக்கும். ஆசௌசமானது இல்லறத்தோருக்கு மட்டுமே உண்டு. பிரமச்சாரிகள் தாய் தந்தையருடன் சேர்ந்து வாழ்வதால் அவர்களுக்கும் ஆசௌசம் ஏற்படும். (முற்காலத்தில் குருகுல வாசத்திலிருப்பதால் தீட்டு இல்லை) ஆனால் தாய் தந்தையரை விட்டு விலகித் தனித்திருந்தால் பிரமச்சாரிகளுக்குத் துடக்கு இல்லை.

## ஒருவருடைய துடக்கு அவர் சார்ந்த யார்யாருக்கு வரும்

இதற்கான விளக்கத்தை விழிநாதர் இயற்றிய அகபஞ்ச சஷ்டி நூல் தெளிவாக வரையறுக்கிறது. வைத்ய நாத தீட்சிதீயம், ஆசௌச தீபிகை முதலிய நூல்களும் 'அண்ணா' என்பார் உரைவகுத்த 'யஜுர்வேதிய ஆபஸ்தம்ப அபரப் பிரயோகம்' என்ற நூலும் இந்த விபரங்களைத் தருகின்றன. இவற்றை ஆராய்ந்து தொகுத்த பிரம்மஸ்ரீ. நடனசபாபதிசர்மா அவர்கள் தமது தகன சமஸ்காரம் எனும் நூலின் அநுபந்தத்தில் சில விபரங்களைத் தந்துள்ளார். அவற்றை இக்கட்டுரை பெரிதும் எடுத்தாளுகிறது.

ஓர் ஆண் மகனுக்கு அவனுடைய பிதா (தந்தை), பிதாமகன் (தந்தையின் தந்தை), ப்ரபிதாமகன் (தந்தையின் தாத்தா), விருத்தப் பிதாமகன் (தந்தையின் தாத்தாவின் தந்தை), ப்ரவிருத்தப் பிதாமகன் (தந்தையின் தாத்தாவின் தாத்தா), அதிப்ரவிருத்தப் பிதாதமகன் (அவரின் தந்தை) என்னும் அறுவரும் அவ்வறுவருடைய புத்திரர் (மகன்), பௌத்திரர் (மகனின் மகன்), ப்ரபௌத்திரர் (பௌத்திரனின் மகன்), பிருத்தப் ப்ரபௌத்திரர் (பௌத்திரனின் பௌத்திரன்), ப்ரவிருத்தப் ப்ரபௌத்திரர் (பூட்டானின் மகன்), அதிப் ப்ரவிருத்தப் ப்ரபௌத்திரர் (பூட்டானின் பேரன்) ஆகிய அறுவரும் அவர்களுடைய புத்திரர்களும், தானும் ஆகிய ஏழு தலைமுறையினர் ஆசௌச உரிமையாளர் ஆவர். இவர்கள் சபிண்டர் எனவும் ஞாதிகள் எனவும் அழைக்கப்படுவர். சுற்றத்தவர் என இங்கே அவர்கள் சூட்டப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசௌசம் எத்தனை நாள் எனக் கணிப்பது எப்படி

பூரண ஆசௌசம் என்பது அந்தணருக்கு 10 நாள். ஏனையோருக்கு 30 நாள் எனும் போது மூன்று மடங்காக அமைவது போலவே அதற்குக் குறைந்த நாட்கணக்குகள் கூறப்படும் போதும் அந்தணர்க்குரிய நாளில் மூன்று மடங்காக ஏனையோருக்குக் கொள்ள வேண்டும்.

### ஆசௌசம் எவ்வகைகளில் ஏற்படலாம்

ஆசௌசம் 10 வகையாக ஏற்படலாம் என நூல்கள் விதிக்கின்றன.

பிறத்தல், இறத்தல், சுடுதல், பிரேதத்தின் பின் செல்லல், சுமத்தல், அழுதல், ஆசௌசியின் அன்னம் புசித்தல், ஆசௌசிகளுடன் கலத்தல், வபனம் (முகச்சவரம்) செய்யாமை, சபீண்டிகரணம் முதலியன செய்யாமை என்பவையே அவை.

பிறப்புத் தீட்டிலும் இறப்புத் தீட்டு இரு மடங்கு வலியுடையது. பூப்படைதல் அதைவிட இருமடங்கு மரணத்தினால் ஏற்படும் தீட்டை விட இறந்தவரைத் தகனம் செய்வதால் ஏற்படும் தீட்டு இருமடங்கு வலிமையுடையது எனக் காமிகம் கூறுகிறது.

## ஆசௌச விபரங்கள்

### 01. ஜனன ஆசௌசம் (பிறப்பு சம்பந்தமான துடக்குகள்)

- ஆண் குழந்தை பிறந்தால் 30 நாளும் பெண் குழந்தை பிறந்தால் 40 நாளும் தாய்க்கு ஆசௌசம் உண்டு.
- ஆண் குழந்தை பிறந்தால் தந்தைக்கும், உறவினர்க்கும் (முன்னாள் காட்டியவாறு 7 தலைமுறையினர்க்கு) பூரண ஆசௌசம்.
- பெண் குழந்தை பிறந்தால் குழந்தையின் சகோதரர், தந்தை, தந்தையின் உடன் பிறந்தோர், அவர்களது புதல்வர்கள், தந்தையின் தந்தை, அவருடன் பிறந்தோர் ஆகியோருக்கு பூரண ஆசௌசம்.
- நிறைமாதத்தில் குழந்தை இறந்து பிறந்தாலும், பிறந்து இறந்தாலும் மரண ஆசௌசம் இல்லையெனினும் ஜனன ஆசௌசம் பூரணமாக ஞாதிகள் யாவருக்கும் (உறவுகளுக்கு) உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 7ம், 8ம், 9ம் மாதங்களில் குழந்தை பிறந்து இறந்தாலும் தாய் தந்தையர்க்கு பூரணை ஆசௌசம். சகோதரர் முதலியோருக்கு கேள்விப்பட்டதும் ஸ்நானத்துடன் சுத்தமாகும்.

- கர்ப்பம் கரைந்தால் (கருச்சிதைவு ஏற்பட்டால்) எத்தனை மாதத்தில் அது நிகழ்ந்ததோ அத்தனை நாள் துடக்குத் தாய்க்கு மட்டும் உண்டு. (உதாரணமாக 4ம் மாதத்திலாயின் 4 நாள் பிராமணர்க்கு ஏனையோர்க்கு 12 நாள்)

- ஒரு குழந்தை பிறந்து ஆசௌச நீக்க தினத்தின் பின் அந்தச் செய்தி கேள்விப்பட்டால் தந்தை ஸ்நானத்தால் சுத்தமடைகிறார். ஏனையோர்க்கு ஆசௌசமில்லை.

## 2. மரண ஆசௌசம் (இறப்புப் பற்றிய தீட்டுக்கள்)

- பொதுவான மரணத் துடக்குகள் உறவினர்க்கு பூரணமாக உண்டு. (அந்தணர்க்கு 10 நாள், ஏனையோர்க்கு 30 நாள்)

### ஆண் குழந்தை

- குழந்தை பிறந்து துடக்கு கழியுமுன் இறந்தால் பெற்றோருக்கு மட்டும் பூரண ஆசௌசம். ஏனையோருக்கு ஸ்நானத்தால் சுத்தம்.

- 3 வயதுக்குட்பட்ட குழந்தை இறந்தால் சகோதரர் பெற்றோருக்கு பூரண ஆசௌசம், ஏனையோருக்கு அந்தணராயின் ஒரு நாளும் ஏனையோராயின் 3 நாளும் ஆசௌசம்.

- 3 வயதுக்கு மேல் உபநயனம் செய்யுமுன் இறந்தால் அல்லது ஏழுவயதுக்கு முன் இறந்தால் அந்தணர்க்கு 3 நாள், ஏனையோருக்கு 9 நாள் (பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் பூரண ஆசௌசம்)

### பெண் பிள்ளை

- மூன்று வயதுக்குட்பட்ட பெண் குழந்தை இறந்தால் பெற்றோருக்கும் சகோதரருக்கும் மட்டும் ஆசௌசம், உறவினர்க்கு ஸ்நானத்துடன் நீங்கும்.

- மூன்று முதல் எட்டு வயது வரையான பெண்பிள்ளை இறந்தால் அந்தணராயின் ஒரு நாளும் ஏனையோர் 3 நாளும் காக்க வேண்டும். பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ▶▶ எட்டு வயதின் மேல் திருமணத்திற்கு முன் இறந்தால் அந்தணர் 3 நாளும் ஏனையோர் 9 நாளும் காக்க வேண்டும். (உறவினர்) பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம்.

- ▶▶ திருமணமான ஒரு பெண் இறந்தால் அவளது தந்தை வழி உறவினர்க்கு ஆசௌசம் இல்லை. கணவனுக்கும் அவனது உறவுகளுக்கும் பூரண ஆசௌசம்.

## 3. *விசேட விதிகள்*

- ▶▶ ஒருவர் இறந்தால் அவரது தாயின் தந்தை, தந்தையின் தாய், தாய் மாமன் மனைவி, பெண் கொடுத்த மாமனார், பெண் கொடுத்த மாமியார், தாயின் சகோதரிகள், தாயின் சகோதரர்கள் முதலியோர் அந்தணராயின் 3 நாளும் ஏனையோர் 9 நாளும் ஆசௌசம் காக்க வேண்டும்.

- ▶▶ ஒரு பிறப்புத் தீட்டை காத்துக் கொண்டிருக்கும் போது இன்னொரு பிறப்புத் தீட்டு வருமாயின்,
    1. பெற்றோர் முழுமையாக ஆசௌசம் (அதாவது 30 நாளும்) காக்க வேண்டும்.
    2. உறவுகளுக்கு முதலாவது ஆசௌசக் கழிவுடன் இரண்டாவது கழிந்து விடும்.

- ▶▶ ஒரு மரண ஆசௌசத்தின் நடுவில் ஒரு ஜனன ஆசௌசம் வந்தால் அது முந்திய மரண ஆசௌச முடிவில் கழிந்து விடும். ஆனால் குழந்தையின் பெற்றோருக்கு மட்டும் அவர்களது ஜனன ஆசௌசம் பூரணமாக உண்டு.

- ▶▶ ஓர் ஆசௌசம் காத்துக் கொண்டிருக்கும் போது இன்னொரு மரண ஆசௌசம் வந்தாலும் அது முந்திய தொடக்குடன் கழிந்து விடும். ஆனால் தாய் தந்தை, கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள் இறந்தால் புதிய தீட்டை முழுமையாகக் காக்க வேண்டும்.

### *விசேட விதி விலக்குகள்*

- ▶▶ தற்கொலை மரணத்தினால் தகனம் செய்தவர்களுக்கு மட்டுமே தீட்டு. மற்றையோருக்கு இல்லை.

- ▶▶ தற்கொலை செய்து இறந்தவருக்கு மந்திரமில்லாமல் தகனம் செய்து ஆறுமாதம் கழிந்த பின்பே கிரியைகள் செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யுத்தத்தில் வீரமரணம் அடைந்தோர்க்கு உடனே கிரியைகள் செய்யலாம். இம்மரணத்தினால் உறவினர்க்கு ஆசௌசமில்லை.

## 4. பொது விஷயங்கள்

- ஜனன, மரண ஆசௌசம் மற்றும் சூதகம் என்பன இரவு ஒன்றரை மணிக்கு முன்பானால் முதல் நாள் என்றும் ஒன்றரை மணிக்கு பின்பானால் அடுத்த நாள் என்றும் கணக்கு எடுக்க வேண்டும்.

- ஆசௌச காலத்தில் நித்திய கர்மாநுஷ்டானங்களை மந்திரம் உச்சரிக்காது மானசீகமாகச் செய்யலாம். நித்திய விரதங்களை அனுஷ்டிக்கலாம்.

- தமது தலைமுறையிலுள்ளோரை குறித்து சிராத்தம் மாசிகம் முதலியன செய்யும் தினம் ஆசௌச காலத்தில் வரின் ஆசௌசம் நீங்கிய தினத்தில் அதனைச் செய்யலாம். நித்திய விரதங்களை அனுஷ்டிக்கலாம்.

- ஆசௌசியின் பொருட்கள், அன்னம் முதலியனவும் ஆசௌசம் என்பதால் அவருடன் பிறர் கலத்தலாகாது.

- தானியம், பொன், பசு, ஆடு, வெல்லம், நெய், எள்ளு, கரும்பு, காய்கறி, தண்ணீர், உப்பு, விறகு, எண்ணெய், மருந்து, அரிசி இவற்றுக்கு ஆசௌசம் இல்லை.

ஆசௌசியின் அன்னம் புசித்தவனுக்கும் ஆசௌசம் நேரும். அறியாது புசித்தால் அவ்வுணவு ஜீரணிக்கும் வரை ஆசௌசம். அறிந்து புசித்தால் ஆசௌசியின் ஆசௌசக் கழிவு நாள் வரை அவ்வுணவு புசித்தவரும் ஆசௌசம் காக்க வேண்டும்.

## 5. பூப்பு ஆசௌசம்

மாதவிலக்கு காலத்தில் ஒரு பெண் நான்கு நாட்களும் பூரணமாக விலக்கப்பட்டவளே. ஐந்தாம் நாள் எண்ணெய் ஸ்நானத்தின் பின்னரே அவள் நற்காரியங்களில் கலந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 நாளின் மேல் பூப்பு வந்தால் மேற்கூறிய முறையில் கடைப் பிடிக்கலாம். 20 நாட்களின் முன் வந்தால் ஸ்நானத்தினால் சுத்தமாகும். அதை மாத விலக்காக கொள்வதில்லை.

முன்னர் குறிப்பிட்டவாறு பூப்புத்தீட்டு குடும்பத்தவரையோ, உறவினர்களையோ பாதிப்பதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாதவிலக்காகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவளுடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்கு தீட்டு இல்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று, தொடர்புபடுவதாலும் துடக்கு ஏனையோருக்கும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

நன்றி : இது தான் இந்து மதம் (சர்வானந்தமய பீட வெளியீடு)

## ஆசௌச விளக்கங்கள்

''சம்ஸ்கார பராமரிசம் உண்மை யானும்
அதன் இன்மை கூறப்பட லானும்' - (பிரம்மசூத்திரம் 101)

''புறத்தூய்மை நீரான அமையும்; அகத்தூய்மை
வாய்மையால் காணப்படும்'' - (குற 298)

முனிமொழி என ஔவையார் பாராட்டிய பிரம்மசூத்திரம் சம்ஸ்காரங்கள் மூலமே ஒருவன் ஞானம் பெறத்தக்க பக்குவம் பெறுவான் என்பதை வலியுறுத்துகிறது. தரும சாத்திரங்களிலே நாற்பது சம்ஸ்காரங்கள் பேசப்படுகின்றன. சைவ ஆகமங்கள் அவற்றுள் பதினாறை வலியுறுத்தும். (சம்ஸ் + காரம் = தூய்மைப்படுத்தும் கிரியை)

அவை ஏன்? ஆன்மீக வாழ்வுக்கு உயிர்நாடியான அவை இன்றைய லௌகிகப் போக்குக்கு வேண்டியவை தானா? இவ்வித ஐயவினாக்கள் சைவ மக்களிடையே எழுகின்றன. முக்கியமாக மரண வீட்டுக்குச் சென்று வருவோர் தூய்மை செய்யப்படுவது அவசியம் என்று பழமை பேணுவோர் கருதுகிறார்கள். 'இது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியது' என்று - விளக்கம் அளித்துத் திருப்தியடைகிறார்கள். சுகாதார பரமான தூய்மைக்கும், கிரியா பரமான தூய்மைக்கும் வேறுபாடு உண்டு என்பதை அவர்கள் உணர்வதில்லை. இருவேறு திசையில் போகும் நாகரிகங்களின் மோதுதலில் சிக்கித் தவிப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கி 'துவந்துவங்கள் தூய்மை செய்வதே' இத்தொகுப்பின் நோக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயிகளிடையே கோவிலுக்குப் போதல், விவாகம் போன்ற நற்கருமங்களின் போது, 'எனக்கு ஆசூசம்' என்ற பேச்சு இடம்பெறும். அதை எதிர்த்தும், விஞ்ஞான விளக்கம் கொடுத்து ஆதரித்தும் பேசுவோர் அதிகம். ஆசௌசம் என்ற சொல் திரிந்து பேச்சு வழக்கில் ஆசூசம் என்று ஆயிற்று.

'சுகி' என்றால் சுத்தம். சௌசம் சுத்தம் உடையது. அசுசி = அழுக்கு; ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை. ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு, அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற் செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்ற சொற்களும் மக்கள் பேச்சில் வரும் துடக்கு நீக்கிய பின்னரே நற்காரியங்கள் செய்யலாம். இல்லாவிட்டால், உளரீதியான ஓர் அருவருப்பு உள்ளே இருந்துக் கொண்டே இருக்கும். மனம் ஆன்மீக நற்கருமத்தில் படியாது.

அசுத்தியை (அழுக்கை)ப் போக்க 1) காலம் 2) ஸ்நானம் (நீராடல்) 3) இரண்டும் ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.

01. ஊரில் ஒரு இறப்பு நிகழ்கிறது. அழுகை, மேள ஒலி, ஒலிபெருக்கி மூலம் மரணம் பற்றி ஊரார் அறிகின்றனர். கோவிற் பூசை நிறுத்தப்படும். நற் காரியங்கள் நடைபெறா. ஊர்த்துடக்கு பிரேதம் ஊருக்குள் இருக்கும் காலம் வரை அவ்வூர் மக்களைப் பீடிக்கும். பிரேதம் ஊரிலிருந்து அகற்றப்பட்டதும் துடக்கு நீக்கிவிடும்.

02. இறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று, மரணச்சடங்குகளில் பங்கு பற்றிய அயலவர், உறவினரின் ஆசௌசம் ஸ்நானத்தால் நீங்கும். இரத்த உரித்துக்காரர் (ஆண்வழி) ஆகிய துடக்குக்காப்போர் உறவு பற்றி, மனத்தில் துக்கம் நிலைத்திருக்கும். இறந்தோரை நினைத்து இடையில் அழுகை வரலாம். துன்பம் தோய்ந்த உள்ளத்துடன் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட முடியாது. அதனால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன் முடிவில் நீராடி, ஆசௌசத்தை நீக்கலாம். இங்கு காலம், ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது.

ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம்.

01. பிறப்பு 02. இறப்பு 03. சுடுதல்
04. பிரேதத்துக்குப் பின்னே செல்லல் 05. காவுதல்
06. அழுதல் 07. ஆசௌசிகளிடம் சாப்பிடுதல்
08. கலத்தல்
09. குறித்த கால எல்லையில் தலைமயிரை அகற்றாமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இறந்தவருடைய உரிமைக்காரர் (மகன் அல்லது கொள்ளி வைத்தவர்), இறந்தவரது பிரேதத்தன்மையை நீக்கி விடும் கிரியை ஆகிய சபிண்டீகரணம் செய்யாமை. (மயிர் முழுவதையும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்)

***பிறப்பு***

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகும் துடக்கு நான்கு வகையானது.

1. கருச்சிதைவு நான்கு மாதத்துக்குள் நிகழ்தல்
2. 5 ஆம் 6 ஆம் மாதங்களில் நிகழ்தல்.
3. 7 ஆம் 8 ஆம் 9 ஆம் மாதங்களில் நிகழ்தல்.
4. பத்தாம் மாத தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு முதலிரு நிகழ்ச்சிகளிலும் எத்தனை மாதச்சிசு வெளிப்பட்டதோ அத்தனை நாட்கள் துடக்கு. உதாரணம் 6 ஆம் மாதத்தில் கருச் சிதைந்தால் 6 நாள் துடக்கு. அதன் பிறகு நிகழ்ந்தால்,

இயற்கையாகக் குழந்தை பிறக்கும் போது துடக்குக்காக்கும். நாள் அளவு பிள்ளைப் பேற்றில் பெண் பிறந்தால் 40 நாளும், ஆண் பிறந்தால் 30 நாளும் பிதாமாதா இருவருக்கும் துடக்கு. முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் துடக்குப்போம். துடக்குக்காக்கும் உறவினர் (ஞாதிகள்) 5ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி ஆசௌசத்தைப் போக்கலாம். பூரணகருச் சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும், தந்தை 10 நாள் துடக்குக் காக்க வேண்டும். 10 நாட்களுள் குழந்தை இறந்தால் மரணத் துடக்குக் கொள்ளத் தேவையில்லை. இயற்கையான பிறப்பில் 30 நாள் துடக்குக் காப்பது வழக்கம். (தாய்க்கு 40 நாள் என்ற முறையில் குழந்தையைக் கோவிலுக்கு 40ம் நாள் கொண்டு போகும் வழக்கம் இருந்து வருகிறது.)

சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) ஆசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார். தீட்சை பெற்ற சைவசடயத்தவருள் நியமங்களில் வழுவாது சந்தியாவந்தனம் செய்வோர் 25 நாளும், ஒழுங்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20 நாளும் துடக்குக்காக்க வேண்டும். பிரமச்சாரிக்குத் துடக்கில்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக் கற்றலில் காலம் கழிப்பவர்க்கே பொருந்தும். உறவினருடன் வசிக்கும் பிரமசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது. மூன்றாம் தீட்சையாகிய நிர்வாண தீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு மூன்று நாள் துடக்கும். கோவில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15 நாளும், ஆடல், பாடல், வாத்திய வழிபாடு செய்வோர் 14 நாளும் காக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பு

மரண ஆசௌசமே பிரதானமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம். அதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழந்தை பிறந்து பெயர் இடுவதற்கு முன் ஒரு மாதத்தினுள் இறந்தால் உடன் சுத்தியாம், பல் முளைக்கு முன் (6 மாதத்துள்) ஆயின், ஒரு நாள் துடக்கு. 11ம் ஆண்டுக்குப் பின் முழுத் துடக்கு. பெண்மகவு விவாகம் செய்யுமுன் இறந்தால் பெற்றோருக்கு 3 நாள் துடக்கு. விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் துடக்குக் காப்பர். பிற ஆத்மா சாந்திக் கிரியைகளும் கணவன் வீட்டாரே செய்ய வேண்டும். ஒரு மாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம். அன்றி புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.

ஆண் மரணித்தால் ஆண்வழியில் ஏழுதலை முறை வரை துடக்குக் காக்க வேண்டும். குரு சீட தொடர்பு பற்றி 3 நாள் காக்க. தாய்வழிப்பாட்டன், பாட்டி, மாமன், மாமி, மருமகன், மகள் வயிற்றுப்பேரன் ஆகியோருக்கு 3 அல்லது 6 நாள் துடக்கு.

தானம், வேள்வி, விவாகம் போன்ற நற்கருமங்களுக்கு இடையிலும், போர், உள் நாட்டுக் குழப்பம் மலைச்சரிவு, மரம் விழுதல் பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும், வரும் துடக்கு உடனே நீங்கும். ஒரு வரம்கேட்டு அநுட்டிக்கும் உபவாச விரதத்தின் இடையில் துடக்கு ஏற்பட்டால், தானம் அருச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அநுட்டிக்கலாம். விவாகம் செய்யும் மாப்பிள்ளை, கன்னியைத்தானம் செய்பவர். கோவில் திருவிழாவோ பிரதிஷ்டையோ செய்யும் ஆசாரியர், செய்விப்பவர் (எஜமானர்) துணைப்பணிகள் செய்வோர் ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம். சிராத்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும் போது துடக்குண்டானால் உடன் சுத்தியாம்.

## வீர மரணம்

அரசசேவகர் போரில் இறந்தால் சுற்றத்தாருக்கு உடன்சுத்தி. அவ்விதம் இறந்தவர்களுக்கு அபரக்கிரியையும் உடன் செய்யலாம். (துர்மரணத்திற் போல, குறித்த காலத்தின் பின்செய்ய வேண்டும் என்ற விதியில்லை)

## துர் மரணம்

இது இருவகை

1. புத்திபூர்வமானது ; 2. அபுத்திபூர்வமானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் வகையில் சாதாரண (மந்திரமின்றி) மரணக்கிரியை (சுடதல்) செய்யலாம். பின்னர் உரியகாலத்தில் செய்யும் போது, மந்திரத்துடன் கிரியை செய்யலாம். இதில் சபிண்டருக்குத் துடக்கு இல்லை. ஸ + பிண்டர் = தென்புலத்தாருக்குப் பிண்டம் இடும் கடன் உள்ள உறவு முறைக்குள் அடங்குவோர். தன்னையும் சேர்த்து ஏழுதலை முறை (ஆண் வழியில்) பின்னர் ஆறுமாதம் அல்லது ஒரு வருடம் கழித்துக் கிரியை செய்யும் போது ஒருநாள் காக்க வேண்டும். (மூளைப் பிசகினால் தற்கொலை செய்தவருக்கு நீர்க்கடன் செய்து, துடக்குக் காக்கலாம் என்பர்.) இரண்டாவது வகையான துர்மரணம் இடி, தீ, ஆற்றுப்பெருக்கு, விஷக்கடி போன்ற திடீர் விபத்துக்களால் நிகழ்வது. இதில் கிரியையும் ஆசௌசமும் கொள்ளலாம்.

### *பொருள்கள் சுத்தி*

துடக்கு உடையவர் உபயோகித்த பொருள்கள் குற்றம் உடையன. அவர் துடக்கு முடியும் போது நீர்தெளித்தல், கழுவுதல் போன்றவற்றால் குற்றம் நீங்கும். துடக்கு ஆரம்பிக்குமுன் சில நற்கருமங்களுக்கு எனக் குறித்து எடுத்துவைத்த பொருள்களுக்குக் குற்றமில்லை (தானம், பூசை முதலியவற்றுக்கு உபயோகிக்கலாம்.) பொன், தானியம், வெல்லம், உப்பு, பால், நெய் முதலியவற்றைத் துடக்கு வீட்டில் இருந்து பெறலாம்.

### *கிராம ஆசௌசம்*

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும் வரை சகலருக்கும் துடக்கு இருப்பதால், கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது. சிவபூசை, அநுட்டானம் போன்றவையும் விலக்கப்பட்டுள்ளன. பிரேதம் கிராமத்தை விட்டு அகற்றப்பட்ட பின் பிராயத்தியம் செய்து கர்மானுட்டானங்களைச் செய்யலாம். இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பல வீதிகளுள்ள பெரிய ஊர் ஆனால், தூரத்தில் பிரேதம் இருந்தால், ஓர் எல்லைக்கு அப்பால் வசிப்பவர்களுக்குத் துடக்கு இல்லை. எல்லைகணிக்கும் போது (பூசைக்குரிய) கைமணி அடிக்கும் ஓசைகேட்கும் தூரம் அல்லது) 11 முழம் ஆகிய (விற்) கோல் (நில அளவு) 11 (சுமார் 55 யார்) கொண்ட தூரம் ஆசௌச எல்லையாக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக்கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் துடக்குக் காக்கலாம். அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிற் பிரதிஷ்டை முதலிய கிரியைகளுக்கு நடுவில் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற் சேர்த்த பின் தொடர்ந்து கிரியை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெருநகர்களில் துடக்கு இல்லை. பிரேதத்தைத் தொட்டவர் தூக்கியவர், பின்னே சென்றவர்கள் துடக்கு உடையர்.

துடக்கு நாட்கள் வைதிகமுறையில் முத்தீவளர்க்காதவர்களுக்கு இறந்த நாள்முதல் கணிக்கப்படல் வேண்டும். (சிவபூசையோடு தீ வேட்கும் குருமாருக்குத் தகனம் செய்த நாள் முதல், கணிக்குக.) இரவில் பிறப்பு, இறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்குமுன் உள்ள நாளே கொள்க. (மேலை நாட்டு முறையில், இரவு 12 மணிக்குப்பின் அடுத்த நாள் எனக் கொள்ளக்கூடாது.)

பிறப்புத் துடக்குக்கு இடையில் இறப்பவரின், இறப்புக் கணக்கின் பின்னரே துடக்கு கழியும். இறப்புத் துடக்குக்கு நடுவில் பிறப்பு வந்தால், மரணத்துடக்குடன் அது நீங்கும். ஒரு மரணம் துடக்கு முடியுமுன் மற்றொரு மரணம் வந்தால் பிந்திய துடக்கு முடிவிலேதான் இரண்டு துடக்கும் நீங்கும். முந்தியதற்குரிய கிரியைகளும் பிந்தியதன் முடிவிலேயே செய்ய வேண்டும்.

சபிண்டருள் ஒரு துடக்கு வந்த செய்தி தூர இடத்தில் நிகழ்ந்ததை ஒரு துடக்குக் கழியும் நாளில் கேட்டால் மேலும் இரண்டு நாள் துடக்குக் காக்க அச்செய்தி - உதாரணமாக, அந்நிய தேசத்தில் இறப்பு நிகழ்ந்த செய்தி - மூன்று மாதத்துள் கிடைத்தால் மூன்று இராத்திரி துடக்குக்காக்க ஒருவருஷத்துக்குள் கிடைத்தால் ஒரு நாள் காக்க. ஒருவர் இறந்த செய்தி துடக்கு எல்லைக்குள் கிடைத்தால் மீதி நாட்கள் மட்டும் கொள்க.
உ-ம் : அயல்நாட்டில் ஒருவர் இறந்த செய்தி சகோதரருக்கு 20 ஆம் நாள் கிடைத்தால் மீதி 10 நாள் ஆசௌசம் காக்க துடக்கு எல்லை கழிந்து ஒருவருடத்துள் பெற்றோரின் மரணத்தைக் கேள்விப்பட்டால் மகன் முழுத் துடக்கும் காலமும் காக்க வேண்டும். அவர்களுக்கு உரிய கிரியை அங்கு செய்யப்பட்டிருந்தால், 3 நாள் காத்தால் போதும்.

துடக்குக் காலத்தில் சந்தியாவந்தனம் செய்யலாம். (மானஸீகடா-யேனும் செய்க) ஞான நூல்களை ஓதுவதைச் சமய தீட்சை பெற்றோர் ஒரு நாள் விலக்கலாம். விசேட தீட்சை பெற்றோர் ஆசௌசத்திலும் சிவபூசை செய்யலாம். தாமரை இலையில் நீர் போல் அவர் மனத்தல் துடக்குப்பற்றாது. பக்தி, வைராக்கியம், ஞானம் இல்லாதோர் அகப்பூசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்க. அப்போது குரு அன்றேல் ஒத்த தீட்சையுடையவர் அவருடைய புறப்பூசையைச் செய்ய வேண்டும். ஆனால் எத்தகுதி உடையவரும் பரார்த்த பூசை (பர + அர்த்தம் = பிறர், பொருட்டு கோவில் முதலிய-வற்றில்) செய்யக்கூடாது. ஆசௌசம் உடையவர் கோவில் வெளி வீதியில் நின்று வழிபடலாம். உயர்தீட்சை பெற்றோர் மண்டபத்துள் நிற்கலாம். துடக்குக் காலத்தில் கோவிலுக்குப் பூ எடுத்துக் கொடுக்கக்கூடாது. உருத்திராட்ச மாலை தரிக்கக்கூடாது.

### *பூப்பு*

பெண்கள் முதற்பூப்பு, மாதவிலக்குக் காலத்தில் மூன்று நாள் துடக்குக் கொள். 18 நாட்களுள் மீண்டும் அடையாளம் கண்டால் ஒரு நாள் துடக்கு. 19 நாளில் ஆயின் 2 நாளும், 20 நாள் ஆயின் 3 நாளும் கொள்க. ஆன்மீக வாழ்வில் நம்பிக்கையுள்ளோர் 3 நாளும் முழுகுதல் செய்யார். இக்காலத்தில் அகப்பூசை வழிபாடு செய்யலாம். அவர்களை அறிந்தோ அறியாமலோ தொடுவோர் முழுகி, உரிய மந்திர ஜபம் செய்து சுத்திபெறுகின்றனர்.

### *மயிர் களைதல்*

துடக்கு நீக்கும் போது மயிர்களைதல் அவசியம் என முன்னர் கூறப்பட்டது. சில கிராமங்களில் சவக்கிரியை தொடங்குமுன் வழித்தல் வழக்கமாய் உள்ளது. துடக்குக் கழியும் தினத்தில் கிரியைகளுக்கு முன் களைதலே சாத்திர சம்பிரதாயம். மத்தியானத்துக்குப் பின்மயிர் களைதல் விலக்கப்பட்டுள்ளது. தலைமுதல் மயிர்நீக்கப்படுவதால் முண்டிதம் எனப்படும். மகன் கடமை செய்ய முடியாமல், இன்னொருவர் தீக்கடன் முதலியன செய்தால் அவரும் அதனைச் செய்யலாம்.

நன்றி : ஆசௌச விளக்கம் ஆ. சபாரத்தினம்

### *01. மஹாளய பட்சத்தின் சிறப்பு யாது?*

தட்சிணாயனகாலம் தேவர்களுக்கு இரவாகும். இக்காலத்தில் வரும் ஐந்தாவது கிருஷ்ண பட்சம் பிதிர்தேவதைகளுக்குரிய காலமாகச் சொல்லப்படுகிறது. சூரியன், கன்னி ராசியில் சஞ்சரிக்கும் இந்தப் பதினைந்து நாள்கள் ‘மஹாளய பட்சம்’ எனப்படும். இவ்வேளையில் அனைத்துப் பிதிர் தேவதைகளும் தங்களது சக்தியைப் பெற்று சஞ்சரிக்கும் இவ்வேளையில் இறந்தவர்க்கு வழிபாடுகள் செய்வது சிறப்புடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பட்சத்தில் ஒரு நாளிலாவது கட்டாயம் பிதிர்களுக்குத் தர்ப்பணம் (நீர்க்கடன்) செய்ய வேண்டும் என்பது சாஸ்திரம். வடநாட்டில் உள்ளவர்கள் இப்பட்சத்தில் ஒரு நாளாவது கங்கைக்குச் சென்று நீராடி, பிதிரர்களுக்குத் தர்ப்பணம் செய்வார்கள். குளித்து முடித்து ஈர ஆடையை எதிர்முகமாகப் பிழிந்து அந்நீரைவார்த்து நீர்க்கடனாகக் கொடுப்பதுவும்.

குடுமியை - முன்புறமாகப் பிழிந்துவார்த்து அந்நீரைப் பிதிர்க்குரியதாக்கி நீர்க்கடன் செய்வதுண்டு. நம் முன்னோர்களுக்கு இவை மிகவும் முக்கியமான ஆகாரமாகச் சொல்லப்படுகிறது.

## 02. *சிராத்த காலத்தில் தகப்பனார், பாட்டனார், முன் பாட்டனார் ஆகிய மூவர் பெயர்களையும் சொல்லிச் செய்வதற்கான காரணம் யாது?*

இதனை இரு வகையாகச் சொல்லலாம்.

1. ஒரே பெயரில் வேறு எவரேனும் பிதிர்களாக இருக்கலாம். அதனால் அவருக்கு முற்பட்டவரைச் சொல்கிறோம். இனங்கண்டு கொள்வதற்காக ஒரு வேளை அதிலும் ஒற்றுமையிருந்துவிட்டால், என்ன செய்வது? அதற்காக மூன்றாமவர் பெயர் உதவக்கூடும் அல்லவா? அதற்காக சொல்கிறோம். மூன்று பெயர்களும் ஒன்று போலச் சேர்வது என்பது பொதுவாக அமைவதில்லை. மிகவும் அபூர்வம்.

2. அறிவியியல் பூர்வமான கருத்தாவது - தந்தையின் சுக்கில தாதுவிலிருந்தே குழந்தை பிறப்பாபகச் சொல்லப்படுகிறது. குழந்தையின் உற்பத்திக்கான மூலமாகவுள்ள இந்தச் சுக்கில தாதுவில் 84 கூறுகள் (அம்சங்கள்) உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அக்கூறுகளுள் 28 கூறுகள் - அவன் சாப்பிடும் உணவு நீர் ஆகியவற்றால் உண்டாகின்றன. மற்ற 56 கூறுகள் அவனுடைய முன்னோர்கள் மூலம் கிடைக்கின்றன. முன்னோர்கள் மூலம் வரும் இந்த 56 கூறுகளுள் தந்தையிடமிருந்து 21ம், பாட்டனாரிடமிருந்து 15ம், முன் பாட்டனாரிடமிருந்து 10ம், நான்காம் பாட்டனாரிடமிருந்து 6ம், ஐந்தாவது பாட்டனாரிடமிருந்து 3ம், ஆறாவது முதாதையரிடமிருந்து 1ம் ஆக 56 கூறுகளும் கிடைக்கின்றன என்பது அறிவியல் உண்மை. இதிலிருந்து ஒருவனுக்கு, அவனோடு சேர்ந்து ஏழு தலைமுறை வரை பிண்டத் தொடர்பு இருக்கிறது. இந்தக் கணக்கில் தான் தாயாதிகளை கணக்கில் எடுத்துக் கொள்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுள் பிண்டத் தொடர்பு, படைத்தல் சக்திக்கு அதிக நெருக்கமாக இருப்பது 21, 15, 10 ஆகிய கூறுகளையுடைய முதல் 3 தலைமுறைகளில் தான் அமைகின்றது.

பத்துக்கு குறைவான கூறுகளைத் தருபவர்களின் அம்சங்கள் (கூறுகள்) மிகவும் குறைவாக இருப்பதால் அவை சிறு அம்சங்களாகின்றனவே தவிர, படைத்தலுக்கு அவ்வளவாகத் துணையாவதில்லை. அதிகமாக அம்சங்களை உதவி படைப்புக்குத் துணையாவது தந்தை, பாட்டனார், முன்பாட்டனார் ஆகியோருடைய தாதுத் தொடர்பேயாகும். அதனால் தான் சிராத்த காலத்தில் இம் மூன்று பெயர்களைச் சொல்லியழைத்து அவர்களுக்குப் பிண்ட தர்ப்பணம் செய்கின்றோம். (முன்பாட்டனார் முப்பாட்டனார்)

***03. பிண்டதானம் தருவதன் கருத்து யாது? இதனால் பிதிர்களுக்குத் திருப்தி ஏற்படுவது எங்ஙனம்?***

படைப்பின் ஆரம்பத்தில் முதலில் உயிர்களே உற்பத்தி செய்யப்பட்டாக வைதிக விஞ்ஞானம் கூறுகிறது. அவை இருபகுதிகளாகப் பிரிந்தன.

1. பிருகு குளமையான உயிர் 2. அங்கிரா வெப்பமான உயிர், வெப்பமான (அக்கினேயமான) உயிர்களிலே சோமம் (குளுமை) பெய்யப்படும் பொழுது படைப்பு நடைபெறுகிறது. பூமியை 3 அங்குலம் தோண்டினால் அதற்கு அக்கினியின் தொடர்பு ஏற்படுகிறது. அதில் விதை உருவமான ஸோமத்தை விதைத்தால் முளைவிடுகிறது. அதைப் பாதுகாக்க சௌம்ய பிராணன்கள் (குளமை) தேவைப்படுகிறது. இதைக் கவனித்தால் அக்கினி சோமம் இவையிரண்டுங் கலந்ததே சிருஷ்டி (படைப்பு) என்பது தெரியவரும். பித்ருக்கள் (முன்னோர்கள்) சோம உயிர்கள், சோமனின் இனம் ஸோமனின் பக்கத்தையே நாடும். அதனால் தான் பித்ருக்கள் குளிர்ச்சியான (சோமம்) சந்திரலோகத்துக்குப் (சோமன் = சந்திரன்) பக்கத்திலேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் சோமப் பிரதானமாக எள் போன்றவை கலந்த பிண்டங்களைத் தருவோமேயானால் அவர்கள் குளிர்ச்சியும் தங்களுக்கென்று குறித்துள்ள (குளிர்ச்சி நிறைந்த) சந்திரலோகத்திற்கு அருகில் உள்ள பித்ருலோகத்தை அடைந்து அங்கு குளுமையாக, சந்தோஷத்துடன் (திருப்தி அடைந்து) வாழ்கிறார்கள். இதுவே பிண்டதானம் செய்யப்படுவதின் கருத்தாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. *தருப்பணரூப சிராத்தம் என்பது யாது?*

இது அமாவாசையில் செய்யப்படுவதாகும். அன்னசிராத்தத்தில் அன்னபிண்டமும், ஆமசிராத்தத்தில் ஆமபிண்டமும் இடல் வேண்டும். அன்னசிராத்தத்தில் ஆமபிண்டமும் ஆமசிராத்தத்தில் அன்னபிண்டமும் இடுதல் குற்றமாகும்.

அன்னசிராத்தம் அபராணதில் செய்தல் வேண்டும். ஆமசிராத்தம் சங்கவகாலத்தில் செய்து போசனம் அபராணத்திலும் செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பிராதக்காலம் | - | சூரிய உதயம் முதல் ஆறநாழிகை வரை |
| சங்கவ காலம் | - | அதன்மேல் பன்னிரண்டு நாழிகை வரை |
| மத்தியானம் | - | அதன்மேல் பதினெட்டு நாழிகை வரை |
| அபராணம் | - | அதன்மேல் இருபத்திநாலு நாழிகை வரை |
| சாயான்னம் | - | அதன்மேல் முப்பது நாழிகை வரை |

*சூரிய உதயம் காலை ஆறுமணியாயின்*

| | | |
|---|---|---|
| பிராதக்காலம் | - | காலை 6.00 - 8.24 வரை |
| சங்கவ காலம் | - | அதன்மேல் - 10.48 வரை |
| மத்தியானம் | - | அதன்மேல் பகல் 1.12 வரை |
| அபராணம் | - | அதன்மேல் மாலை 3.36 வரை |
| சாயான்னம் | - | அதன்மேல் மாலை 6.00 வரை |

சிவபெருமான் - அபிடேகத்தாலும், பிதிர்கள் - தர்ப்பணத்தாலும் மகிழ்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. பஞ்சாங்கம்

பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கங்களை கொண்டது. பஞ்ச என்றால் ஐந்து என்றும் அங்கம் என்பது உறுப்பு ஆகும்.

அவை,

1) வாரம் 2) திதி 3) நட்சத்திரம் 4) யோகம் 5) கரணம்

## 01. *கிழமை*

பஞ்சாங்கத்தில் வாரம் என்பது கிழமை ஆகம். 7 கிழமைகளில் ராகு கேது தவிர மற்ற 7 கிரகங்களுக்கு ஆதிக்கம் இருப்பதை காட்டும்.

அவையாவன,

| | |
|---|---|
| ஞாயிற்றுக் கிழமை | சூரியன் |
| திங்கட் கிழமை | சந்திரன் |
| செவ்வாய்க் கிழமை | செவ்வாய் |
| புதன் கிழமை | புதன் |
| வியாழக் கிழமை | குரு |
| வெள்ளிக் கிழமை | சுக்கிரன் |
| சனிக் கிழமை | சனி |

## 02. *திதி*

திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரமாகும். அமாவாசையில் சூரியன் சந்திரன் இணைந்திருப்பது. பௌர்ணமி என்பது சூரியனும் சந்திரனும் 180 பாகையில் எதிர் எதிர் இருப்பது. சூரியனும் சந்திரனும் சேர்ந்திருக்கும் அமாவாசையில் இருந்து சந்திரன் ஒவ்வொரு நாளும் விலகி செல்ல ஒரு திதிக்கு 12 பாகை ஆகும். இவ்வாறு 30 திதிகள் கணக்கிடப்படுகிறது. அவை வளர்பிறை திதிகள் மற்றும் தேய்பிறை திதிகள் என்று அழைப்பர்.

அவை,

*வளர்பிறை திதிகள் அமாவாசையிலிருந்து,*

| | | |
|---|---|---|
| 1) பிரதமை | 2) துவிதியை | 3) திருதியை |
| 4) சதுர்த்தி | 5) பஞ்சமி | 6) சஷ்டி |
| 7) சப்தமி | 8) அஷ்டமி | 9) நவமி |
| 10) தசமி | 11) ஏகாதசி | 12) துவாதசி |
| 13) திரயோதசி | 14) சதுர்தசி | 15) பௌர்ணமி |

மொத்தம் 15 திதிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல தேய்பிறை திதிகள் பௌர்ணமியிலிருந்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | பிரதமை | 2) | துவிதியை | 3) | திருதியை |
| 4) | சதுர்த்தி | 5) | பஞ்சமி | 6) | சஷ்டி |
| 7) | சப்தமி | 8) | அஷ்டமி | 9) | நவமி |
| 10) | தசமி | 11) | ஏகாதசி | 12) | துவாதசி |
| 13) | திரயோதசி | 14) | சதுர்தசி | 15) | அமாவாசை |

மொத்தம் 30 திதிகள் உள்ளன.

### 3) *நட்சத்திரங்கள்*

பஞ்சாங்கத்தில் 3வது அங்கமாக நட்சத்திரங்கள் இருக்கின்றன. ஜோதிடத்தில் நட்சத்திரங்கள் பங்கு மிக முக்கியமானதாகும். ஒரு கிரகம் எந்த நட்சத்திரத்தில் அமர்ந்திருக்கிறதோ அதற்கேற்ப நன்மை தீமைகளை வழங்குகின்றன.

மேலும் சுப முகூர்த்தம் குறிக்க, திருமண நிச்சயம், காது குத்துதல், திருமண முகூர்த்தம் குறிக்க, கிரகப்பிரவேசம், வீடு கட்ட துவங்குதல், இறந்தவர்களின் அடைப்பு காலம், கடன் வாங்குதல், கடன் கொடுத்தால் போன்ற பல விசயங்களில் நட்சத்திரங்களின் பங்கு முக்கியமானதாகும். அவற்றில் பொதுவாக நல்ல நட்சத்திரங்கள், தீதுறு நட்சத்திரங்கள் (தீமை) என்று பிரிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 27 நட்சத்திரங்கள் உள்ளன.

அவை,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | அஸ்வினி | 2) | பரணி | 3) | கார்த்திகை |
| 4) | ரோகினி | 5) | மிருகசீரிடம் | 6) | திருவாதிரை |
| 7) | புனர்பூசம் | 8) | பூசம் | 9) | ஆயில்யம் |
| 10) | மகம் | 11) | பூரம் | 12) | உத்திரம் |
| 13) | ஹஸ்தம் | 14) | சித்திரை | 15) | சுவாதி |
| 16) | விசாகம் | 17) | அனுஷம் | 18) | கேட்டை |
| 19) | மூலம் | 20) | பூராடம் | 21) | உத்திராடம் |
| 22) | திருவோணம் | 23) | அவிட்டம் | 24) | சதயம் |
| 25) | பூரட்டாதி | 26) | உத்திரட்டாதி | 27) | ரேவதி |

### 04. *யோகம்*

பஞ்சாங்கத்தில் 4வது அங்கமாகும். யோகம் என்பது ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சூரியனுக்கும், சந்திரனுக்கும் உள்ள தூரமாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சூரியன் உள்ள தூரம் மற்றும் சந்திரன் உள்ள தூரம் இரண்டையும் கூட்டினால் கிடைப்பது ஆகும். யோகம் மொத்தம் 27 ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | விஷ்கம்பம் | 2) | ப்ரீதி | 3) | ஆயுஷ்மான் |
| 4) | சௌபாக்யம் | 5) | சோபனம் | 6) | அதிகண்டம் |
| 7) | சுகர்மம் | 8) | திருதி | 9) | சூலம் |
| 10) | கண்டம் | 11) | விருத்தி | 12) | துருவம் |
| 14) | ஹர்ஷனம் | 15) | வஜ்ரம் | 16) | சித்தி |
| 17) | வியதீபாதம் | 18) | வரீயான் | 19) | பரீகம் |
| 20) | சிவம் | 21) | சித்தம் | 22) | சாத்தியம் |
| 23) | சுபம் | 24) | சுப்பிரமம் | 25) | பிராம்யம் |
| 26) | ஐந்திரம் | 27) | வைதிருதி | | |

### 05. *கரணம்*

கரணம் பஞ்சாங்கத்தில் 5வது அங்கமாகும். ஒரு திதியில் பாதி அளவை குறிப்பது கரணம் ஆகும். ஏற்கெனவே ஒரு திதி என்பது 12 பாகை என்று பார்த்தோம், எனவே கரணம் என்பது 6 பாகை ஆகும். மொத்தம் 11 வகை கரணம் உண்டு.

அவை,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | பவம் | 2) | பாலவம் | 3) | கௌலவம் |
| 4) | தைத்துளை | 5) | கரசை | 6) | வனிசை |
| 7) | பத்திரை | 8) | சகுனி | 9) | சதுஷ்பாதம் |
| 10) | நாகவம் | 11) | கிம்ஸ்துக்னம் | | |

இந்த ஐந்து அங்கங்களையும் கொண்டு பஞ்சாங்கம் பார்க்க வேண்டும். உங்கள் பஞ்சாங்கத்தில் வாக்கியமாக இருந்தாலும் சரி திருகணிதமாக இருந்தாலும் சரி ஆங்கில தேதி மற்றும் தமிழ் தேதி கொடுக்கப்பட்டிருக்கும்.

ஜோதிடப்படி காலை சூரிய உதயம் முதல் அடுத்த சூரிய உதயம் வரை ஒரு நாள் ஆகும். சூரிய உதயம் காலை ஆறு மணி எனில் அதுவே அன்றைய நாள் ஆகும். 6 - 12 (பகல்) வரை முன்பகல் காலம் 12 - 6 (பகல்) பிற்பகல் காலம் ஆகும். 6 - 12 (இரவு) முன்னிரவு காலம் 12 -6 (இரவு) பின்னிரவு காலம்.

தமிழ் திகதியில் அன்றைய நாளில் எது வரை நட்சத்திரம் உள்ளது அடுத்த நட்சத்திரம் தொடங்கும் நேரமும் மற்றும் கிழமை, கரணம், திதி, யோகம் கொடுக்கப்பட்டிருக்கும் அதனை கொண்டு கணக்கிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகூர்த்த சுத்தம் நல்ல நாள் பார்ப்பது எப்படி?

*முகூர்த்த சுத்தம் குறிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்*

- அன்றைய தினம் கரிநாள் மற்றும் தனிய நாட்களாக இருக்கக் கூடாது.
- சமநோக்கு நாளாக இருந்தால் மத்திம பலன், மேல்நோக்கு நாள் நல்ல பலனை தரும்.

  (இந்த விதி வீடு கட்ட துவங்கும் பணி, போர் (Borewell) போடுவது, கிணறு வெட்டுவது போன்றவற்றில் மாறுபடும்.)
- சுப நிகழ்ச்சி நடக்க இருக்கும் தமிழ் மாதத்தில் இரண்டு அமாவாசையோ அல்லது இரண்டு பௌர்ணமியோ வரக்கூடாது. ஜோதிட விதிப்படி அவை சூன்ய மாதங்கள் எனப்படும்.
- முகூர்த்தம் குறித்த தினத்தில் சுப கிரகங்களான குருவும் சுக்கிரனும் அஸ்தமனம், வக்கிரம் நிலையில் இல்லாமல் இருக்க வேண்டும்.
- சுப முகூர்த்தம் குறித்த நேரம் கௌரி பஞ்சாங்கப்படி சுபவேளையாக இருக்க வேண்டும்.
- சுப ஹோரை காலமாக இருத்தல் நல்லது.
- அன்றைய தினத்தில் குறித்த முகூர்த்தம், நடத்தப்படும் சுபகாரியத்திற்கு தகுந்தவாறு அமைய வேண்டும்.

குறிப்பு:

சுப முகூர்த்தம் குறிக்க நாம் பின்பற்ற வேண்டிய முறைகளின்படி பார்த்தால் எவருக்கும் சுப முகூர்த்தம் தினம் அமையாது என்பது உண்மை தான். ஆகவேதான் முதன்முதலாக நான் கூறியது, சுப முகூர்த்தம் குறிக்க நாள், திதி, நட்சத்திரம், மற்றும் லக்கின சுத்தமாக அமைந்தாலே ஓரளவுக்கு போதுமானது தான். இங்கு லக்னம் என்பது முகூர்த்த லக்னம் ஆகும்.

இதிலும் லக்னம் மற்றும் லக்கினத்திற்கு 7ஆம் வீடும், 8ஆம் வீடும் கண்டிப்பாக எந்த கிரகமும் இல்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும்.

திருமணம் சுப முகூர்த்தம் குறிப்பது

திருமணப் பொருத்தம் என்பது இறைவனின் அருள், அப்படி இறைவன் அருளால் நடைபெறும் திருமணத்தை சரியான சுப முகூர்த்த நேரம் குறித்து நடத்த வேண்டும். ஆண் பெண் ஜாதகத்தில் கட்டங்கள் சரியாக இல்லையென்றாலும் முகூர்த்த நேரத்தில் கட்டும் தாலி பல பிரச்சனைகளை தள்ளிவைக்கும் வலிமை உண்டு. ஆதலால் நல்ல ஜோதிடரிடம் சென்று முகூர்த்தம் குறித்து திருமணம் நடத்துவது சிறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமணம் முகூர்த்தம் குறிப்பது பற்றி தெரிந்துக்கொள்வோம்

- காலெண்டடரில் உள்ள முகூர்த்த நாளில் திருமணம் தேதியை நீங்களே குறித்துக்கொள்ளாதீர்கள் நன்மை பயக்காது. மேலும் அது பொதுவானது. இருப்பினும் இந்த பதிவில் எப்படி முகூர்த்தம் குறிப்பது என்று ஓரளவுக்கு தெரிந்து கொள்வோம். என்னென்ன நாம் பார்க்க வேண்டும் என்று பார்ப்போம்.

- இறைவன் அருளால் முன்னோர்கள் ஆசியுடன் சுற்றம் சூழ சாட்சியாகக் கொண்டு, மணமகன் மணமகளின் திருமாங்கல்ய சரடை மூன்று முடிச்சு கட்டும் நேரம் அமையவேண்டும். சுபமுகூர்த்தம் குறிப்பது பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

### சுப முகூர்த்தம் குறிக்கும்போது நாம் கவனிக்க வேண்டியது

- ஆண் பெண் இருவரின் ஜாதகத்தை ஆய்வு செய்து லக்கின பொருத்தம், பாவக ஆய்வு, நட்சத்திர பொருத்தம், தோஷங்கள் ஆய்வு பார்த்துதான் திருமண பொருத்தம் செய்ய வேண்டும்.

- முகூர்த்தம் குறிக்க பெண்ணின் ஜாதகமே பிரதானம், இருப்பினும் சுபமுகூர்த்தம் என்ற நாழிகை குறிக்க, நல்ல நாள், நல்ல கிழமை, நல்ல திதி, நல்ல யோகம், தசா புத்திகள், கோட்சர நிலவரம், தாரா பலம் மற்றும் சந்திர பலம் எவ்வாறு இருக்கிறது என்று மணமக்கள் இருவரின் ஜாதகம் கொண்டும் ஆய்வு செய்து குறிக்க வேண்டும்.

(குறிப்பு : பெண்ணுடைய ஜாதகம் பிரதானம் ஆண் ஜாதகத்தில் சரியாக இல்லாமல் இருந்து பெண் ஜாதகத்தில் சில அமைப்புகள் நன்றாக உள்ளது என்றால் முகூர்த்தம் குறிக்கலாம்.)

- ஆணின் ஜாதகத்தில் உள்ள தோஷத்தை விட பெண்ணுக்கு அதிகமாக தோஷம் உள்ளது என்றால் பொருத்தம் செய்ய கூடாது. சமமாக இருந்தால் திருமணம் செய்யலாம்.
- முகூர்த்தம் குறிக்க பெண்ணின் நட்சத்திரத்தை கொண்டு தாரா பலம், சந்திர பலம் கணித்துப் பார்க்கவேண்டும்.
- முகூர்த்த லக்னம் குறிக்க சுப லக்னங்களான ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மாசி மாதத்தில் வரும் கும்பம் லக்னம் உத்தமமாக இருக்கும்.
- சூரிய உதயத்திற்கு முன், பின் அரை நாழிகைகளில் அமையும் கோதூளி லக்கினமும் சுபகாரியங்களுக்கு ஏற்றதாகும். எந்த லக்கினமாக இருந்தாலும் கோதூளி லக்கினத்தில் திருமணம் செய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முகூர்த்த லக்னத்திற்கு 2,7,8ம் இடத்தில் எந்த கிரகமும் இல்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும்.(சுப கிரகங்கள் கூட இருக்கக்கூடாது)
- பவம், பாலவம், கௌலவம், தைத்துளை, கரசை, இந்த ஐந்து கரணங்களும் சுபமானதாகும்.
- முகூர்த்தம் குறிக்க உகந்த நாட்கள் திங்கள், புதன், வியாழன், வெள்ளி மட்டுமே. ஞாயிற்றுக்கிழமை மத்திமம் பலன் மட்டுமே.
- அஸ்வினி, ரோகினி, பூசம், ஹஸ்தம், அனுஷம், மூலம், திருவோணம், உத்திரட்டாதி மற்றும் ரேவதி முகூர்த்தம் குறிக்க உன்னத நட்சத்திரங்கள் ஆகும்.
- சுக்கிரன், குரு அஸ்தமனம் ஆகாமல் இருக்க வேண்டும்.

### *திருமணம் சுப முகூர்த்தம் குறிக்க தவிர்க்க வேண்டியவை*

- ஆடி, மார்கழி மாதங்கள் மற்றும் மலமாதங்களில் திருமண முகூர்த்தம் குறிக்கக்கூடாது. மலமாதம் என்றால் ஒரே மாதத்தில் இரண்டு பௌர்ணமியோ அல்லது அமாவாசையோ வருவது.
- தீதுறு நட்சத்திரங்களான பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயில்யம், பூரம், பூராடம், பூரட்டாதி, கேட்டை, விசாகம், சித்திரை, சுவாதி, மகம், உடைபட்ட நட்சத்திரம் முகூர்த்த நாட்களைத் தவிர்க்க வேண்டும்.
- அஷ்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி திதிகள் மற்றும் கரிநாள், மரண யோகம் இவற்றையெல்லாம் தவிர்க்கலாம்.
- ஆண் பெண் இருவருக்கும் ஜென்ம நட்சத்திர நாள், சந்திராஷ்டம நாட்களில் முகூர்த்தம் குறிக்கக்கூடாது.
- சனி, செவ்வாய்க் கிழமைகளில் முகூர்த்தம் குறிப்பதைத் தவிர்க்கலாம்.
- இருவரது ராசி / லக்னமும் ஒருவருக்கொருவர் 6, 8, 12 ஆம் வீடுகளில் மறையக்கூடாது.

  முகூர்த்த நேரம் குறிக்கும்பொழுது ராகு காலம் எமகண்டம், குளிகை போன்ற நேரங்களில் திருமணம் செய்யக்கூடாது என்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.
- முகூர்த்த லக்னத்திற்கு 2,7,8ம் இடத்தில்பாப கர்த்தாரி கூடாது.
- பொதுவாக மேஷம், சிம்மம், விருச்சிக லக்னங்களை தவிர்க்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. எண் கணித ஜோதிடம்

எண் கணிதம் எந்த வகையில் நம் வாழ்க்கையில் திருப்புமுனையாக இருக்கிறது அல்லது நம் வாழ்க்கையை பாதிக்கிறது. நாம் பிறந்த தேதியின் விதி எண் வைத்து நாம் எந்த எண்ணில் பெயர் வைக்க வேண்டும். எண் கணிதத்தால் வாழ்க்கையில் முன்னேற்றத்தை அடைய முடியும் என்பதை விரிவாக அறிந்துகொள்வோம்.

மனித வாழ்க்கையில் எண்களும் எழுத்துக்களும் எதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டுள்ளன என்பதை 'எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்' என்கிற பழமொழி உணர்த்துகிறது.

எண் கணிதம் வைத்து வாழ்க்கைக்கு தேவையான பிரதானமான பலன்களை ஜோதிட சாஸ்திரம் போல கூற முடியாது என்றாலும் நம் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்துகொள்வோம்.

எண் கணித ஜோதிடத்தில் விதி எண் மற்றும் பெயர் எண் என உண்டு. விதி எண்ணைக்கொண்டு பெயர் எண்ணை தேர்வு செய்தல் நல்லது.

நாம் பிறந்த தேதியினை கொண்டு விதி எண் கணக்கிட வேண்டும். அதேபோல எந்த எண்ணில் பெயர் வைக்க வேண்டும் என்பதை விதி எண் பொறுத்து எந்த எண்கள் நட்பு மற்றும் பகை என்றும் அவற்றை கணிதத்தால் வாழ்க்கையில் முன்னேற்றத்தை அடைய முடியும் என்பதை விரிவாக பார்ப்போம்.

எண் கணித ஜோதிடத்தில் எழுத்துக்கான எண்களை நிர்ணயிக்கும் பொழுது ஆங்கில எழுத்துக்களையே பயன்படுத்துகிறார்கள். எனவே ஆங்கில எழுத்துக்களுக்கான எண்கள் என்னென்ன என்று பார்ப்போம்.

ஆங்கில எழுத்துக்களுக்கான எண்கள்

| | |
|---|---|
| A, I, J, Q, Y | – 1 |
| B, K, R | – 2 |
| C, G, L, S | – 3 |
| D, M, T | – 4 |
| E, H, N, X | – 5 |
| U, V, W | – 6 |
| O, Z | – 7 |
| F, P | – 8 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய அட்டவணைப்படி எண் 8 வரை ஆளுமைக்குட்பட்ட எழுத்துக்கள் இருக்கும். எண் 9 இன் ஆளுமைக்குட்பட்ட எழுத்துக்கள் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

***எண்களும் கிரகங்களும்***

| | | |
|---|---|---|
| சூரியன் | - | எண் 1 |
| சந்திரன் | - | எண் 2 |
| குரு | - | எண் 3 |
| ராகு | - | எண் 4 |
| புதன் | - | எண் 5 |
| சுக்கிரன் | - | எண் 6 |
| கேது | - | எண் 7 |
| சனி | - | எண் 8 |
| செவ்வாய் | - | எண் 9 |

மேற்கூறிய அட்டவணையில் ஒவ்வொரு எண்ணிற்கும் அதனுடைய ஆதிக்க கிரகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்று பார்ப்போம்.

***விதி எண் கணக்கிடுவது எப்படி?***

ஒரு ஜாதகரின் பிறந்த ஆங்கில தேதியில் வரும், தேதி, மாதம், வருடம் ஆகியவற்றின் கூட்டுத்தொகையே அந்த ஜாதகரின் விதி எண் ஆகும்.

உதாரணமாக

30.01.1985 என்ற தேதியில் ஒருவர் பிறந்திருக்கிறார் என வைத்துக்கொள்ளுங்கள் 3+0+0+1+1+9+8+5 = 27 என வரும் 2+7=9 எனவே இந்த ஜாதகரின் விதி எண் 9 ஆகும். அடுத்து பெயர் எண் என்றால் என்ன என்று பார்ப்போம்.

***பெயர் எண் கணக்கிடுவது,***

ஒரு ஜாதகரின் பெயரை கொண்டு கணக்கிடுவதே பெயர் எண் ஆகும். ஜாதகரின் பெயர் Y SANTHOSH என வைத்துக்கொள்வோம். மேற்கூறிய அட்டவணையில் எழுத்துக்கான எங்களை கொண்டு பெயர் எண் கணக்கிட வேண்டும்.

Y. SANTHOSH

1+3+1+5+4+5+7+3+5=34; 3+4=7

எனவே இந்த ஜாதகருடைய பெயர் எண் 7 ஆகும். பெயருக்கான எண்ணை கணக்கிடும்பொழுது வழக்கமாக பெயரை எப்படி எழுதுகிறோமோ அப்படிதான் எழுத வேண்டும். பெயருக்கு முன்னாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மிஸ்டர், மிஸ், திருமதி, திரு, ஸ்ரீ, ஸ்ரீமதி மற்றும் பெயர்க்கு பின்னால் வரும் பட்டங்களையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

- இவ்வாறு ஒருவருடைய விதி எண் கொண்டு அதே எண் மற்றும் அதற்கு நட்பு எண் வரும்படி பெயரை அமைக்க ஜாதகரின் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். பின்வரும் அட்டவணையில் எண்ணிற்கு வரும் நட்பு எண்ணை காண்போம்.

| | | |
|---|---|---|
| எண் 1 | - | நட்பு எண் 4 |
| எண் 2 | - | நட்பு எண் 7 |
| எண் 3 | - | நட்பு எண் 9 |
| எண் 4 | - | நட்பு எண் 1 |
| எண் 5 | - | நட்பு எண் 6 |
| எண் 6 | - | நட்பு எண் 9 |
| எண் 7 | - | நட்பு எண் 2 |
| எண் 8 | - | நட்பு எண் 5 |
| எண் 9 | - | நட்பு எண் 6 |

குழந்தைக்கு பெயர் தேர்வு செய்யும்பொழுது குழந்தையின் விதி எண் கணக்கிட்டு பின்பு அதே எண் அல்லது அதனுடைய நட்பு எண் வரும்படி பெயர் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### *விதி எண் ஒன்று பலன்கள்*

- எண் கணிதப்படி, எண் ஒன்று சுதந்திரத்தைக் குறிக்கும்.
- எண் ஒன்று தெளிவான எண்ணங்களுடன் குறிக்கோள்கள் கொண்ட எண்ணாகும். எண் ஒன்றை கூட்டு எண்ணாக கொண்டவர்கள் அவர்களுடைய குறிக்கோளில் தெளிவாக இருப்பார்கள்.
- ஒன்றாம் எண்காரர்கள் எதையாவது செய்ய வேண்டுமென்று முடிவெடுத்து விட்டால் அவர்களை எதனாலும் தடுக்க முடியாது. இந்த எண்காரர்கள் இவர்களுடைய ஆற்றலை ஒருமுகப்படுத்தி-னால் இவர்களுடைய மறைமுகத் திறமைகள் வெளிப்பட்டு பெரிய தலைவர்களாக ஆகும் வாய்ப்பு உள்ளது. ஆனால் பொதுவாக சுய பச்சாதாபத்தை வெளிப்படுத்த மாட்டார்கள்.

### *எண் இரண்டு*

- இரண்டாம் எண்காரர்கள் பொதுவாக கருணை மிக்க இயல்பை கொண்டவர்கள்.
- ஒன்றாம் எண்காரர்களின் பலவீனமான விஷயங்களில் இரண்டாம் எண்காரர்கள் தங்கள் பலத்தை வெளிப்படுத்துவார்கள். அவர்களுக்கு மற்றவர்களுடன் எப்படி சேர்ந்து வேலை பார்க்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்றும், பிரச்சனைகளுக்கு எப்படி தீர்வு காண வேண்டுமென்றும் தெரிந்தவர்கள். இரண்டாம் எண்காரர்கள் பொதுவாக ஒரு பிரச்சனையின் இரண்டு பக்கத்தையும் பார்ப்பார்கள். ஆனால் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் முடிவெடுக்கத் தெரியாதவர்களும் அல்ல, சிறப்பாக முடிவெடுப்பவர்களும் அல்ல.

### எண் மூன்று

- மூன்றாம் எண்காரர்கள் சமூகத்தில் இயல்பாக பழகக்கூடியவர்கள்.
- இவர்களுடைய உற்சாகமான நகைச்சுவைத்திறனும் சமூகத்தில் பழகும் விதமும், இவர்களை வாழ்க்கையை கொண்டாடுபவர்களாக காட்டும். இவர்கள் கற்பனைத்திறன் மிக்கவர்கள்.
- எந்தவொரு துறையிலும் கலைநயமாக மாறி விடுவார்கள். அவர்களைச் சுற்றியுள்ள மனிதர்களிடமும் உலகத்திடமும் நேர்மறை ஆற்றலை ஈர்க்கக் கூடியவர்கள். இது சில சமயங்களில் அவர்களுடைய நோக்கங்களை திசைத் திருப்பிவிடும்.

### எண் நான்கு

- எண் நான்கோடு தொடர்புடையவர்கள் யதார்த்தமானவர்கள்.
- நான்காம் எண்காரர்கள் மற்றவர்களை சார்ந்திருப்பர், மேலும் பல வகைகளிலும் மற்றவர்களது உதவி இவர்களுக்கு எப்போதும் தேவைப்படும். அவர்களிடம் இருக்கும் நிலையான தன்மை இறுதிவரை சரியான முடிவுகளை எடுக்க உதவும்.
- நான்காம் எண்காரர்கள் பொதுவாக ஆன்மீக மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளில் வேலை பார்ப்பார்கள். நான்காம் எண்காரர்கள் பொதுவாக யதார்த்தவாதிகளாக இருந்தாலும், அவர்களுக்கு முரண்பாடுகள் பிடிக்காது மேலும் மிகவும் இறுக்கமானவர்கள்.

### எண் ஐந்து

- ஐந்தாம் எண் சாத்தியமற்ற விஷயங்களோடு தொடர்புடையது.
- ஐந்தாம் எண்காரர்கள் சுதந்திரமான ஆன்மாக்கள், இவர்கள் சாகசங்களை விரும்புவார்கள். அவர்களுக்கு பொதுவாக மற்றவர்களோடு பழகுவது கடினமாக இருக்கும்.
- இவர்கள் முன்னால் வாழ்க்கை எந்த சவாலை வைத்தாலும் வென்று காட்டுவார்கள். ஆனாலும் வெற்றி கிடைக்க நீண்ட நாள் எடுக்கும். ஐந்தாம் எண்காரர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க, அவர்கள் சுதந்திரமாக இருக்க வேண்டுமென நினைப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எண் ஆறு

- ஆறாம் எண் பொறுப்புணர்வுக்கு பெயர் போனது.
- ஆறாம் எண்காரர்கள் அவர்களுடைய அக்கறைக்காக புகழ் பெற்றவர்கள். தங்களைச் சுற்றியுள்ள அனைவரையும் பாதுகாக்க வேண்டுமென்கிற அவர்களுடைய இயல்பானது அவர்களை மிக நல்லவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் உருவாக்குகிறது.
- ஆறாம் எண்காரர்கள் எப்பொழுதும் மனிதாபிமானம் நிறைந்தவர்கள். அதேசமயம் அவர்களுடைய அளவுக்கதிகமான அக்கறையை அவர்கள் கட்டுக்குள் வைக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் அதிகமாக கட்டுப்படுத்தப்படுபவர்களாகவும் சுயத்தை தியாகம் செய்பவர்களாவும் மாற வாய்ப்புண்டு.

### எண் ஏழு

- ஏழாம் எண்காரர்கள் யதார்த்தத்துக்கு புறம்பானவர்கள்.
- ஏழாம் எண்காரர்கள் புத்திசாலிகள். அவர்கள் எப்போதும் சுவாரஸ்யமான, உண்மையான விஷயங்களைத் தேடுவார்கள். ஏழாம் எண்காரர்கள் கூர்மையாக கவனிப்பவர்கள்.
- தங்கள் முடிவுகளை மிக அழகாக கருத்துக்களை முன்வைத்து விவாதிப்பார்கள். அவர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தால், மற்றவர்கள் அமைதியாக ஒரு மூலையில் அமர்ந்து மதிப்பீடு செய்யும்படி இருக்கும். ஏழாம் எண்காரர்களின் ஒரே பலவீனம் சில சூழல்களில் அளவுக்கதிகமாக யோசிப்பதே ஆகும்.

### எண் எட்டு

- எட்டாம் எண் இலட்சியத்திற்கு உரியது.
- ஒன்றாம் எண்காரர்களைப் போலவே எட்டாம் எண்காரர்களும் பொருளாதார ரீதியாக வெற்றிகரமானவர்களாக இருப்பார்கள். இருந்தாலும் அவர்கள் செயல்வீரர்களாக இருப்பார்கள். இந்த செயல்திறன் அவர்கள் வியாபாரத்தில் வெற்றிகரமாக இருக்க காரணமாக இருக்கிறது.
- ஏனென்றால் அவர்களுடைய இந்த பண்பு திட்டமிடுதலிலும் முன்தயாரிப்புகளிலும் உதவும். ஆனால் அவர்கள் தங்கள் பொருளாதாரத்தை அடிக்கடி கட்டி எழுப்புவார்கள். இந்த குணாதிசயம் அவர்களை வாழ்க்கையை சமநிலையாக எதிர்க்கொள்ள உதவுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எண் ஒன்பது

- ஒன்பதாம் எண் தியாகத்தின் மறு உருவம்.
- ஒன்பதாம் எண்காரர்கள் எதையும் பெரிதாக சிந்திப்பார்கள். அவர்கள் இயற்கையாகவே கொடையாளிகளாக இருப்பார்கள் ஏனென்றால் எல்லாவற்றிலும் ஒன்றுக்கொன்று தொடர்புகள் இருப்பதை உணர்ந்தவர்கள்.
- தங்களுக்காக அதிக அக்கறை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் சமுதாயத்தில் ஒரு பிரச்சனை என்றால், அதை சரிசெய்ய தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள். சில நேரங்களில் இவர்களுக்கு அவ்வப்போது பிரச்சனைகள் தோன்றி மறையும்.

### எண் பதினொன்று

எண் கணிதத்தில் பதினொன்று தலைமை எண்களில் ஒன்றாகும். இது தலைமைப்பண்பையும் உள்ளுணர்வையும் குறிக்கும். பதினொன்றாம் எண்ணானது ஒன்று மற்றும் இரண்டு ஆகிய இரண்டு எண்களின் கலவையாக இருப்பதால், இந்த எண்ணை கொண்டவர்கள் தலைவர்களாகவும் உள்ளுணர்வு மிக்கவர்களாகவும். இருப்பர். இவர்கள் ஒரு சூழலின் எல்லா பக்கங்களையும் புரிந்துகொள்ளக் கூடியவர்கள். இது பதினொன்றை எல்லா வகையிலும் தகுதியான தலைவராக்குகிறது.

### எண் இருபத்தி இரண்டு

எண் கணிதவியலின் படி எண் இருபத்தி இரண்டும் ஒரு தலைமை எண்ணாகும். இருபத்தி இரண்டு ஒரு கண்ணோட்டத்தையும் அந்த கண்ணோட்டத்தை நிஜமாக்கும் திறனும் கொண்டது.

இருபத்தி இரண்டாம் எண், இரண்டு மற்றும் நான்கு ஆகிய எண்களின் பண்புகளை கொண்டது. இருபத்தி இரண்டாம் எண்காரர்களுக்கு ஒரு இலட்சியமும் அதை நிஜமாக்கும் திறமையும் இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. வாஸ்து சாஸ்திரம்

ஓம் அநுக்கிரக றூபாய வித்மஷே
பூமி புத்ராய தீமஹி
தந்தோ வாஸ்துப் ஃபிரசோதயாத்

மனிதனைப் படைத்த ஆண்டவன் அந்த மனிதன் தன்னையும் அறிந்து, தன்னைப் படைத்தவனிடமும் வரவேண்டும் என்பதற்காக அவனை ஆறறிவுடன் படைத்தான். மனிதன் இப்பூவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து தன் கடமைகளைச் சரிவரச் செய்து பேரின்பத்தை அடைய வேண்டும் என்பதே இறைவனின் நோக்கம்.

தன்னைத்தேடும் ஞானிகளுக்கும், ரிஷிகளுக்கும் தன்னை உணர்த்தினான். அவர்கள் தங்களது கருணையினால் மக்கள்படும் துயரங்களைப் போக்குவதற்காக பல சாஸ்திரங்களையும் பதிகங்களையும் உருவாக்கினார்கள்.

வாழ்க்கை என்பது ஒரு வாய்ப்பு. ஒரு வாய்ப்பு என்று சொல்வதை விட ஒரே ஒரு வாய்ப்பு என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். அந்த அற்புதமான வாய்ப்பை நாம் எப்படிப் பயன்படுத்தப் போகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் நமது வாழ்க்கையே அமைகின்றது.

அப்படிப்பட்ட வாழ்க்கையை நல்ல முறையில் வாழ்ந்திடவே சாஸ்திரங்கள் வழிகாட்டுகின்றன. எத்தனையோ சாஸ்திரங்கள் இருந்தாலும் வாஸ்து சாஸ்திரமே மனித வாழ்வினை முக்கியமானதாக அமைக்கின்றது.

நாம் இருக்கும் வீடு பணி செய்யும் இடம் இரண்டையும் வாஸ்து சாஸ்திரப்படி அமைத்தால் நமக்கு எல்லா வகையான செல்வங்களும் யோகங்களும் கிடைக்கின்றன. ஒருவர் வாழ்வில் வெற்றிபெறுவதும் தோல்வி அடைவதும் அவரவர் வீட்டிலேயே ஆரம்பித்து விடுகின்றது. அவர் வாழ்க்கை நடப்புகளும் அவர் வீட்டின் யோகப்படியே தான் நடைபெறும் என்பதில் கடுகளவும் ஐயமில்லை. ஆனால் நாம் நமது சாஸ்திரங்களை அலட்சியம் செய்கிறோம். எதுவுமே வெளிநாட்டவர் மூலமாக வந்தால் தான் நாம் நம்புகிறோம். பின்பு அதைப் பின்பற்றுகிறோம். என்ன பேதமை நம் சாஸ்திரங்களை நாமே மதிப்பதில்லை - பின்பற்றுவதில்லை. எனவே தான் நாம் தினமும் வாழ்க்கையில் போராடிக் கொண்டேயிருக்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து மக்களும் தங்களின் இருப்பிடங்கள் (வீடு, குடில், பங்களா) மூலமாகத் தங்கள் வாழ்க்கையில் ஆரோக்கியமும், மகிழ்ச்சியும் பெற்று ஆனந்தமாக வாழ வேண்டும் என்பதே வாஸ்து சாஸ்திரத்தின் நோக்கமாகும். இகலோக சுகத்தையும் (இப்புவி வாழ்க்கை), பரலோக சுகத்தையும் இச்சாஸ்திரங்களின் மூலம் எளிதில் பெறலாம் என (வராஷமிகிரர் வாஸ்துவில்) மகரிஷி நாரதர் கூறுகிறார்.

''அனேன விதின சமயாக் வாஸ்து பூஜாம் கரோதி ; யா ஆரோக்யம்
புத்ர லாபாம் சா தனம் தான்யம் லபேன் தர''

எவன் ஒருவன் வாஸ்துவை முறையாக மதிக்கிறானோ (கடைப்பிடித்தல்) அவன் திரண்ட செல்வமும், குடும்ப வாரிசுகளும், சொத்துக்களும், மற்ற இசுபர இன்பங்களும் தவறாமல் அடைகிறான். ஆனால், எவன் இந்த வாஸ்து மஹா புருஷனை அறியாமையினாலும், அலட்சியத்தினாலும் கடைப்பிடிக்கவில்லையோ, அவனுக்கு மனைவியின் மூலம் துன்பங்களும், வாரிசு இழப்புகளும், சொத்துக்கள் அழிதலும், மனக் குழப்பங்களும், நோய்களும் மற்றும் சொல்லொணாத் துன்பங்களும் தாமே வந்து சேரும் என்று நாரத மகரிஷி வராஷமிகிரரின் வாஸ்து சாஸ்திரத்தில் விளக்குகிறார்.

வாஸ்துவின் பெருமையைப் பற்றி இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் குறிப்புகள் வருகின்றன. இராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் இராமனும் இலட்சுமனனும் சீதையைத் தேடி அலையும் போது சுக்ரீவன் வசிக்கின்ற மலைக்கு வருகின்றனர். அங்கு ஆசிரமம் அமைத்துத் தங்குகின்றனர். அப்போது இராமர் இலட்சுமணனிடம் ''தம்பி நாம் அமைத்திருக்கும் இந்தக் குடில் வாஸ்து அமைப்பின்படி மிகவும் பலம் ஆகவுள்ளது. எனவே நாம் எமது காரியத்தில் வெற்றி பெறுவது உறுதி!'' என்று கூறுகிறார். அதன்படியே அவருக்கு சுக்ரீவன் நட்பும் அனுமான் சேவையும் கிடைத்தன. அதன் மூலம் சீதையைத் திரும்பப் பெறுதலும் அவருக்கு அமைகின்றது.

இயற்கை எல்லோர்க்கும் பொது. சூரிய வெளிச்சமும் வெப்பமும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவன், பௌத்தன் எல்லோருக்கும் ஒரே தன்மையானவை. சாதி சமய வேறுபாட்டிற்கு இடமில்லாதவை. அங்ஙனமே வாஸ்து சாஸ்திரமும் மனிதராகப் பிறந்த அனைவருக்கும் உரியது. எல்லோராலும் பின்பற்றக் கூடியது. பின்பற்ற வேண்டியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் இந்த அற்புதமான - நிச்சமாகப் பலன்கொடுக்கும் வாஸ்து சாஸ்திரத்தை - சாஸ்திர புத்தங்களை நன்கு படிப்பதன் மூலமும் முறையாக அனுஷ்டிப்பதன் மூலமும் தெரிந்து கொள்ளலாம். அவர்களின் (வாஸ்து சாஸ்திரங்கள் கற்றவர்களின்) வாக்குகள் நிச்சயமாக பலிதமாகும். அவை அவர்களை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லும் ஒரு போதும் அவர்களுக்கு தாழ்மைகள் வராது.

மண், விண், நீர், நெருப்பு, காற்று என்ற ஐம்பெரும் பூதங்களால் ஆனதே இவ்வுலகம். ஐம்பூதங்களாலானதே மனித உடல். அங்ஙனம் ஐம்பூதங்களால் அமைவதே வீடு. இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. சிலர் ''இந்த வீட்டுக்கு வந்த பின்னர் தான் நன்றாக இருக்கின்றோம்.'' என்கிறார்கள். வேறு சிலரோ ''இந்த வீட்டுக்கு வந்த பின் எதுவும் ராசியாக இல்லை'' என்கிறார்கள். மேலும் ஒரு வீட்டில் தொடர்ந்து, ஒருவர் மாற்றி ஒருவர் நோய் வாய்ப்பட்டால், அதைப் பார்ப்பவர்கள், ''வீட்டை மாற்று'' என்று அறிவுரை சொல்கிறார்கள் வாடகை வீடானால் வேறு வீட்டுக்கு மாற்றிக் கொள்ளலாம். சொந்த வீடானால் வீட்டின் அமைப்பை முறைப்படி மாற்றிக் கொள்ள வேண்டும். அதற்கு தயங்கவோ தாமதிக்கவோ கூடாது.

எனவே நாம் அனைவரும் வாஸ்து என்னும் இந்த அற்புதமான சாஸ்திரத்தை அறிந்து அதைப் பின்பற்றி வாழ்க்கையில் அனைத்து இன்பங்களும் செல்வங்களும் கொடுத்தருள வேண்டுமென வாஸ்து மஷா தேவனை வணங்கி வளம் பெறுவோம்.

''ஈருலகில் மாந்தர்க்கேலும் பொருளெலாம்
வானுலகில் வாஸ்துவே தரும்.'' (வாஸ்து குறள்)

01. ஒவ்வொரு மனையும் வீடும் எட்டுத் திக்குகள் கொண்டவை. அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி இயல்புகளும் சக்திகளும் உண்டு. இந்தத் திசைகள் வாஸ்து சாஸ்திரப்படி முறையாக அமைக்கப்பட்டால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் நமது வீட்டைத் தேடி வரும். இதையே வீடு அஷ்டலட்சுமி குடியிருக்கும் கோயில் என்று பெரியவர்கள் கூறிச் சென்றார்கள்.

02. இந்த எட்டுத் திசைகளிலும் ஈசான்ய திசையே (ஈசான்ய மூலை, வடகிழக்கு மூலை) எல்லாம் வல்ல சர்வேஸ்வரனுக்குரியது. இவர் மற்றத் திசைகளையெல்லாம் தன் வயப்படுத்தி நல்ல பலன்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிப்பதில் வல்லவர். எனவே இவ் ஈசான்ய மூலையை மிகவும் புனிதமாக கருத வேண்டும். அந்த மூலையில் செப்டிக் டாங்க், ரொயிலட், பாத்ரூம், ஸ்ரோர்ரூம், அடுப்பு போன்றவற்றை அமைக்கக்கூடாது. இம்மூலையில் சுவாமி அறை, படிப்பு அறை, சிறுவர்கள் அறை என்பவற்றை அமைப்பது நன்மை தரும். மிகவும் சுத்தமாகவும் புனிதமாகவும் வைக்க வேண்டும்.

03. அக்கினி மூலையில் சமையல் அறைதான் வைக்க வேண்டும். மற்றக் காரியங்களுக்கு இந்த மூலை நற்பலன்களைக் கொடுக்காது.

04. கன்னி மூலையை மூலைமட்டத்திற்கு சரிசெய்து கட்டடம் கட்டினால் அதுவே அனைத்தையும் வழங்கவல்ல காமதேனுவாகும். இம் மூலையை நைருதி மூலை என்றும் சொல்வதுண்டு. இந்தத் திசை அதிகமாக வளர்ந்தாலும் கிணறு, குட்டை இருந்தாலும் இந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு உயிராபத்து ஏற்படும். அல்லது அதற்கு சமானமான கண்டங்கள் ஏற்படும். மேலும் குடிப்பழக்கம், சூதாட்டம் போன்ற கெட்ட நடவடிக்கைகளும் கேன்சர் போன்ற கடுமையான நோய்களும் ஏற்படும். இந்தத் திசை பள்ளமாக இருந்தாலோ, மூலை நீண்டு இருந்தாலோ, செப்டிக் டாங்க் மற்றும் கீழ்நிலைத் தண்ணீர்த் தொட்டி அமைந்தாலோ மேற்கண்ட தீய பலன்கள் ஏற்படும். ஆனால் வாஸ்துப்படி நல்ல முறையில் அமைந்தால் போட்டியில் வெற்றியும், புகழும் திடீர் அதிர்ஷ்டங்களும் கிடைக்கும்.

05. நாம் தேர்ந்தெடுக்கும் மனை சதுரமாகவோ நீள்சதுரமாகவோ அமைந்திருத்தல் நல்லது. இதில் அமையும் கட்டடங்கள் சிறப்புத் தரும். முக்கோண வடிவம் வட்ட வடிவம் ஆகிய மனைகளில் வீடு கட்டக்கூடாது. பலதரப்பட்ட தீமைகள் ஏற்படும். வாஸ்து அறிஞர்களைக் கொண்டு மனையைத் தேர்ந்தெடுத்தால் பாதி வேலைகளைச் செய்த நற்பலன்கள் கிடைக்கும். ''வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்'' என்பது பழமொழி. எனவே தேர்ந்தெடுக்கும் மனை சிறந்த முறையில் இருக்க வேண்டும். இடத்தின் அமைப்புத் தான் அமையவிருக்கும் கட்டடத்தின் போக்கினை நிர்ணயிக்கின்றது.

06. மனையில் அரசு, பலா, வேம்பு, புளி போன்ற மரங்கள் தடங்கலாக இருந்தால் கட்டடம் தொடங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாக வேருடன் நீக்கிவிட வேண்டும். ஆனால் பூ, காய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை மரங்களை வெட்டும் போது இருக்கக்கூடாது. இவற்றை மீறி வெட்டப்பட்டால் விருட்ச தோசம் ஏற்படும். வெட்டியவருக்கும் வெட்டச் சொல்லியோருக்கும் இத்தோசம் ஏற்பட்டு பல தீமைகளைக் கொடுக்கும்.

07. கிணறு அல்லது கீழ்த்தொட்டி நமது வீட்டின் வடக்கு அல்லது கிழக்கில் அமைக்க வேண்டும். வடக்கு அல்லது கிழக்கு சேர்ந்த ஈசான்யம் சிறப்பானது. ஆனால் அது ஈசான்யக் கோட்டினை வெட்டக் கூடாது. ஈசான்யக் கோட்டினை வெட்டினால் நற்பலன்களை தடுத்துவிடும்.

08. நமது வீட்டின் சமையலறையை வீட்டில் அக்கினி மூலையில் அமைக்க வேண்டும். (தென் கிழக்கு) சமையல் செய்பவர் முகம் கிழக்குப் பார்த்து இருக்க வேண்டும். மற்ற திசைகளைப் பார்த்து செய்யக் கூடாது. வாயு மூலையில் (வடமேற்கு மூலை) சமையலறை வைப்பதில் தவறில்லை. ஆனால் அடுப்பு அவ் அறையின் அக்கினி மூலையில் அமைப்பதுதான் சிறந்தது. ஈசான்ய பாகத்தில் சமையலறை கூடவே கூடாது. செல்வ வளர்ச்சியை எரித்துவிடும். வாரிசுகளையும் பாதிக்கும். தெற்கு முகமாக நின்று சமையல் செய்தால் வறுமையை வலிய அழைக்கும்படி ஆகிவிடும். வடக்கு முகமாக நின்று சமையல் செய்தால் வீட்டில் நிம்மதியும், செல்வமும் நிற்காது. வீண் சச்சரவுகளை ஏற்படுத்தும்.

09. மகாபாரதம், இராமயணம் இவற்றின் சண்டையைக் குறிக்கும் படங்கள், சண்டைக் காட்சிகள், அழுகின்ற உருவம் கொண்ட படங்கள், பன்றி, கழுகு, பாம்பு, ஆந்தை, வல்லூறு போன்ற பறவைகள் மிருகங்களின் படங்கள் புலி, சிங்கம், எருமை என்பவற்றின் உருவங்கள் போன்றவற்றை வீட்டில் மாட்டக்கூடாது.

10. வீட்டின் தலைவாசல் கேட்டிற்கு முன்
- பெரிய மரம் இருந்தால் - குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படும்.
- பெரிய கிணறு இருந்தால் - மன அமைதி கெடும்
- வேறு கட்டிடத்தின் மூலைப் பகுதி இருந்தால் - மன அமைதி கெடும்.
- மின்சார தந்தி கம்பங்கள் இருந்தால் - பெண்களின் உடல் நிலை பாதிக்கப்படும்.
- பழுதடைந்த வீடு இருந்தால் - முன்னேற்றம் தடைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வீடு அமைக்க அதிர்ஷ்டம் தரும் ஆங்கில மாதங்கள் மே மாதம், ஆகஸ்ட் மாதம், நவம்பர் மாதம், பெப்ரவரி மாதம் ஆகும்.

12. வீட்டிற்கு அருகில் கோவில்கள் 150 அடிக்கு மேல் இருந்தால் தோசங்கள் இல்லை. கோபுரத்தின் நிழல் வீட்டின் மேல் விழக்கூடாது. நடுவில் சாலை அமைந்து எதிரில் கோயில் இருந்தால் வீடு அமைக்கக் கூடாது. அவ்விதம் கட்டப்பட்டிருந்தால் அதை பொது உபயோகத்திற்கு விட்டு விட வேண்டும். குடியிருக்கும் வீடாக இருந்தால் முன்னேற்றம் தடைப்படும்.

13. ஏற்கனவே இடம் வைத்திருப்பவர்கள் தங்கள் வீட்டை ஒட்டியோ அல்லது இடத்தை ஒட்டியோ உள்ள வடக்கு அல்லது கிழக்கில் உள்ள வீடு, மனை வாங்கலாம். தெற்கு மேற்கு கூடாது. விளை நிலங்களுக்கு இது பொருந்தாது.

14. வீட்டிற்கு வரும் விருந்தினர்களையும் உறவினர்களையும் வீட்டின் வடமேற்கு மூலையில் உள்ள அறையில் தங்குமாறு செய்ய வேண்டும்.

15. உடல் நலக் குறைவு உள்ளவர்களை வீட்டின் தென்மேற்கு அறையில் படுக்கை அமைத்து தெற்குப் பக்கம் தலை வைத்துப் படுக்கும்படி செய்து வந்தால் உடல் நலம் விரைவில் குணமாகி விடும். ஆயுள் பலம் பெருகும்.

16. ஒரு வீட்டைக் கட்டியபின்பு அதைப் பாகம் பண்ணக்கூடாது. தனித்தனி வீடுகளாக கட்டி அதைப் பிரித்துக்கொள்ளலாம்.

17. தந்தையின் வீட்டை பாகப்பிரிவினை செய்யும் போது மூத்தவர்களுக்கு மேற்குப் பாகத்தையோ தெற்குப் பாகத்தையோ கொடுக்க வேண்டும். இளையவர்களுக்கு கிழக்கு அல்லது வடக்குப் பகுதிகளில் கொடுக்க வேண்டும்.

18. குடியிருப்பதற்காகக் கருங்கல்லில் கட்டடங்கள் வீடுகள் கட்டக்கூடாது. அது குடும்பத்தில் குழப்பத்தை உண்டுபன்னும்.

19. வீடுகள் எந்தத் திசையில் வாசல்கள் இருந்தாலும் வெளியில் இருக்கும் ரோட் மட்டத்தை விட வீட்டுத்தளம் உயரமாக இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கட்டடத்துக்கு அளவு வரையறையை விரும்புவோர் பின்வரும் அளவுகளை பின்பற்றவும். பின்வருவன 12 அங்குல அளவுள்ள அடிகள்.
நீள அகலம் (உள் அளவு)
6, 8, 10, 11, 16, 17, 20, 21, 27, 29, 30, 31, 32, 33, 35, 36, 37, 39, 41, 42, 45, 52, 56, 60, 63, 64, 66, 68, 70, 71, 72, 74, 77, 79, 80, 84, 85, 87, 88, 89, 90, 91, 92, 95, 97, 98, 99, 100, 101, 102, 104, 106, 108, 109, 110, 111, 112, 113, 115, 116, 117, 119

உயரம் (தடைமட்டத்திலிருந்து மேற்கூரை - சீலிங் வரை)
10, 16, 17, 20, 21, 27, 29, 30

21. தெரு அல்லது சாலை வந்து மனையைக் குத்துவது (முட்டுவது) தெருக்குத்து எனப்படும். தெருக்குத்தல் பல வகைப்படும். இதில் நல்லவையும் உண்டு. தீயவையும் உண்டு. வடகிழக்கில் அமைந்த தெருக்குத்து விரும்பத்தக்கது. வளம் தருவது இத்தெருக்குத்து வடக்கிலிருந்து வந்தாலும் கிழக்கிலிருந்து வந்தாலும் சிறப்பானதே. மேற்குச் சார்ந்த வடமேற்கிலும் தெற்குச் சார்ந்த தென்கிழக்கிலும் தெருக்குத்து இருக்கலாம். நல்லதே பிறவகையான தெருக்குத்தல்கள் தீமை விளைவிக்கும். ஆகையால் அவை கண்டிப்பாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.

22. கட்டடத்திற்கு கடைக்கால் போடும் போது வாஸ்து பூசை வடகிழக்கு மூலையில் செய்ய வேண்டும். காம்பவுண்ட் சுவர் கட்டும் போது, மொத்த இடத்தின் வடகிழக்கு மூலையில் பூசை செய்ய வேண்டும். பூசை செய்பவர் கிழக்கு நோக்கி நின்று பூசை செய்ய வேண்டும்.

23. கட்டடம் (வீடு) கட்டத் தொடங்குவதற்கு நல்ல நாளில் முகூர்த்தத்தில் வாஸ்து பூஜை போட்ட பின்னர் அடித்தளம் (Basement) போடக் கோடுகள் குறிக்க (Marking) வேண்டும். நமது மனையில் நாம் அமைக்கவிருக்கும் கட்டடம் தென்மேற்குப் பகுதியில் அமையுமாறு குறிக்க வேண்டும். கிழக்கிலும் வடக்கிலும் காலி இடங்கள் இருக்க வேண்டியது அவசியம்.

24. வீட்டின் அடித்தளம் கோடுகளை குறித்த பின்பு அடித்தளம் தோண்ட ஆரம்பிக்க வேண்டும். முதலில் வடகிழக்கு மூலையிலிருந்து தோண்ட ஆரம்பிக்க வேண்டும். பின்பு தெற்குத் திசையில் தோண்ட ஆரம்பிக்க வேண்டும். பின்பு அக்னி மூலையிலிருந்து மேற்கில் தோண்ட வேண்டும். (கன்னி மூலை வரை) வாயு மூலையிலிருந்து தெற்கில் ஆரம்பித்து இறுதியில் முடிக்க வேண்டும். இதுதான் அடித்தளம் தோண்டும் முறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




25. அடித்தளத்திற்காக முறையாகத் தோண்டிய பிறகு கட்டடம் கட்ட ஆரம்பிக்க வேண்டும். கட்டும் போது சாஸ்த்திரப்படி கட்ட வேண்டும்.

- முதலில் கன்னி மூலையிலிருந்து அக்னி மூலை
- கன்னி மூலையிலிருந்து வாயு மூலை
- அக்னி மூலையிலிருந்து ஈசான்ய மூலை
- வாயு மூலையிலிருந்து ஈசான்ய மூலை

இந்த மாதிரிக் கட்டடம் கட்டி வந்தால் கட்டடமும் சீக்கிரம் வளர்ந்து விடும். வீடு கட்டுவது சுகமான அனுபவமாகிவிடும். எதையும் நல்ல முறையில் ஆரம்பித்தாலே அந்த வேலையில் பாதி முடிந்த மாதிரி அல்லவா?




26. வீடு கட்டி முடிந்தவுடன் அதற்கு நல்லதொரு பெயர் சூட்ட வேண்டும். குழந்தை பிறந்தால் எப்படி பெயர் சூட்டுகிறோமோ அதே போல நாம் பார்த்துப் பார்த்து கனவு கண்டு இல்லமொன்று அமைத்தபின் பெயர் சூடாமலிருப்பது தவறுதான். பலரும் தங்கள் வீட்டுக்கு மனம் போன போக்கில் பெயர் வைக்கிறார்கள் பெயரின் பொருளைப் பற்றியோ, அதன் உச்சரிப்புப் பற்றியோ, அப்பெயர் தரும் கலர் பொருள் பற்றியோ கவலைப்படுவதில்லை. மங்களப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளும் மங்கள ஒலியும் உடைய பெயர்களையே வீடுகளுக்குச் சூட்ட வேண்டும். பார்வதி, சரஸ்வதி, லட்சுமியை - மலைகள், கலைமகள், அலைமகள் என அழகாகக் குறிப்பிடுவர், அறிஞர் பெருமக்கள் பார்வதி என்று பெயரிட விரும்புவோர் மலைமகள் இல்லம் என்றோ மலையரசி இல்லம் என்றோ வைக்கலாம். சரஸ்வதி என்று பெயரிட விரும்புவோர் கலைமகள் இல்லம் என்றோ கலையரசி இல்லம் என்றோ வைக்கலாம். ஆனால் லெட்சுமி என்று பெயரிட விரும்புவோர் அலைமகள் இல்லம் என்றோ அலையரசி இல்லம் என்றோ வைப்பது நல்லதல்ல. திருமகள் இல்லம், மலர்மகள் இல்லம் என்றுதான் பெயர் வைக்க வேண்டும். அக்சய வாசா, ஐஸ்வர்ய வாசா, குபேரவாசா என மங்களகரமான பெயர்களைத் தேர்ந்தெடுத்து வைப்பது நல்லது. Numerology முறையைப் பின்பற்றுவது மிக மிக நல்லது. எண் கணித சாஸ்திர வல்லுநர்களின் அறிவுரைப்படி நடப்பது நன்மை தரும்.

27. வீட்டை முழுமையாகக் கட்டி முடித்த பிறகே புதுமனை புகுவிழாவினை நடத்த வேண்டும். அரைகுறையாக வீட்டு வேலைகள் இருக்கும் நிலையில் கிரகப் பிரவேசம் நடத்துவது பின்னாளில் நல்ல பலன்களை தருவதில்லை. நல்ல சுபயோக நாளில் சாஸ்திர விதி முறைப்படி அக்கினி மூட்டி ஓமம் செய்து பூசை வழிபாடுகளைக் குறைவறச் செய்ய வேண்டும். பொதுவாக சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை ஆகிய மாதங்கள் புதுமனை புகுவிழா நடத்துவதற்கு சிறந்த மாதங்கள்.

28. மனை மங்களம் பொங்க வாஸ்து தேவரை வழிபடுதல் நல்லது. வீட்டைக் கிருகலெட்சுமி என்பது வழக்கம். வாஸ்து சாஸ்திர விதிமுறைகளுக்கமைய அமைக்கப்பட்ட தெய்வத் தன்மை பொருந்திய அவ்வீட்டின் தலைவாசலை சுத்தம் செய்து, நிலை வாசலில் மஞ்சள் பூசி, சந்தனம் குங்குமம் இட்டு, வாசற்காலில் மாவிலைத் தோரணம் கட்டி, மாலை சாத்தி, நிறைகுடம், தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு வைத்து தூப தீபம் ஆராதனைகள் செய்து வழிபடலாம். இவ்வழிபாட்டை பிறரை எதிர்ப்பார்க்காமல் நாமே செய்யலாம். முதலில் விநாயகப் பெருமானை வணங்கிய பின்னர் விஸ்வப் பிரம்மனை - உலகியற்றியோனை - படைப்புக் கடவுளை 'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம' என்று 108 முறை சொல்லி வணங்குக. அதன் பின்பு 'ஓம் ஓம் அருள் தரு வாஸ்து தேவரே போற்றி ஓம்' அல்லது ஓம் வாஸ்து தேவாய நம!' என்று 108 முறை சொல்லி வாஸ்து தேவரை வணங்குக. வளம் கொழிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வணங்குவதற்குரிய நாட்களும் நேரங்களும் (தமிழ் மாதம்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சித்திரை | - 10 | காலை மணி | 8.54 | முதல் | 9.12 | வரை |
| வைகாசி | - 21 | காலை மணி | 10.6 | முதல் | 10.24 | வரை |
| ஆடி | - 11 | காலை மணி | 7.42 | முதல் | 8 | வரை |
| ஆவணி | - 6 | காலை மணி | 3.18 | முதல் | 3.36 | வரை |
| ஐப்பசி | - 11 | காலை மணி | 7.42 | முதல் | 8 | வரை |
| காத்திகை | - 8 | காலை மணி | 10.54 | முதல் | 11.12 | வரை |
| தை | - 12 | காலை மணி | 10.6 | முதல் | 10.24 | வரை |
| மாசி | - 20 | காலை மணி | 10.6 | முதல் | 10.24 | வரை |

நம்பினோர் கெடுவதில்லை.

வாழ்க வளமுடன்

சி. கருணாகரன்
சிவில் இன்ஜினியர்

## திசைகாட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. வாழ்க்கை நெறியை கற்று தரும் திருமந்திரம்...
திருமூலர்

''ஒன்றே குலமும், ஒருவனே தேவன்...''

என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமுதாயத்திற்கு வேண்டிய நல்லிணக்க செய்திகள் திருமந்திரத்தில் அழகாக விளக்கியவர் திருமூலர். ஆன்மிகம், மருத்துவம், விஞ்ஞானம், தத்துவம், உளவியல் என திருமூலர் தொடாத துறைகளே இல்லை. திருமூலர் இயற்றிய மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திர பாடல்களே இதற்கு சான்றாகும்.

தேவர் குறளும், திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும், முனிமொழியும் - கோவை
திருவாசகமும், திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர் - இது ஔவையார் பாடல்.

திருக்குறள், நால்வேதங்கள், மூவரின் தேவாரம், மணிவாசகர் திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் ஆகிய 11 நூல்களின் கருத்தும் மனிதரைப் புனிதம் ஆக்கும் ஒரே வழியையே காட்டுகின்றன என்று ஔவையார் பாடியுள்ளதே திருமந்திரத்தின் சிறப்புக்கு சாட்சியாகும். திருமந்திரம் சைவ சமயத்திற்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமையாது. உலக மக்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்மிகத்தையும், மருத்துவத்தையும் எடுத்துரைக்கும் பொது நூலாக அமைந்துள்ளது.

அகத்தியர், போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர், நந்தி, கூன்கண்ணர், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, கமலமுனி, இடைக்காடர், புண்ணாக்கீசர், சுந்தரானந்தர், ரோமரிஷி மற்றும் பிரமமுனி ஆகிய 18 சித்தர்களில் இவர் ஒருவரே, நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படுபவர். தவத்தால் ஞானம் பெற்ற சித்தர்கள் மௌனமாகி விடுவார்கள். ஆனால் 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் உயர் நோக்கில், தான் பெற்ற ஞானத்தை நமக்கு அளித்து மகிழ்ந்தார் திருமூலர். அவருடைய வரலாறு அற்புதமானது. இவரது வரலாற்றை 28 பாடல்களில் பெரிய புராணத்தில் அழகாகப் பாடியுள்ளார் சேக்கிழார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வரலாறு*

முழுமுதற்கடவுள் சிவபெருமான். இவரிடம் சிவஞான உபதேசம் பெற்ற நந்திபெருமானிடம் உபதேசம் பெற்றவர் சுந்தரநாதர். இவர் தான் அறிந்தது போக, மேலும் எண்வகை சித்திகளையும், யோகங் களையும் கற்கும் பொருட்டு, தமிழகத்தின் பொதிகை மலையில் வாழ்ந்த அகத்தியரைத் தரிசிக்க வந்தார். அந்த பயணத்தின்போது, வழியில் திருவாவடுதுறைக்கு அருகில் சாத்தனூரில் பசுமாடுகள் மேய்க்கும் 'மூலன்' என்பவன் இறந்து கிடந்தான். அதனால் கலங்கி நின்ற பசுக்களின் கண்ணீரைத் தாங்காத சுந்தரநாதர், 'தன் உடலை மறைத்து, மூலன் உடலுக்குள் பரகாயப்பிரவேசம் செய்தார். பசுக்கள் மகிழ்வில் ஆனந்தக் கண்ணீர் விட்டன. மூலனின் மனைவி வீட்டுக்கு அழைத்தாள். ஆனால் திருவாவடுதுறை கோயிலில் போதிமர மாகிய அரசமரத்தின் கீழ், ஐம்புலனை அடக்கி தவநெறியில் யோகியாக அமர்ந்தார் மூலனாகிய சுந்தரநாதர். 'தவராஜயோகி' ஆகி மவுனம் காத்தார்.

ஒரு வருடம் தவமிருப்பார் திருமூலர். ஒரு பாடலைப் பாடுவார். மீண்டும் தவத்தில் மூழ்குவார். ஒருவருடம் முடிந்ததும் தவத்தால் தாம் பெற்ற அனுபவத்தை ஒரு பாடலாகப் பாடுவார். அப்படி மூவாயிரம் ஆண்டுகள் தவமியற்றி மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை அருளிச் செய்தார்கள் திருமூல நாயனார். மேலும் 'தன்னை நன்றாகத் தமிழ் செய்ய என்னை நன்றாக இறைவன் படைத்தான்' என்று தன் வாழ்வின் நோக்கத்தை அறிவித்தார்.

*முதல் மொழிபெயர்ப்பாளர்*

சதாசிவன் வடமொழியில் 28 ஆகமங்களை உபதேசித்தார். அவற்றில் காலத்திற்கு தேவையான காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம், வியாமளம் என்னும் 9 வடமொழி ஆகமங்களை தமிழாக்கி எளிதாக்கித் தந்தார். இது பத்தாம் திருமுறையாக போற்றப்படுகிறது.

*அன்பே சிவம்*

திருமந்திரம் ஆகமத்தின் சாரமாக அமைந்திருந்தாலும் அனைவரும் அறியக்கூடிய எளிமையும், இனிமையும் உடைய பாடல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. 'அன்பே சிவம்' என்ற தொடரைப் பலரும் அறிவோம். மனிதர்கள் ஏனைய மனிதர்கள்பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய கடவுள் சார்புடைய மதங்களும், கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினைப் பெரிதும் போற்றியே உரைக்கின்றன. இதைதான் நீங்கள் பிறர் மீது அன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தினால் இறைவன் உங்கள் மேல் அன்பு செலுத்துவார் என்று திருமூலரும் வலியுறுத்தியுள்ளார்.

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்
- திருமந்திரம் 270

***உள்ளமே கோயில்***

இறைவனை அறிவதற்கும் அடைவதற்கும் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று அக வழிபாடு, மற்றொன்று புற வழிபாடு. இதில் அக வழிபாடு தியானம் அதாவது தவம், அதேபோல புற வழிபாடு பூஜை, தொண்டு ஆகியவைதான். உள்ளம் பெருங்கோயில் எனக்கூறிய ஆன்ம நேய அருட்கவி திருமூலர். கடவுள் வெளியே இல்லை உன் உள்ளேயும் இருக்கிறார் என்பது தான் கடவுள் பற்றிய இவரது ஒற்றை வரி கண்டுபிடிப்பாகும். இதைதான் அகம்பிரம்மா என்று வேதம் கூறுகிறது. எனவே உள்ளத்தில் அன்பு இல்லாமல் கூடைகூடையாய் கோயிலுக்கு லட்சார்ச்சனை செய்வதை விட, உள்ளன்போடு கடவுளை வணங்கினால் போதுமானது என்கிறார்.

அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்போன் மணியினை எய்த ஒண்ணாதே
- திருமந்திரம் 272

கோயிலுக்குச் செல்வது, பூஜை செய்வது, மந்திரம் சொல்வது, படையல் வைப்பது போன்றவையெல்லாம் முக்கியம்தான். ஆனால் அவற்றையெல்லாம்விட, உண்மையான அன்பு வேண்டும். அதனால் உங்கள் உள்மனம் குழைந்து அவனை வணங்கிச் சரணடைய வேண்டும். அப்போதுதான் ஒப்பற்ற மணியாகிய அவனது திருவருள் உங்களுக்குக் கிடைக்கும்.

அதேபோல விண்வெளியையும், கோள்களையும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் நவீன வாழ்க்கை முறையில் முதலில் தன்னை யார் என்பதை அறிந்த கொள்ள யாரும் முற்படுவதில்லை. எனவே முதலில் உன்னை நீயே அறிந்துகொள், அப்படி அறிந்துகொண்டால், அனைத்தும் அறியலாம் என்கிறார் திருமூலர்.

என்னை அறிந்திலேன்
இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும்
அறிந்திலேன் - திருமந்திரம் 2366


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மிகமும் அறிவியலும் வேறன்று, இரண்டும் ஒன்றென்றார். ஆன்மிகத்தால் தான் பெற்ற அறிவியல் கருத்துக்களை விதைத்தார்.

குறிப்பாக மருத்துவ அறிவியலுக்கு முன்னோட்டமாக, பல வியத்தகு அறிவியல் அற்புதங்களை விளக்குவதாக உள்ளன. திருமந்திரம் இரண்டாம் தந்திரத்தில் 'கரு உற்பத்தி' எனும் தலைப்பில் உள்ள 41 பாடல்களை இன்றைய மகப்பேறு குறித்தும் பாடியுள்ளார்.

சேர்க்கையின்போது, பெண் வயிற்றில் மலம் மிகுந்திருந்தால் குழந்தை மந்தனாகப் பிறக்கும். சிறுநீர் தேங்கியிருந்தால், ஊமைக் குழந்தையும், இரண்டுமே இருந்தால் குழந்தை குருடாகவும் பிறக்கும் என்று 481 - ஆம் பாடலில் சொல்கிறார் திருமூலர். எனவே சேர்க்கைபோது தூய்மையுடனும், உயர் எண்ணங்களுடனும் தம்பதிகள் இருந்தால் நல்ல பிள்ளை உருவாகும் என்கிறார்.

எல்லா உயிர்களையும் நேசி
யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது
ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன் உரை தானே

- திருமந்திரம் 252

எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும். பசுவுக்குப் புல் தருவது, ஏழைக்கு ஒரு கவளம் உணவு தருவது, துன்பத்தில் உள்ளவருக்கு ஆறுதல் சொல்வது, பெற்றோரைக் காப்பது, மற்றவருக்கு உதவுவது ஆகியன தர்மங்கள் என்கிறது திருமந்திரம்.

ஆக, நாம் திருமந்திரம் காட்டும் வழிப்படி தர்மங்கள் செய்வோம் பொல்லாப் பிணியும், சொல்லொணா துயரங்களும் இல்லாத வாழ்வை பெற்று மகிழ்வோம்.

ஆற்றரு நோய்மிக்கு,
அவனிமழை இன்றிப்
போற்ற அருமன்னரும்
போர்வலிகுன்றுவர்
கூற்று உதைத்தான்
திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில்தானே

- திருமந்திரம் 517



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயங்களில் பூசைகள் குறைந்தால் நோய் மிகும், மழை குறையும், மன்னர் கெடுவர் என்கிறார் திருமூலர். திருக்கோயிலை முன்னோர்கள் பக்தியுடன் கட்டினர். அதற்கு பலகோடி சொத்துக்களையும் தந்தனர். ஆனால் அந்தச் சொத்துகளை இன்றைய மக்கள் அபகரித்து வாழ்கிறார்கள். கோயில்களை வியாபார நோக்கில் செயல்படும் மையங்களாக மாற்றி வருகிறார்கள். அதனால்தான் வளம் குன்றி மழையை இழந்தோம் துயரங்களை அனுபவிக்கிறோம்.

அதேபோல மனிதன் இயற்கையை கடவுளாக வணங்கியவரை அதுவும் இயல்பாக உதவியது. இன்று இயற்கையை அழித்து, மாசுபடுத்துவதால் இயற்கை பேரிடர்கள் உருவாகின்றன. எனவே ஆலய பூசைகளை முறைப்படி செய்வோம் மழை பெறுவோம்!

### *திருமூலர் காட்டும் வழி*

நம்மால் ஞானியர் போன்று பாவபுண்ணியங்களைக் கடக்க இயலா விட்டாலும், பாவங்கள் செய்வதையாவது தவிர்ப்போம். இயன்றவரையிலும் தான-தருமங்கள் செய்து, ஞானநூல்கள் காட்டும் அறவழியில் வாழ்வோம். அப்போது நம் மனவளமும் வாழ்க்கையும் சிறக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Founder - Guru
Swami R. K. Murugesu

ॐ

"Om bhoor buwaha Swaha, Om thath savithur varenyam
bhargo devasya dheemahi Dhiyo yohaha prachodayath"
(Gayathri Manthra)

**SRI GAYATHRI PEETAM**
*Sri Lankatheeswarar Temple*
*(Yogashram)*
**SRI GAYATHRI PEETAM ( INTERNATIONAL) TRUST**
" Sri Nagar " 82, Lady McCallum's Drive, Nuwara Eliya, Sri Lanka.



Sri Gayathri Vedha Madha

# இரங்கல் செய்தி

சித்தர் நெறியின் சீரினைப் பேணியவர்

ஓம் பூர் புவஹ ஸ்வஹ
ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நஹ பரசோதயாத்

தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்திய ஈழ மண்ணில் பிறந்து இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தில் வாழ்ந்து பரு/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை, க/கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம், க/விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராக கடமையாற்றிய கல்விமானாக பரோபகாரியாகத் திகழ்ந்தவர் திருமதி இராஜேஸ்வரி நந்தகுமார். ''மங்களம் என்பது மனசாட்சி அதன் நன்கலம் நன் மக்கட் பேறு'' இது வள்ளுவர் வாக்கு.

அவர் தனது கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், ஊர்மக்கள், (ஊரவர்) எல்லோருடைய அன்பையும் ஒருங்கே பெற்றவர்.

அமரர் திருமதி இராஜேஸ்வரி நந்தகுமார் பல தசாப்தங்களாக ஸ்ரீ காயத்ரி பீடத்திலும் சற்குரு தேவரிலும் மிகுந்த பக்தி கொண்டு பீடத்தின் ஆன்மீகப் பணிகளிலும் முக்கிய பங்கெடுத்து பல வழிகளிலும் சற்குரு தேவரின் திருவருள் கடாட்சத்தைப் பெற்றவர். குரு தேவரிடத்தில் இறுதியாக தீட்சை ஏற்ற குடும்பம் என்ற பெருமையையும் பெற்றவர்கள்.

''தாயோடு அறுசுவை போம்
சேயோடு தான் பெற்ற செல்வம் போம்
ஆய வாழ்வு உற்றார் உடன் போம்
உடன் பிறப்பால் தோள் வழி போம்
பெற்றாளி யோடு எவையும் போம்''

என்பது ஔவையின் வாக்கு, இதற்கு யாரும் விதிவிலக்கல்ல என்று எண்ணி எண்ணி அடைவோம் ஆறுதல்.

அன்னாரின் பிரிவால் துயரும் அனைவருக்கும் எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காயத்ரி தேவி, சற்குரு முருகேசு மகரிஷி அமைதி, ஆனந்தம் நிறைந்த அருள் வாழ்வாம் பெரு வாழ்வை அளித்து காப்பார்களாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

S. Chandramohan.

சக்திவேல் சந்திரமோகன்
அறங்காவலர் / தலைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ............ ஆத்மா சாந்தி பெறுக

உலகில் பிறக்கின்ற எவரும் இறப்பது இயற்கை நியதி இதற்கிடையில் வாழுங்காலத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சமூகத்திற்கு நல்லனவற்றை செய்து நல்ல நிலையில் உயர்ந்து வாழ்வது இம்மைக்கும் மறுமைக்கும் நல்ல கதிக்கும் ஏதுவாகிறது. இவற்றுக்கமைய வாழ்ந்து மறைந்தவர் இளைப்பாரிய பாடாசலை அதிபர் அமரர் திருமதி. ராஜேஸ்வரி அவர்கள்.

குடும்ப விளக்காக கணவனுக்கு உகந்த மனையாளாக பிள்ளைக்கு பாலுடன் இராமாயண, பாரத இதிகாசப் பண்புகளையும் ஊட்டி சான்றோர்களாக்கிய அன்னையான அவரின் மறைவு குடும்பத்தினர்க்கு பேரிழப்பு என்பது உண்மை.

இல் வாழ்விலுள்ளோர் அனைவர்க்கும் முன்னுதாரணமாய் வாழ்ந்த இத் தம்பதியின் அன்பு இனியும் இக் குடும்பத்தினரைக் காக்கும். எல்லா மக்களும் திருமண வாழ்வில் ஈடுபட்டுள்ள நிலையில் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அத்தனை பேரையும் அன்பு வரையுள் அகப்படுத்தி ஒரு பெரிய வலைப்பின்னலைப் பக்குவமாய் பேணி வந்த அம்மையாரை குறிச்சிகுமரனின் திருவடிகளில் அவரது ஆத்மா ஈடில்லாப் பேரின்பம் பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ. க. வரதராஜ குருக்கள்
குறிஞ்சி குமரன் கோவில்
பேராதனை பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயுளாய் உள்ளாய் உள்ளாய்!

அன்பெனும் வலையை வீசி
ஆயிரம் உள்ளம் அள்ளி
மன்பதை உலகில் - நல்ல
மாதுவாய்ப் பவனி வந்தாய்!
கன்னலின் சாறும் தோற்கும்
கனிமொழி பேசி நின்றாய்
இன்றில்லை.........
எங்கு போனாய்?
இதயமே வேகுதிங்கே!

சொல்லிடும் சொல்லில் என்றும்
திறம்புதல் உன்னில் இல்லை!
கல்லதும் கனியும் பேச்சில்
காண்பவர் மகிழ்ச்சி முல்லை!
பல்லினத்தோரும் உன்னை
பண்பினில் மிக்காய் என்றே
சொல்லிடும் சொற்கள் கேட்டேன்
சொல்லிடு! என்று காண்போம்?

நறுமலர் பறித்துத் தெய்வ
நற்பத மலரில் வைத்தாய்!
அறுசுவை உணவை ஆக்கி
அன்பொடும் அதனை இட்டாய்!
பொறுமையாய் எதையும் செய்யும்
பொன்நிகர் பண்பு பூண்டாய்!
அறுபதைக் கடந்த அன்பே
ஆறுவேன் எதனை சொல்லி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர் உன்னைப் போற்றும்
பெருமைகள் பெற்றாய், நல்ல
கற்றவர் உன்னைப் போற்றும்
காரியம் பலவும் செய்தாய்,
உற்றவர் ஊரவர்க்கும்
உரியன செய்து வாழ்ந்தாய்
நற்றவ நல்லோய்! உன்னை
நானினி என்று காண்பேன்!

தீயசொல் சொல்லா உன்னைத்
தீயுமே உண்டதேனோ!
தாயென நின்ற நீதான்
தனியனாய்ச் சென்றதேனோ!
வாயிலே வார்த்தை அற்றேன்
வருபவருக் கென்ன சொல்வேன்
காயுமா இந்தச் சோகம்
என்றும் நீ எந்தன் பாகம்!

நினைவுகள் சுமந்தேன், நாளும்
நீள்பகல் இரவு எல்லாம்
நனைந்திடு விழிகள் கொண்டேன்!
நாளது கிழமை எல்லாம்
நினைவினில் இல்லை இப்போ,
நீயிலை என்று என்னால்
நினைக்கவே முடியவில்லை
நீயுளாய்! உள்ளாய்! உள்ளாய்!!....

உங்கள் பாசமிகு கணவர்
(அபோசலர்)
பேராசிரியர் வை. நந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா.....

இந்த உலகத்தின் உயிர்மூச்சாய்
அனைத்து உயிர்களின் சுவாசமாய்
வாழ்க்கையின் உயிரோட்டமாய்
பிரபஞ்சத்தின் ஆணிவேராய்
இருப்பவள் அம்மா

மனிதர்களுள் மேன்மையானவளாய்
தெய்வங்களே வணங்கிடும் தெய்வமாய் நடமாடும் அழகு
தேவதையாய் அன்பின் திருவுருவமாய் விளங்குபவள் அம்மா

பத்து மாதம் தன் பொன் வயிற்றில் பத்திரமாய் எனை சுமந்து
வலிகள் பல தாங்கி பத்திரமாய் எனை பெற்றெடுத்தவள் அம்மா

அந்தி பகல் கண் உறங்காது அவளது உதிரத்தையே பாலாக்கி
தன் வாழ்வைத் துறந்து எமக்காய் வாழ்பவள் அம்மா

பசி தூக்கம் இழந்து உற்றார் உறவினரை மறந்து
அவள் நலம் பாராது தன் குழந்தைகளுக்காய்
வாழ்கின்ற தேவதை தான் அறிவிலியாய் இருந்தாலும்
தன் பிள்ளை உயர்ந்தவனாய் விளங்க
சிறந்தவற்றை எல்லாம் அவனிற்கு அளித்திட கடினமாய்
உழைக்கும் உழைப்பாளி

உலகமே ஒன்றாகி தடையாக
நின்ற போதும் உயிராக தன் குழந்தைகளை காப்பவள்
காவல் தெய்வங்கள் பல உள்ள போதும் தாய் போல் நமை
காப்பவர் யாருமில்லை

தாயிற் சிறந்த கோவிலுமில்லை
நம் மனமெனும் கோவிலில் அமர்ந்து எப்பொழுதும்
துணையாக உதவி தரணியிலே நடமாடும் தெய்வம் நம் தாய்

தாய் போல் உலகில் யாரும் சொந்தங்கள் இருப்பதில்லை
தன் பிள்ளைகளை மன்னிப்பதில்
அவளுக்கு நிகருண்டோ இந்த அவனியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் கடுக்க கடினப்பட்டு அடுப்பங்ரையில்
நின்று தோசை சுட்டிடுவாள் பிள்ளைகளுக்காக
தன் பங்கையும் ஊட்டிடுவாள்
அல்லும் பகலும் அயராது உழைத்து
தான் பெற்றபிள்ளை ஞானத்தில் சிறப்புற்று
தன் பெயர் கூறக்கேட்டு வலி மறந்து சிரித்திடுவாள்

உருவம் அறியாமல் நாம் கருவில் இருந்தபோதே
நமக்கு தெரியாமல் நமைக் காதல் செய்தவள்
நாம் எத்தனை தவறு செய்தாலும்
நமை அரவணைக்கும் ஒரே ஒரு ஜீவன் அம்மா

தன் பிள்ளையை எத்தாயும் வெறுத்ததில்லை
வெறுப்பையும் அன்பாய் காட்டத் தெரிந்தவள்
ஒரு நொடி எமைப் பிரிந்தாலும் உயிரைப்
பிரிந்தது போல் துடிப்பவள் அம்மா

வேகமும் விவேகமும் தந்து எந்நாளும்
நிகரில்லா சுவாசமாய் நிற்பவள்
ஈரேழுலகமும் போற்றி வணங்கிட
ஈரெட்டாய் நிறைந்தவள் அன்னை

அம்மா என்ற ஒற்றைச் சொல்லே
வலிகளையும் களைந்து விடும்
அத்தனை அன்பு வாய்ந்தவள் அம்மா

அவள் இன்றி ஓரணுவும் அசையாது
மனிதன் முதல் விலங்கு வரை
அத்தனையிலும் அவளதிகாரம்
அகிலம் போற்றும் தேவதை அம்மா

பெற்றவர்கள் பெருமை சொல்லிட
பிள்ளைகள் தான் மறந்தாலும் - தாய்
தன் பிள்ளை பெருமை பாட
என்றும் மறந்ததில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் முதியவராகி இல்லத்தில் இருந்தாலும்
தன் பிள்ளை நலமாய் வாழ வேண்டிடுவாள்
கால்கள் துவண்டாலும் தன் மகனைக் காண
நூறுபடிகள் ஏறத் தயங்காதவள் வயோதிபத்தில்
அவள் வாய்பேச மறுத்தபோதும் வார்த்தைகள்
வரமறுத்த போதும் அளவள் கண்கள் பேசின
கைகள் பரிவுடன் தடவிக் கொடுத்தன
கடைசி வரை அவள் உதடுகள் என் பெயரை
சொல்ல மறக்கவில்லை

கண்கள் எனைத் தேடுவதை நிறுத்தவில்லை
ஒவ்வொரு முறையும் விடைபெறும் போதும்
அவள் கண்கள் ஏங்குவது எமக்கு நெஞ்சுருகும்
தாயில்லாத உலகம் இருண்டது

ஆயிரம் கவி பாடினாலும்
அன்னை புகழ்பாட வார்த்தைகள்
கிடைப்பதில்லை உடலிற்கு உயிர் கொடுத்து தன்
தமிழ்ஞானத்தையும் அளித்து உலகத்தில் வாழ
வழி செய்த அன்னையை உயிர் உள்ளவரை உளம் போற்றி
உத்தமராய் வாழ்ந்திடுவோம்

சிரேஷ்ட புதல்வன்
தனஞ்ஜெயன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவான அன்பு மாமிக்கு......

கடவுளின் அழகிய வடிவம் பெண்மை - அதில்
பெருமையின் படிமம் தாய்மை
என்னவருக்கு தாயானாலும் - உங்கள்
எண்ணிலடங்கா பாசக்கடலில்
மூழ்கினேன் நானும் தங்களின் பிள்ளையாய்!

என்னவென்று தெரியாமல் ஏதும் புரியாமல்
ஏதோ ஒரு பயம் அடிவயிற்றை பிசைய
அடியெடுத்து வைத்த எனக்கு - அன்னையாய்
கோழி தன் குஞ்சுகைளை சிறகுகளால்
காப்பதைப் போல் ''பிரபுக்சுஞ்சு பிரபுக்குஞ்சு''
என்றழைத்து மகிழ்ந்தீர்களே!

வியாபாரி மூலையில் பிறந்து
விருந்தோம்பலில் சிறந்து அழகுத் தமிழை
படித்து அன்பான வார்த்தைகளை உதித்து
அன்றாட வாழ்க்கையின் அவசியமான
பண்புகளை கடைப்பிடித்து
அதிபராய், ஆசிரியராய் அனைவருக்குமான
கல்வியை வழங்குனீர்களே அம்மா!

மலரும் நினைவுகளின் மனம் லயித்த பல
தருணங்கள் மாந்தர் தம் மனை
சிறக்க வந்த தேவதை நீங்கள்
மன்னிக்கும் பக்குவமும் மாறாத புன்னகையும்
மனதார வாழ்த்தி மகிழ்ச்சியடையும்
மானிடப் பிறவியம்மா நீங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்கள் ஆண்டாலும் பட்டங்கள்
பெற்றாலும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும்
சக தோழியாய் சம்பாஷனையால்
புரியவைத்த புண்ணியவதியம்மா நீங்கள்

அன்பான அம்மாவிற்கும் அப்படியொரு பிடிப்பு
பிறவிப்பிணி தீர்க்கும் பிரதோஷம் தொட்டு
காயத்திரி அம்மனின் கடைக்கண் பார்வை
கிடைக்கும் வரை கடவுளை கைதொழுதீர்களே அம்மா!

ஆத்மா சாந்திக்காய் அனைவரும்
பிரார்த்திக்க - நான்
அம்மாவின் அடிப்பாதம் நடந்து அவரின்
கனவுகளையும் இலட்சியங்களையும்
நிறைவேற்ற மகளாய் மருமகளாய்
காத்து நிற்கின்றேன்.

உங்கள் பிரிவுத்துயரால்
ஏங்கும் பிரபுக் குஞ்சு
மூத்த மருமகள் (மகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகளில்
# என்றும் அப்பம்மா.....

தவப்பயன் என்றிடவே
தத்ரூபமாய்
வந்துதித்து
தேந்தமிழ் தன்னுடன்
தேனையும் ஊட்டி
அன்பையும் அதனுடன்
அறிவையும் வளர்த்து
பேரொளி வடிவான
அன்புப் பேத்தியாரே

தரணியில் பூத்து
திலகம் இட்டு
தமிழ்த்தாய் மடியில்
தமிழ்க் கொழுந்தாய்
வளர்ந்து
தம்பெருமை தான்
வளர்த்து தகைமை
பலவும் பெற்று
தம் மாணாக்கர் நலம்
சிறக்க கல்விப் பணி
செய்தாய்

திருமணப்
போர்வையில் திரண்ட
மழைமுகிலாய்
தன்கை பிடித்த
தன்னவர் காக்க
தினமும் வாழ் நாள்
தவமாய் கழித்து
வாழ்ந்து காட்டி
வான்புகழ் பெற்றாய்

ஐயிரு திங்கள்
அன்பாய்ச் சுமந்து -
தாயாய்
நால்வர் தனை
பெற்றெடுத்து
ஊண் ஊட்டி உடல்
வளர்த்து
அவர்தம் மணக்கோலம்
கண்டு மகிழ்வுற்றாய்

மணக்கோலம் பூண்டு
வந்த மருமக்கள்
தம்மையும்
மனம் மகிழ்ந்து
அணைத்தாய் உன்
குழந்தைகளாய்
இல்லறம் தன்னில்
அவர் பெற்றெடுத்த
எம்மையும்
இனிதென வளர்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக இயல்பிது
காட்டினாய்

உறவுகள் காத்து
உள்ளங்கள் பல
மகிழ்வித்து
உத்தமனார் பக்தை
என்றும் வாழ்ந்த
உந்தன் பேச்சுகளும்
கோலம் தன்னும்
சேர்ந்து
மாறிவிட்டதே இன்று
ஞாபகமாய்

உன்கை பிடித்து
உள்ளம் மகிழ்ந்து
உனக்காய் வீணை,
பரதம் படித்து
உன்முகம் மலர
உவகையும் பூக்க
உன்னடி அடைந்தேன்
உத்தமி இன்று நீ
எங்கே?

அன்பாய் ஆருயிராய்
அறிவின் சிகரமாய்
இந்த அவனி மேல்
பிறந்தாய் ஓர்
அற்புதமாய் - இன்று
வானோர் அழைக்க
மண்ணவர் பிரிந்து
நீயும் நீங்கினையோ
நித்தியமாய்

என்றும் உங்கள்
நினைவில்
மூத்த பேத்தி அருணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amma - Tribute in Light

An amazing woman who always put her family first. She had an infectious smile and a contagious laugh that could light up the room, She was always there to lend an ear, offer advice, and provide a hug when needed. I will forever miss her unconditional love and support.

Amma was a very selfless, sensitive and compassionate person who always put others first. She loved her family, friends, colleagues, and students very deeply. Her legacy will be told for years to come and her impact and love felt by all.

It is great privilege to write this eulogy to express our sadness that all of us, Suji, Tharun, Dhilan and Sachin share over her loss. Amma , thank you for everything you've given us. The distance between us mat seem great but your love will bridge the gap and bring us closer together than ever before.

I will cherish the memories of our time in Jaffna as I held your hand and walked to school, as I peddled the bike as you sat beside me, my fond childhood memories are deep seated and bring a smile to my face as I reminisce. You were the one I turned to, you were my anchor.

Ammamma, our grandmother days may pass, months days fade, years may disappear but your love, kindness, simile and care will always remain in our hearts ..... Ammamma

When someone you love becomes a memory, that memory becomes a treasure and we will treasure you for a lifetime and more.

Dr. Jeeva, DrSuji
Tharun, Dhilan and Sachin


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா!!

இளைய மகன் என தரணியில் எனையீன்று,
கொடு இருள் எமை தாக்க, தனியென நீ தகர்த்தாய்...
வரும் வெடி எது திசை மானிடம் தவிக்க,
முகமதில் வதனம் சூடி, மார்பினில் எமை காத்து,
கருங் கடல் நெடுந்தூரம் சிவனிடம் கொணர்ந்தாய்!

இதுவுன் கவசமென கல்வியை காட்டி,
விதியினை விஞ்சிட பலமது மனமெனயுணர்த்தி,
பலரது விழிகளில் இதுவல்லோ ஜெயமென
தீவு கடந்த இளையனை தரிசனமாக்கினாய் தாயே!

இனியெது தடையென பாரினில் நானுய்ய,
நான் வந்த யாத்திரை நிறைவென நினைத்தாயோ?
ஓய்விலா மதியேயுன் உருவதை அருவமாக்கினாய்,
பாரினில் யாரதை நானினி தாயென்பேன்... அம்மா!!

உங்கள் பாசமிகு இளைய மகன்
ஜெயதரசன் (ஜெய்) நந்தகுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குல தெய்வம்

எங்கள் குலதெய்வம் எம்மை அன்போடு
அரவணைத்து ஒன்றாக்கி வாழவைத்த வழிக்காட்டி!

*"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல*
*மாதவம் செய்திட வேண்டும்"*

என்ற கவிஞனின் கவி வரிக்கு உயிர்க்கொடுத்து மங்கையருக்கு பெறுமை சேர்த்த மாதரசி நீங்கள்!

*"ஈதல் இசைப்பட வாழ்தல் அது*
*அல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு"*

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாக்கின் படி இவ்வாழ்க்கை முதல் ஈகை ஈராக சொல்லப்பட்ட இல்லத்தில் வழுவாது ஒழுகி இறவாது நிற்கும் கீர்த்தி எய்தி வாழ்ந்துக் காட்டியவர்

தமிழும் சமயமும் இரு கண்ணெனப் போற்றி
அதனையே எமக்கும் வழியாகக் காட்டியவர்

வாழக்கை என்பது ஒரு பல்கலைக்கழகம் அதில் பல பட்டங்கள் பெற வேண்டும் என்பதை எனக்கு தெளிவுப்படுத்தியவர்
நான் பார்த்து வியந்த பல்கலைக்கழகம் நீங்கள்!

தனக்கென ஒரு வாழ்க்கைப் பாதையை வகுத்து வாழ்ந்து அதில்
நாமும் மகிழ்வுடனே பயணிக்க வழி செய்தவர்

*"அன்பும் அறனும் உடைத்து ஆயின் இல் வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது"*

எனும் பொய்யா மொழிப் புலவனின் குறல் மொழியை எமக்கு வாழ்வாக்கி ஊட்டியவர் நீங்கள்!

இன்று உங்கள் அன்பும் அரவணைப்பும் இழந்து உங்கள் இன்முகம் காண ஏங்கி தவித்து விழி நீர் சொரிந்து நிற்கின்றோம்.

உங்கள் ஆத்மா இறைவனடியில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

உங்கள் ஆசீர்வாதத்துடனும் வழிகாட்டலுடனும் எமது வாழ்வைத் தொடர்கின்றோம்.

உங்கள் அன்பு மருமகள்
அஜந்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயத்திலிருந்து....

பெண் பிள்ளை வேண்டுமென்று பல வருடம்
தவமாயிருந்து என்னைப் பெற்றெடுத்தவள்
பாலூட்டி சீராட்டி பசி மறந்து என்னை ஆளாக்கி
கண்ணுக்கு இமையாய்க் காத்தவள்
இன்று என்னைத் தனியாய் விட்டு அவள் மட்டும்
இவ்வுலகு விட்டு சென்றது ஏனோ?
உன் பாசம் கண்டு காலனுக்கும் வந்ததோ
என் மீது கடும் பொறாமை

அன்பில் அரசியாய் பண்பிற்கு இலக்கணமாய்
இவ் உலகில் வலம் வந்தாய்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
அனைவருக்கும் நல்லதையே போதித்தாய்
பள்ளி அதிபராய் பலரை நீ வளர்த்தாய்
பாசத்திற்கு அதிபதியாய் - எம்மில் குடி கொண்டாய்
ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தாய் - தன்
பிள்ளைத் தானே வளரும் என

பூமித் தாயைப் போல் பொறுமை வேண்டும்
என்று சொல்லி வளர்த்தாய் அம்மா எமக்கு
யார் மனமும் புண்பட ஒரு வார்த்தை நீ கதைத்து
நான் அறிந்ததில்லை அம்மா
பாரதியின் கண்ணம்மாவாய் இவ்வுலகில்
வலம் வந்தாய் நீ அம்மா
நீ கற்றுக் கொடுத்த நன்னெறியும் நல்லடக்கமும்
நான் மறவேன் என்றும் அம்மா

இரவு பகல் பாராமல் ஒளி விளக்காய் என்னருகில்
என்றென்றும் நீ இருந்தாய்
என் நிழல் கூட என்னைத் தீண்டாமல் என்னருகில்
விழித் திறந்து காத்திருந்தாய்
என்ன தவம் செய்தேன் உனக்கு மகளாய் பிறக்க
என்ன வரம் பெற்றேன் நீ என் தாயாய் வந்திட
இன்னும் எத்தனை பிறவிகள் நான் எடுத்தாலும்
இதே வரம் வேண்டும் அம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் இடுப்பில் எனை சுமந்து நீ நடந்த பல தூரம்
யுத்தத்திலும் எம் உயிர்க்காக்க நீ பட்ட வேதனை
எத்தனை தியாகங்கள் எத்தனை கஷ்டங்கள் நீ கண்டாய்!
இன்று நான் தலை நிமிர்ந்து நிற்க
உன் கடமை முடியவில்லை என்று - உன்
மனம் நிறைய பேரப்பிள்ளைகளை நீ வளர்த்தாய்!
ஒரு கஷ்டமும் நான் அறியாமல் வளர - என்
ஆணி வேராய் என்னை அரவணைத்தாய்!

இத்தனை வருடத்தில் பிழையென்று ஒன்று
கண்டறியேன் உன் மீது அம்மா
அன்பான மனைவியாய் கண்டிப்பற்ற அம்மாவாய்
பாசத்தை அள்ளித் தெளிக்கும் பேத்தியாராய்!
அனைவரையும் அரவணைத்து அயலவரையும்
உறவினரையும் உள்ளத்தால் இணைத்து
இன்று எம்மை விட்டு பிரிந்துச் சென்றாயே!
இவ்வுலகு போதும் என்று

பல மாத படுக்கையில் நோயுற்று நீ இருந்தாலும்
என் அன்னை நீ அன்றோ!
அன்னையர் தினத்தன்று அன்போடு உனை
அணைத்திட ஆவலாய் காத்திருந்தேன்
ஆனால் நீயோ எனக்குப் பாரமென எண்ணி
இவ்வுலகம் விட்டுச் சென்றாயோ?
எத்தனை வருடம் ஆனாலும் - உன்
அன்பு இனி கிடைக்குமா? எனக்கு

உன்னைக் கட்டியணைத்த என் கையால்
உனக்கு வாய்க்கரிசி போட வைத்தது ஏனோ?
உள்ளம் கலங்கி மனதுடைந்து நிலை குலைந்து
நிற்கின்றேன் உன் பாசத்திற்காய்
மீண்டும் ஒரு முறையாவது உன் மடியில் தலை சாய
எனக்கு வரம் கிடையாதா என்று
என் கண்முன்னே உன் உயிர்ப் பிரிவதை பார்த்தும்
தடுக்க முடியாத பாவியாகிவிட்டேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக சிந்தனையும் இறை வழிபாடும்
தூய உள்ளமும் நிறம் மாற குணமும்
இப்பிறவியில் சேர்த்த புண்ணியமும்
பெற்ற இறை தீட்சையும்
நான் அறிவேன் உமக்கு நல்லதொரு இடம்
காத்திருக்கின்றது விண்ணுலகில் என்று
ஆனால் இந்த பாவி மனமோ ஏங்குகின்றது
மறுபடியும் உன் முகம் பார்க்க

மண்ணோடு பூவுடல் மறைந்து விட்டாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களிலிருந்து ஒரு போதும் மறையப்போவதில்லை.

நெஞ்சில் வலிமையுடனும் நீங்காத நினைவுகளுடனும்
என்றென்றும் உங்கள் அன்பு மகள்
Dr. ஜனனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான மாமியாரே......

மாமியாரே நீங்கள்
அமைதியின் உருவமாகவும்
அன்பின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம் மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த எமது பாசமிகு உள்ளம்!!

மண்ணோடு உங்கள்
பூவுடல் மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களிலிருந்து
ஒரு போதும் மறைவதில்லை

நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே
அன்பான ஜீவனே உங்கள்
பெயரும் விளங்கும்!!

கல் மனம் படைத்த காலானவன்
கவர்ந்தானோ உங்கள் உயிரை
உங்கள் ஆத்மா என்றும் எங்களை
நல்வழிப்படுத்தும்!!

மருமகன்
Dr. சஞ்சீவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அம்மம்மாவுக்கு......

நான் பிறந்த நாள் முதல் உங்கள் கடைசி
மூச்சு வரை கட்டியணைத்த உங்கள் கரங்கள்
தள்ளாடும் வயோதிபத்திலும் எனை தூக்கி வலம்
வந்த உங்கள் கால்கள்
என்றும் வாடாத உங்கள் முகமும் மலர்ந்த புன் சிரிப்பும்
அம்மாவுக்கும் மேலான உறவு நீங்கள் என் அம்மம்மா!!!

பத்து மாதம் தான் வயிற்றில் சுமந்தாள் என் அன்னை
ஆனால் நீங்களோ உங்கள் உயிருள்ளவரை
உங்கள் உள்ளத்தில் சுமந்தீர்கள்!
வேறெந்த பேரப்பிள்ளைக்கும் கிடைக்காத வரம் பெற்றேன்
நான் உங்கள் பாசம் கிடைத்திட
எதிர்ப்பார்ப்புக்கள் ஏதும் இல்லாத ஒரு உள்ளம்
அது நீங்கள் தான் அம்மம்மா!!!

என் பசி தீர்க்க நீங்கள் சுட்டுத் தந்த முட்டை தோசையும்
இறால் பொறியலும், மீன் பொறியலையும்....
திருட்டுத் தனமாய் அறையில் ஒளித்துத்தரும் பிஸ்கட்டும்
எப்படியாவது என்னை சாப்பிட வைத்திட நீங்கள்
செய்திடும் தந்திரமும்
வாழைப்பழமும் சோறும் மாம்பழமும் புட்டும்
ஒவ்வொரு முறையும் கடைக்குச் சென்றால்
வாங்கித் தரும் நொறுக்குத் தீனியும்

யாரும் எனை வார்த்தையால் கூட தீண்டாமல் காத்திடுவீர்
அம்மா வேலைக்குச் சென்ற பின்பும் - என்னை
ராஜகுமாரன் போல் அரவணைத்திடுவீர்!
உங்கள் கைபேசியில் பல நேரம் விளையாட விட்டு ரசித்திடுவீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன கிழியல்கள் கூட என் ஆடையில் இல்லாமல்
உங்கள் கைகளால் தைத்து எனை அழகுப் பாத்திடுவீர்
உங்கள் அரவணைப்பில் வளர்ந்தவன் நான்
உங்கள் பெயர் சொல்ல வாழ்ந்து காட்டிடுவேன்
உங்கள் பேரப்பிள்ளையாய் உலகில் தலைநிமிர்ந்திட
என்றென்றும் உங்கள் ஆசீர்வாதம் வேண்டும்

உங்கள் பிரிவால் வாடி நிற்கும்
ஹேரிஸ் குட்டி, தேஜஸ் குட்டி
அன்பு மிகு (பேரன்மார்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றன்னை
## வாழ்வில் தவமாய் கிடைத்த வரம்!!

நாம் வாழ நீர் வாழ்ந்த நாயகியே!
நம் தமக்காய் நல்லுரைகள்
பல பகிர்ந்து
நாட்டமுடன் எம் எல்லோர்
உயர்வுகளுக்கு உருதுணையாய்
வாட்டமற எமக்கெல்லாம் வழிகாட்டி
வாழ்வித்தீர்!!
உமக்கல்லா உம் வாழ்வு ஊர்ப்பற்றாய்
பாடசாலைப் பற்றாய்
நேர் எதிர்க்கொள்ளும் எல்லோருக்கும்
நேசமுடன் புன்னகைத்து
வேண்டிய நல் ஆலோசனை
நிதம்பகன்று,
ஆசிரியப்பணி அதிபர் பணியென்று
அனைவரும் மெச்சிடவே,
ஆலவிருட்சமென அரும்பணிகள்
பல ஆற்றி,
ஆத்ம திருப்தி கொண்டீர்!
ஆளுமைகள் பல ஈந்தீர்!
அது போதுமென்றோ இன்று
அமைதி கொண்டீர்!
ஆத்மா அடைக சாந்தி!!

ப. நாகநாதன் (கண்ணண்)
மகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் மறுவடிவமாகி....

அன்புடன் மார்பிலும் தோளிலும்
எமை தாங்கி....
அன்பு மடியில் எனை இருத்தி....
அரிசியில் "அ, ஆ" என் விரல்
பிடித்து எழுதி....
அறிவிற்கு அத்திவாரமிட்டு....
என் மகள் நீ என....
எனக்கு தாயானவர்!!

விதியின் விளையாட்டால்
நாடு விட்டு நாடு சென்றாலும்....
நம் அன்பில் என்றும் பிளவு
கண்டதில்லை!!
மரண படுக்கையிலும் என் குரல்
ஆசை கொண்ட அன்ரியே....
நான் அழைத்தேன்....
உங்கள் முகம் பார்த்தேன்
நீங்களும் எனைப் பார்த்தீர்கள்!!
சந்திராக்குட்டி என்ற
என் ஆசைக்
குரலை கேட்கவில்லை!!

என் அன்ரியின் அன்பு
முகத்தினைப்
பார்க்கவும்
பாசந்தனைக் கொட்டி என் இறுதி
வணக்கத்தை
செலுத்தவும் எனக்கு கொடுத்து
வைக்கவில்லை

தேவி அக்காவின் பிள்ளைகளை
உங்கள் பிள்ளைகளாக
அன்போடு
அரவணைத்து....
அம்மாவை இழந்த எங்களை
தாயாகத் தாங்கினீர்கள்!!
அன்ரி நீங்கள் தெய்வமாக
இருந்து
எங்களை ஆசீர்வதித்து
வழிநடத்துவீர்களாக!!

அன்பான அன்ரிக்கு
என் கண்ணீர் அஞ்சலிகள்!!
என்றும் நீங்கள் வணங்கும்
சிவனின்
பாதத்தில் நீங்கள் சாந்தியுடன்
இளைப்பாறுங்கள்!!

என்றும் உங்கள்
நினைவுடன்
தேவி அக்கா பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்......

நாங்கள் சிறு வயதுமுதல் 'அன்ரி' என ஆசையுடன் அழைக்கும் அம்மாவின் உடன்பிறப்பு, இளைய சகோதரி நீங்கள் தான்..... எங்கள் சிறு வயதில் நாங்கள் உங்களிடம் ஓடி வருவதும் நீங்கள் எங்களிடம் அன்பு காட்டுவதும் அதே மாதிரி உங்களின் குழந்தைகள் சிறுவயதில் எங்கள் வீட்டிற்கு வருவதும் எங்கள் அம்மா அவர்களிடம் அன்பு காட்டுவதும் மறக்க முடியாதவை. ஒரே இரத்தம் தான் அந்த பாசப் பிணைப்பு இல்லாது போகுமா....? அவையெல்லாம் இனிமையான நினைவுகள்....

நீங்கள் ஆசிரியையாக பணியாற்றும் காலங்களில் சேலை அணிந்து, கொண்டைப் போட்டு மிடுக்காக செல்வதை சிறு வயதில் பார்த்து வியந்துள்ளேன். மாணவர்களிடமும், மற்றோரிடமும் கனிவாகவும் அன்பாகவும் அதே நேரம் சிறிது கண்டிப்பாகவும் பலகும் விதம் எல்லோரையும் கவரக் கூடியது. உங்களினது பேச்சாற்றல் விவாதத்திறன், தமிழ் அறிவு போன்றவை உங்களின் பெருமையை எல்லோருக்கும் உணர்த்துபவை. உங்களின் குடும்பம் வேலை இரண்டையும் சிறப்புற நடத்தி பதவியில் முன்னேற்றம் கண்டு பிள்ளைகளையும் உயர் நிலைக்கு உயர்த்தி நல்வாழ்வு வாழ வித்திட்ட பெண்மணி நீங்கள்...

உங்களின் சமய ஈடுபாடு, விரதங்கள், ஆசார முறைப்படி நடக்கும் தன்மை என்பவை போற்றக்கூடியவை. ஒவ்வொரு பௌர்ணமிக்கும் காயத்திரி அம்மனின் தரிசனத்திற்காக எப்படியாவது சென்று அம்மனை தரிசித்து வந்துவிடுவீர்கள். நீங்கள் தந்த காமாட்சி அம்மனின் படம் தற்போது எங்கள் சாமி அறையில் தரிசனத்திற்காக உள்ளது. மகளாக, மனைவியாக, தாயாக, மாமியாராக, பாட்டியாக என்று பல பரிமாணங்களிலும் பூரண வாழ்வு வாழ்ந்து இவ்வுலகைவிட்டு நீங்கியுள்ளீர்கள்.

இனி 'பத்து' என்று அழைக்கும் அன்ரியின் பாசக்குரல் கேட்கப் போவதில்லை.... இந்த உலகைவிட்டு பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றேன்.

தங்கள் பிரிவால் வாடும்

பெறா மகள் பத்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Treasured memories of a special sister

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்,
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

I am so sad that my joy of having a sister did not last long. Even though I miss your physical existence, I will treasure your kind nature until my last breath. Please accept my last breath. Please accept my heartfelt appreciations for what you have done during my mother's funeral. My family & I pray to the Almighty that your soul attains peace.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்

உடன்பிறவா
அன்புத் தம்பி
சீவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

14.05.2023 ஞாயிற்றுக்கிழமை......

வழமையைவிட அதிகநேரம் நித்திரை செய்துவிட்டு கண் விழித்தேன். பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலைக்குச் செல்லும் நான், இன்று உலக அன்னையர் தினம் என்பதால் லீவு கொடுத்திருந்தேன். கண்விழித்தவுடன் எனது செல்பேசியை கட்டிலில் காணவில்லை. செல்பேசியில் கண் விழிப்பது தான் இப்போதைய வழமை என்பதால் அதைத் தேடி எடுத்துக் கொள்கின்றேன். அதில் அதிர்ச்சியான தகவலொன்று இருப்பதை அறியாமல், "Amma Passed Away" - அதிகாலை 2 மணியளவில் Dr. Janani Sancheevan மூலமாக அச்செய்தி பகிரப்பட்டிருந்தது. இதயமே இடிந்தது போலிருந்தது. மனதில் படபடப்பு, கைகால்கள் இயங்காமல் மரத்துப் போயின. எனது தாயார் இறந்தபோது கூட எனக்கு இப்படி ஆனதில்லை. வீடே இருட்டாகியது போலிருந்தது.

ஏறக்குறைய நாற்பது நாட்களுக்கு முன்னர் ராஜேஸ் அன்ரியை கடைசியாக கண்டு கதைத்தது ..... என் குடும்ப சகிதம் அவர்களின் வீட்டு விருந்துபசாரத்தில் கலந்திருந்தோம். ''தம்பி தம்பி'' என என்னை அழைத்ததும் எங்களுடன் சேர்ந்து படம் எடுத்துக் கொண்டதும் ஏதோ நேற்று நடந்தவை போலிருக்கின்றன. தம்பி நீங்களும் எங்க குடும்பத்தில் ஒருவர் தான். வந்திருப்போரையெல்லாம் கவனியுங்கோ, ஒரு குறையும் விடக்கூடாது... என அவர் சொல்லிய வார்த்தைகள் இன்னும் என் காதில் ஒலிக்கின்றது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் யாழ் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையில் அவர் அதிபராக இருந்த போது முதன் முதலில் சந்தித்திருந்தேன். அவரின் நேர் கொண்ட பார்வையும் புன்சிரிப்பும் அமைதியான பேச்சும் தன்னடக்கமும் வேறொவரிடமும் கண்டுக்கொள்ள முடியாதவை. அதன் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் வடமராட்சி மாணவர் ஒன்று கூடலில் பேராசிரியர் நந்தகுமார் அவர்களின் பாரியார் என்பதை அறிந்து கொண்டேன். தான் ஒரு அதிபர் என்றோ பேராசிரியரின் மனைவி என்றோ எவ்வித கர்வமும் இல்லாத பால் மனம் படைத்த பண்பும் அன்பும் மிக்கவர் ராஜேஸ் அன்ரி. மதிப்புக்குரிய மரியாதைக்குரிய அவரை மீண்டும் சந்திப்போமென்று நான் எதிர்பார்க்கவில்லை. அதுவும் relations ஆக.

கண்டி இந்து கலாச்சார மண்டபத்தில் எனது திருமண வைபவத்தில் என் மனைவியின் சொந்தக்காரராக எங்களை ஆசீர்வதித்துச் சென்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது எனக்கு மிகவும் பெருமையாயிருந்தது. இப்படிப்பட்ட நல்ல உள்ளங்களின் அன்பும் ஆசீர்வாதமும் கிடைக்க கடவுள் கிருபை வேண்டும்.

பேராதனை குறிஞ்சிக் குமரன் கிருபையால் மீண்டும் மீண்டும் பேராசிரியர் நந்தகுமார் அவர்களின் வீட்டில் சந்திக்க நேரிடுகின்றது. அப்போதெல்லாம் எனக்கு மிகவும் பிடித்த வேர்க்கொம்பு தேனீருடன் ராஜேஸ் அன்றி அதே புன்சிரிப்பு மலர்ந்த முகத்துடன் உபசரிப்பார். சாஸ்திர சம்பிரதாயங்களில் மிகவும் ஈடுபாடுள்ள அவர் பிரதோசம், நவராத்திரி விரதம் என்பவற்றைக் கடைப்பிடித்து வந்ததோடு மட்டுமல்லாது அவற்றின் சிறப்புக்களை மற்றோருக்கும் கூறி வந்துள்ளார். அதேபோல நாம் கூறுவதையும் கூர்மையாகக் கவனித்து ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவமிக்கவர். ''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்டிலும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற திருவள்ளுவரின் கூற்றிக்கேற்ப வாழ்ந்து வந்தவர்.

அவர் அண்மைக் காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் மனோ தைரியத்துடன் அதனை எதிர்க்கொண்டு அவரது அன்புக் கணவர் பிள்ளைகளின் அரவணைப்பில் நிறைவான வாழ்வை அனுபவித்து பூவோடும் பொட்டோடும் உலக அன்னையர் தினத்தன்று சுமங்கிலியாக இவ்வுலக வாழ்வை நீத்துக் கொண்டார். இனிவரும் அன்னையர் தினம் யாவும் அவரின் நினைவை எல்லோருக்கும் நினைவூட்டிக் கொள்ளும் என்பது நிச்சயம்.

நானும் எனது குடும்பமும் அவரது இறுதி யாத்திரை வரை கலந்து கொண்ட மன நிம்மதியுடனும் மனத் தைரியத்துடனும் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் அனைவருக்கும் மனோபலத்தையளிக்க குறிஞ்சிக் குமரன் பாதார விந்தங்களையும் அவரின் குல தெய்வம் ஆகிய வியாபாரி மூலை ஞான வைரவருடன் இஷ்ட தெய்வங்களான அல்வாய் வேவுலந்த முத்துமாரியம்மன், வியாபாரி மூலை ஆதி சிவ வீரபத்திரர் மற்றும் இன்பசிட்டி கற்பூர விநாயகரையும் வேண்டுகின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும்.*

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*
*ஆத்ம சாந்தி பவ*

சி. கருணாகரன்
சமாதான நீதவான் (அகில இலங்கை)
Bsc (Eng) AMIE(S.L) Civil Engineer
Heerasagala Road, Kandy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத்தின் குல விளக்காகத் திகழ்ந்து எம்மையெல்லாம் அரவணைத்து 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி. ராஜேஸ்வரி நந்தகுமார் அவர்களின் மறைவை கேள்வியுற்று பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலமாகவும் சமூக வலைத் தளங்கள் மூலமாகவும் தங்கள் அனுதாபங்களை தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், மரணச் சடங்கிலும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், சபீண்டீகரணக் கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எம் மனங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறோம்.

இந்து மக்களுக்கு பல வழிகளிலும் பயன்தரக் கூடிய இவ் அரிய நூலினை வெளியிட முழு மூச்சுடன் செயற்பட்ட பெருமை பேராசிரியர் வை. நந்தகுமார் அவர்களுக்கே உரியதாகும். இம் மலரினை அழகுற அச்சுப் பிழையின்றி வடிவமைத்தவருக்கும் அதை சரியான நேரத்தில் அச்சிட்டு தந்த பிரின்டர்ஸ் நிறுவனத்திற்கும் எமது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்,



இல 4, கலஹா ரோட்,
ஹிந்தகல,
பேராதனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி




குறிப்பு : ● அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஒன்றே குலம், ஒருவனே தேவன்...”



பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமுதாயத்திற்கு வேண்டிய நல்லிணக்க செய்திகள் திருமந்திரத்தில் அழகாக விளக்கியவர் திருமூலர். ஆன்மிகம், மருத்துவம், விஞ்ஞானம், தத்துவம், உளவியல் என திருமூலர் தொடாத துறைகளே இல்லை. திருமூலர் இயற்றிய மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திர பாடல்களே இதற்கு சான்றாகும்.

விண்வெளியையும், கோள்களையும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் நவீன வாழ்க்கை முறையில் முதலில் தன்னை யார் என்பதை அறிந்த கொள்ள யாரும் முற்படுவதில்லை. எனவே முதலில் உன்னை நீயே அறிந்துகொள், அப்படி அறிந்துகொண்டால், அனைத்தும் அறியலாம் என்கிறார் திருமூலர்.

என்னை அறிந்திலேன்
இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும்
அறிந்திலேன் - திருமந்திரம் 2366

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org